

# தொடரட்டும் சாதனைப் பயணம்!

**உ**லகின் புகழ்பெற்ற விஞ்ஞானிகளில் ஒருவரான ஆல்பர்ட் ஐன்ஸ்டீன் கற்றல் குறைபாட்டால் பாதிக்கப் பட்டிருந்தார். ஆனாலும் அவர் சார்புக் கோட்பாடு (Theory of Relativity) என்னும் தத்துவத்தைக் கண்டுபிடித்தார். உலகம் தொடர்பான பொதுமக்களின் பார்வை மற்றும் புரிதலில் இந்த தத்துவம் தான் மிகப்பெரிய தாக்கத்தை ஏற்படுத்தியது. தாமஸ் ஆல்வா எடிசனுக்கு காது கேட்க முடியாது. ஆனால், அவர் கண்டுபிடித்த மின்சாரத்துக்கு தான் இப்போது நாம் வாழும் நவீன உலகத்தை உருவாக்கியதில் மற்ற அனைத்து கண்டுபிடிப்புகளையும் விட அதிக பங்கு உண்டு.

லூயிஸ் பிரெய்லிக்கு பார்வைக் குறைபாடு உண்டு. ஆனால், தன்னைப் போன்ற மக்கள் படிக்க வேண்டும் என்பதற்காக அவர் உருவாக்கிய பிரெய்லி எழுத்து முறையை பயன்படுத்தி உலகிலுள்ள பார்வைத்திறன் குறைபாடு கொண்ட மக்களால் எழுதவும், படிக்கவும் முடிகிறது. ஒருவரின் திறமைக்கு அவரது குறைகள் தடையல்ல என்பதை நிரூபித்த பெருமை இவர்களையே சாரும்.

உடல்ரீதியாகவோ, மன ரீதியாகவோ ஏதேனும் குறை இருந்தால் அது சம்பந்தப்பட்டவருக்கு மட்டுமின்றி, அவரது குடும்பத்திற்கும் கிடைத்த சாபமாகவே ஒரு காலத்தில் பார்க்கப்பட்டது. ஒருவர் கடந்த பிறவியில் செய்த பாவத்திற்கு இந்த பிறவியில் கடவுள் அளித்த தண்டனையாகவே அதை கருதினார்கள். ஆனால், அந்த தவறான புரிதல்கள் மக்கள் மனதிலிருந்து நீக்க நவீன கால அறிவியல் உதவி செய்திருக்கிறது. உடல் ஊனம் என்பது குணப்படுத்தக்கூடிய மருத்துவ நிலை என்பது இப்போது நிரூபிக்கப்பட்டிருகிறது. மாற்றுத்திறன் கொண்டவர்களை இனியும் சமூகத்தில் புறக்கணிக்கப்பட்டவர்களாக பார்க்க முடியாது. உடல் ஊனத்தை வென்றெடுப்பதற்கான கருவிகளை அறிவியலும், கண்டுபிடிப்புகளும் நமக்கு வழங்கியுள்ளன. மாற்றுத்திறனாளிகளின் வாழ்க்கையை எளிமையாக்க வந்த வரவுகளுக்கு சில உதாரணங்களாக பிரெய்லி எழுத்து முறை, ஜெய்ப்பூர் செயற்கைக்கால் ஆகியவற்றை குறிப்பிடலாம். மன நலக் குறைவால் பாதிக்கப்பட்டவர்களைக் கூட சமுதாயம் இப்போது அரவணைக்கத் தொடங்கியிருக்கிறது. அவர்களின் தேவைகளை புரிந்து கொண்டு நிறைவேற்றுவது, அவர்களுக்கு அங்கீகாரம் அளிப்பது ஆகியவற்றால் அவர்கள் பயன் அடைந்துள்ளனர்.

அவர்களின் கல்வி சார்ந்த சிறப்புத் தேவைகள் குறித்தும் முன்பை விட இப்போது அதிக விழிப்புணர்வு ஏற்பட்டிருக்கிறது. அதுமட்டுமின்றி, மாற்றுத்திறன் கொண்டவர்களை சிறப்புப் பள்ளிகளுக்கு அனுப்பத் தேவை யில்லை. மாறாக வழக்கமான பள்ளிகளிலேயே உள்ளடக்கிய சூழலை உருவாக்கி அங்கேயே மாற்றுத்திறன் கொண்ட மாணவர்களையும் படிக்க வைக்கலாம் என்று கூறும் அளவுக்கு மக்களிடையே விழிப்புணர்வு ஏற்பட்டிருக்கிறது. எனினும், சமூக மற்றும் கலாச்சார ஒருங்கிணைப்பு என்பது இன்னும் ஒரு பிரச்சினையாகவே இருக்கிறது. இந்த நிலைமையும் விரைவில் மாறும். மாற்றுத்திறன் கொண்டவர்களும் நமது சமுதாயம் மற்றும் நாட்டின் ஒருங்கிணைந்த மற்றும் முக்கிய அங்கமாக கருதப்படும் நிலை விரைவில் ஏற்படும்.

தேசத்தை கட்டி எழுப்பும் பணியில் பங்கேற்பதற்கான அதிகாரத்தை மாற்றுத்திறனாளிகளுக்கு தகவல் மற்றும் தொலைத்தொடர்புத்துறை வழங்கியுள்ளது. மாற்றுத்திறனாளிகளுக்கு தடையற்ற சூழலை ஏற்படுத்துவதற்காகவும், அவர்கள் சுதந்திரமாக வாழ்வதை உறுதி செய்வதற்காகவும் அவர்கள் தகவல் மற்றும் தொலைத்தொடர்பு தொழில்நுட்பத்தை எளிதாக அணுகுவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

இந்தியாவில் உள்ள நிறுவனங்களால் பணிக்கு தேர்வு செய்யப்படும் மாற்றுத்திறனாளிகளின் எண்ணிக்கை அண்மைக் காலமாக அதிகரித்து வருகிறது. இதன் மூலம் மாற்றுத்திறனாளிகள் பொருளாதார அடிப்படையில் தற்சார்பு பெற்றவர்களாக மாறி வருகின்றனர். மாற்றுத்திறனாளிகள் அதிக திறன் கொண்டவர்களாக இருப்பதால் அவர்கள் மீதான நிறுவனங்களின் நம்பிக்கை அதிகரித்திருக்கிறது. மாற்றுத்திறனாளிகளுக்கு கல்வி மற்றும் பயிற்சி உதவித் தொகைகளை வழங்கவும், புதுமையான எண்ணம் கொண்ட மாற்றுத்திறனாளிகள் அவற்றை செயல்படுத்துவதற்காக நிதி வழங்கவும் அரசு ஏற்பாடு செய்துள்ளது. அதன் பயனாக அரசு வேலைவாய்ப்பு, பொழுதுபோக்குத் துறை, விளையாட்டு என அனைத்துத் துறைகளிலும் மாற்றுத்திறனாளிகள் நிறைந்து இருப்பதுடன், சாதனைகளையும் படைத்து வருகின்றனர். அவர்களின் சாதனைப் பயணம் தொடரட்டும்!

**– முதன்மை ஆசிரியர்**

# திட்டம்

## மாதஇதழ்

மலர்: 47
இதழ்: 9

மே 2016
வைஷாக – ஜேஷ்ட 1938

முதன்மை ஆசிரியர்
**தீபிகா கச்சல்**
முதுநிலை ஆசிரியர்
**ஆ. இளங்கோவன்**

கட்டுரையாளர்களின் கருத்துகள் அவர்களுடையதே. எல்லாக் கருத்துகளும் அரசின் கருத்துகளை ஒட்டி இருக்கும் என்று கூற இயலாது.

திட்டமிடுதல் மற்றும் நாட்டின் வளர்ச்சியைப் பற்றியது இந்த ஏடு. மொத்தம் 13 மொழிகளில் இது வெளியாகிறது. திட்டத்தினால் ஏற்படும் நன்மைகளை இது விளக்குகிறது என்றாலும் அரசின் கருத்துக்களை மட்டுமே தெரிவிப்பது இதன் நோக்கமல்ல.

**சந்தா விவரம்**

| | | |
|---|---|---|
| தனிப்பிரதி | : | ரூ. **22.00** |
| ஓர் ஆண்டு | : | ரூ. **230.00** |
| இரண்டாண்டு | : | ரூ. **430.00** |
| மூன்றாண்டு | : | ரூ. **610.00** |

சந்தா (DD அல்லது MO) அனுப்ப வேண்டிய முகவரி:

உதவி இயக்குநர்
**திட்டம்**
சாஸ்திரி பவன், ஹாடோஸ் சாலை
சென்னை – 600 006.
தொலைபேசி: 2827 2382

❖ மாற்றுத்திறனாளிகள்: கல்வி உரிமை மற்றும் வாய்ப்புகளை அதிகரித்தல்
– இந்துமதி ராவ்

❖ இந்தியாவில் மாற்றுத் திறனாளிகளின் சுகாதாரம் மற்றும் பாதுகாப்பு: இனி பயணிக்க வேண்டிய பாதை
– சஷி ராணி

❖ மாற்றுத்திறனாளிகளுக்கு திறன் அளித்தல்
– சாந்தி ராகவன்

❖ கல்விக்கான சூழலிட வடிவமைப்பின் மூலமாக சமூக நடுநிலைமையும் அனைவரையும் உள்ளடக்குதலும்
– ரச்னா காரெ

❖ மாற்றுத் திறனாளிகளுக்கான நிதி உள்ளடக்கம்
– பி.சி. தாஸ்

❖ மாற்றுத்திறனாளிகளுக்கான சமூக உள்ளடக்கம்: பிரச்சனைகளும் தீர்வுகளும்
– டாக்டர் சந்தியா லிமாயெ

❖ பார்வைத் திறன்
– அமித்சிங்

❖ மாற்றுத் திறனாளிகள் அடையத்தக்க போக்குவரத்து: தற்போதைய நிலவரமும் நம் முன் உள்ள வழியும்
– டாக்டர் தேவர்ஷி சௌராசியா

❖ செயல்புரிவதற்கு இடையூறு செய்யும் குறைபாடு
– அருணிமாடே

❖ மாற்றுத்திறன் மற்றும் நலனுக்கு அப்பால் சலுகைகளை பெறுதல்
– ஷிவானி குப்தா

அடுத்த இதழில்....
**‘இந்தியாவின் வெற்றிநடை’** மற்றும் **‘யோகா’** பற்றிய கட்டுரைகள்

# மாற்றுத்திறனாளிகள்: கல்வி உரிமை மற்றும் வாய்ப்புகளை அதிகரித்தல்

– இந்துமதி ராவ்

இந்திய மக்கட்தொகையில் உள்ள மாற்றுத் திறனாளிகளின் எண்ணிக்கை 2001–2011 காலக் கட்டத்தில் 22.4 சதவிகிதம் உயர்ந்துள்ளது. 2001ல் 2.19 கோடியாக இருந்த மாற்றுத் திறனாளிகளின் எண்ணிக்கை 2011ல் 2.68 கோடியாக உயர்ந்தது. அதில் 1.5 கோடி ஆண்களும், 1.18 கோடி பெண்களும் இருந்தனர். மாற்றுத் திறனாளிகளின் வளர்ச்சி விகிதம் நகர்ப்புறங்களிலும், நகர்ப்புறத்திலுள்ள பெண்கள் இடையேயும் அதிகமாக காணப் பட்டது. பத்தாண்டுகளில் நகர்ப்புற பகுதி களில் இவர்களின் வளர்ச்சி விகிதம் 48.2 சதவிகிதமாகவும் நகர்ப்புற பெண்களின் வளர்ச்சி விகிதம் 55 சதவிகிதமாகவும் இருந்தது. ஷெட்யூல்டு வகுப்பினர் இடையே இது 2.45 சதவிகிதமாக இருந்தது. (மக்கட்தொகை கணக்கெடுப்பு 2011).

## இப்போதைய நிலைமை என்ன?

2011 மக்கட்தொகை கணக்கெடுப்பில் காணப்பட்ட மாற்றுத்திறனாளிகளின் மொத்த எண்ணிக்கையையும் சிறப்புத் தேவைகள் கொண்ட குழந்தைகள் ஆரம்ப மற்றும் மேல்நிலை பள்ளிகளில் படிக்கும் குழந்தை களின் எண்ணிக்கையையும் ஒப்பிட்டுப் பார்த் தால் இது போன்ற குழந்தைகளின் கல்வித் தேவையை நிறைவு செய்வதில் இந்தியா பயணிக்க வேண்டிய தொலைவு மிகவும் அதிகமாக உள்ளதை காணலாம். 6 வயதுக் குட்பட்ட மற்றும் உயர் கல்வியில் உள்ள சிறப்பு தேவைகள் கொண்ட மாற்றுத் திற னாளி குழந்தைகளைப் பற்றிய விவரம் தெரிய வில்லை. இவர்களுக்காக திட்டமிடுவதில் இது ஒரு பெரிய இடைஞ்சலாக உள்ளது.

1. எல்லோருக்கும் கல்வி இயக்கத்தின், அனைவரையும் உள்ளடக்கிய கல்வி திட்டத்தில் 10.71 லட்சம் சிறப்புத் தேவைகள் கொண்ட குழந்தைகள் சேர்க்கப்பட்டுள்ளனர். (ஆதாரம்: கல்விக்கான ஒருங்கிணைக்கப்பட்ட மாவட்டவாரியான தகவல் முறை (UDISE) 2013–14)

2. மேல்நிலைப் பள்ளிகளில் மாற்றுத் திறனாளி குழந்தைகளுக்கு அனை வரையும் உள்ளடக்கிய கல்வி திட்டத் தில் சிறப்பு தேவைகள் கொண்ட குழந்தைகளுக்கு 2 லட்சம் குழந்தைகள் சேர்ப்பு.

3. சிறப்பு தேவைகள் கொண்ட குழந்தை கள் சுமார் 1 லட்சம் பேர் 977 சிறப்பு பள்ளிகளில் கல்வி. (ஒரு தன்னார்வ நிறுவன ஆய்வு)

2011 மக்கட்தொகை கணக்கெடுப்பின்படி 29 வயதுக்கு குறைவான கல்வி வாய்ப்பு தேவைப் படும் சிறப்பு தேவைகள் உள்ளவர்களின் எண்ணிக்கை 1.23 கோடியாக இருந்தது. இதில் 53.4 லட்சம் பெண் குழந்தைகளும், மகளிரும் சிறப்பு தேவைகள் உடையவர்களாக இருந்தார்கள். தற்போதைய ஒரு குறைந்தபட்ச கணிப்பின்படி சிறப்பு தேவைகள் உள்ள சுமார் 20 லட்சம் பேர் ஆரம்ப, நடுநிலை மற்றும் சிறப்பு பள்ளிகளில் படிக்கிறார்கள். நமக்கு இப்போதுள்ள சவால் பலவகையான சிறப்பு தேவைகளைக் கொண்ட குழந்தைகள் மற்றும் மற்றவர்களுக்கு எப்படி கல்வி வாய்ப்பு அளிப்பது என்பதாகும்.

**இந்துமதி ராவ்**, வட்டார ஆலோசகர், உறுப்பினர், கல்விக்கான மத்திய ஆலோசனை வாரியம்.

அரசியலமைப்பு சட்டத்தில் உறுதி செய்துள்ளதுபடி 2005முதல் கல்விக்கான உரிமைச்சட்டம் மற்றும் எல்லாக் குழந்தை களுக்கும்கட்டாயமற்றும்இலவசகல்விபோன்ற திட்டங்கள் இருந்தும்கூட சிறப்பு தேவைகள் உள்ள குழந்தைகள் மற்றும் மற்றவர்களும் மொத்தத்தில் 20 சதவிகிதத்தினர்தான் கல்வி பெறுகிறார்கள் என்பதில் விவாதம் தேவையற்றதாகும். மாற்று திறனாளிகளின் உரிமைகள் குறித்த பலதரப்பட்ட பன்னாட்டு முழக்கங்களிலும், ஒப்பந்தங்களிலும் இந்தியா கையெழுத்திட்டுள்ளது. 2006ல் மாற்றுத் திறனாளிகளுக்கான உலக நாடுகள் மாநாட்டு அறிக்கையில் இந்தியா கையெழுத்திட்டுள்ளது. மாற்றுத் திறனாளிகளுக்கான உரிமைகளுக் கான கமிட்டியின் 24வது ஷரத்தின்படி கல்வித் துறையில் முக்கியத்துவம் அளிக்கப்பட்டு அரசுகளுக்கு இரண்டு பொறுப்புக்கள் அளிக்கப்பட்டுள்ளன:

1. மாற்றுத் திறனாளி குழந்தைகளுக்கும் இளைஞர்களுக்கும் மற்றவர்களைப் போலவே சமமான கல்வி அளிக்க வேண்டும்.

2. இப்படி வழங்கப்படும் கல்வி எல்லோ ரையும் உள்ளடக்கியதாக இருக்க வேண்டும்.

எந்த ஒரு பாகுபாடும் இன்றி எல்லா குழந்தை களுக்கும் கல்வி அளிக்கப்பட வேண்டும் என்ற இலக்கை இந்தியா கொண்டிருந்தாலும் இப்பொழுதுள்ள இழிவான நிலைக்கு பல காரணங்களை நாம் கூற முடியும். ஆனால் பொதுவாக மாற்றுத்திறனாளி குழந்தை களுக்கும் அதில் குறிப்பாக பெண் குழந்தை களுக்கு அவர்களுடைய குறைபாடுகள் எந்த வகையிலும் ஒரு தடையாக இல்லாத வகை யிலும் கல்வி கற்கும் வாய்ப்பும் சுமுகமான சூழ்நிலையும் இருந்தால் அன்றி மாற்றுத் திறனாளி குழந்தைகளுக்கு கல்வி அளிக்கும் உறுதி மொழி மட்டும் போதுமானதாக இருக்காது. எல்லோரையும் உள்ளடக்கிய கல்வி என்பது பற்றிய கொள்கை தெளிவாக இருக்க வேண்டும். அது, அரசின் பொதுவான நோக்கம், முனைப்பு, கொள்கைகள், செயல் திட்டங்கள் சட்ட நிலைப்பாடு மற்றும் நிதி ஒதுக்கீடுகளில் பிரதிபலிக்க வேண்டும். கடந்த காலங்களில் சிறப்பு தேவைகள் கொண்ட குழந்தைகளுக்கான கல்வி நம்முடைய பொதுக் கல்வி முறையில் ஒரு அங்கமாக இல்லா திருந்ததை பார்த்திருக்கிறோம். நம்முடைய கல்வி அமைப்பு எல்லோரையும் உள்ளடக்கிய கல்விக்கு ஏற்ற பயிற்சியை பள்ளிகளுக்கும் பல்கலைக்கழகங்களுக்கும் வழங்கவில்லை.

## இந்தியாவின் சிறப்பு தேவைகள் கொண்ட குழந்தைகள் எல்லோரையும் உள்ளடக்கிய கல்வி வழங்குவதில் 2015ஆம் ஆண்டின் தேசிய கல்விக் கொள்கைக்கு செயல் திறமை உள்ளதா?

கல்வி சார்ந்த ஒரு முழுமையான கொள்கை என்பது அரசியல் எண்ணங்களையும், கனவு களையும் செயல்வடிவம் கொடுக்கக்கூடிய ஒரு முக்கியமான முயற்சியாகும். நலிவடைந்த மக்களை கல்வி ஓட்டத்திலும் வளர்ச்சி பணிகளிலும் ஈடுபடுத்துவதற்கும் அனை வரையும் உள்ளடக்குவதற்கும் தடைகளாக உள்ள சமுதாய, பொருளாதார, பண்பாடு, அரசியல், நிர்வாக தடைகளை கண்டறிந்து முறையாக நீக்க வேண்டும்.

எல்லோரையும் உள்ளடக்கிய கல்வி என் பதை நாம் 2015 ஆண்டிற்கான தேசிய கல்வி கொள்கையில் பார்க்க முடியும். இந்தியா வில் எல்லோரையும் உள்ளடக்கிய கல்வி முறையை ஏற்படுத்த ஷெட்யூல்டு வகுப்பினர், ஷெட்யூல்டு பழங்குடியினர், குறைபாடுகள் உள்ள குழந்தைகள், இளம் வயதினர் மற்றும் மிகவும் ஏழ்மையான மற்றும் சவால்கள் நிறைந்த சூழ்நிலையில் வாழும் குழந்தைகளின் பலதரப்பட்ட தேவைகளை உள்ளடக்கியதாகும். இந்த தேசிய கல்விக் கொள்கை இந்தியாவின் முதன்முறையாக இந்தியா பங்குபெற்று கையெழுத்திட்டுள்ள உலகளாவிய எல்லோரையும் உள்ளடக்கிய கல்விக்கான கவலைப்பாடுகளையும், உறுதி களையும் பிரதிபலிக்கிறது.

## சிறப்பு தேவைகள் குழந்தைகள் அல்லது நபர்கள் கல்வி, முதன்மை நீரோட்டத்தி

**லிருந்து எதனால், எவைகளினால் விலக்கப் பட்டிருக்கிறார்கள்?**

1. மாற்றுத்திறனாளி குழந்தைகள், இளை ஞர்கள் ஆகியோர் கல்வி முதன்மை நீரோட்டத்தில் இணைக்கப்படாத வரையில் அனைவருக்கும் கல்வி என்ற கொள்கையை அடைய முடியாது.

2. எல்லோருக்கும் கல்வி என்பதை அடை வதற்கான செயல் வடிவம் மாற்றுத் திறனாளி குழந்தைகளையும், இளைஞர் களையும் புறக்கணிக்கிறது.

3. அனைவருக்கும் கல்வி அளிப்பதில், திட்டமிடுதல், நிர்வாகம், கண்காணிப்பு மற்றும் செயலாக்க பணிகளில் உள்ள இடர்பாடுகளை கண்டறிந்து களை வதில் தோல்வி.

4. மாற்றுத்திறன் கொண்ட குழந்தைகள் மற்றும் இளைஞர்கள் எல்லோரையும் உள்ளடக்கிய கல்வி திட்டத்தில் ஷெட் யூல்டு வகுப்பினர், ஷெட்யூல்டு பழங்குடி வகுப்பினர், சிறுபான்மையினர், ஆண் பெண் பாகுபாடு போன்ற பலவகை யான உட் பிரச்சினைகள் சமுதாயத்தில் இருப்பதை முழுமையாக கண்டு கொள்ள முடியாமை.

5. மாற்றுத்திறன் என்பது மாநிலங்களின் கீழ் வரும் ஒரு பிரிவாகவும், கல்வி என்பது, மத்திய மாநில அரசுகள் இருவரின் கீழ் வரும் ஒரு பிரிவாகவும் இருப்பதால் மாற்றுத்திறன் கொண்ட குழந்தைகள் மற்றும் இளைஞர்களுக்கு கல்வி வசதி அளிப்பதில் பிரச்சினைகள் ஏற்படுகின்றன.

6. மாற்றுத்திறனாளிகளுக்கு கல்வி அளிப் பது இரு அமைச்சகங்களின் பொறுப் பாக உள்ளது. எல்லோரையும் உள்ள டக்கிய கல்வி என்பது மனித வள மேம்பாட்டு அமைச்சகத்தின் கீழும், சிறப்புக் கல்வி என்பது சமூக நீதி மற்றும் அதிகாரமளித்தல் அமைச் சகத்தின் கீழும் வருகின்றன. இதைப் போலவே, மாநிலங்களின் அளவிலும் இதனால், சிறப்புத் தேவைகள் கொண்ட குழந்தைகளுக்கு கல்வி அளிப்பதில் முரண்பாடான கொள்கைகள் மேற் கொள்ளப்படுகின்றன. சிறப்புத் தேவை கள் கொண்ட குழந்தைகளை ஆரம்ப காலத்திலேயே கல்வியில் ஈடுபடுத்த இந்தியாவில் சரியான கொள்கை இல்லை. சமுதாய நலத்திட்டங்களின் முதன்மையான ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சி திட்டத்தில் சிறப்பு தேவைகள் கொண்ட குழந்தை களுக்கு அங்கண்வாடி மையங்களில் எல்லோரையும் உள்ளடக்கிய ஆரம்ப குழந்தை வளர்ச்சி திட்டங்கள் செயல் படுத்தப்படுவதில்லை.

7. எல்லோருக்கும் பயனளிக்கக்கூடிய எல்லோரையும் உள்ளடக்கிய கல்வி என்பது ஆரம்ப நிலையிலேயே எல்லோருக்கும் கல்வி வழங்கக்கூடிய ஒரு சாத்தியக் கூறாக கருதப்படாமல் இது ஒரு கூடுதலான பணியாகவே கருதப்படுகிறது.

8. மாற்றுத் திறனாளி பெண் குழந்தைகள், மகளிர் ஆகியோரின் புனரமைப்பு திட்டங்கள் செயல்படுத்துவதில் சமூக பண்பாட்டு நிலைமைகளுக்கு ஏற்ப இருக்க வேண்டும். மாற்றுத்திறன் கொண்ட மகளிரின் தேவைகளையும், உரிமைகளையும் சார்ந்த மிகப்பெரிய விழிப்புணர்வு திட்டம் அவசியம். இன் றைய நவீன உலகில் அவர்கள் மிகவும் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். இன்றைய உலகம் அவர்களை அவர்களுடைய இயல்பான திறமைகளுக்கு மதிப்பு அளிக்காமல், ஊடகங்களிலும் அழகியல் துறைகளில் காணப்படும் பெண்களை அடையாளமாகக் கொண்டு காணப் படுகிறார்கள்.

**திட்டமிடுவதற்கு ஏற்ப இந்தியாவில் குறை பாடுகள் சார்ந்த தகவல்கள் உள்ளனவா?**

மேற்கண்ட கேள்விக்கு பதில் குறைபாடுகள்

சார்ந்த தகவல்களில் உள்ள குழப்பத்தைப் போலவே உள்ளது. 2001 மக்கட்தொகை கணக்கெடுப்பின்படி மொத்தமுள்ள மாற்றுத் திறனாளிகளின் எண்ணிக்கையில் 75 சதவி கிதத்தினர் கிராமப்புற பகுதியிலும் 25 சதவிகிதத்தினர் மட்டுமே நகர்ப்புறங்களிலும் வசித்து வந்தனர். மக்கட்தொகையின் மொத்த எண்ணிக்கையில் 2.13 சதவிகிதத்தினருக்கு ஏதாவது ஒரு குறைபாடு இருந்தது. கிராமப் புறங்களில் குறைபாடு உள்ளவர்களின் சதவிகிதம் சற்று அதிகமாகவும் (2.21%) நகர்ப்புறப்பகுதிகளில் குறைவாகவும் (1.93%) இருந்தது. ஆண்களில் இந்தக் குறைபாடுகள் அதிகமாகவும் (2.37%) பெண்களில் சற்றுக் குறைவாகவும் (1.87%). மொத்த மக்கட் தொகையில் ஷெட்யூல்டு வகுப்பினரின் பங்கு சிறிது அதிகமாக (2.23%) இருந்தது. ஷெட்யூல்டு பழங்குடி மக்களிடையே இது சற்றுக் குறைவாக இருந்தது (1.92%).

### 2001ல் 2.1 கோடியாக இருந்த எண்ணிக்கை அடுத்த பத்து ஆண்டுகளில் 2.68 கோடியாக உயர்ந்துள்ளது - 2.13% லிருந்து 2.21%

தற்போதைய மக்கள் கணக்கெடுப்பின்படி நாட்டில் மாற்றுத் திறனாளிகளின் எண்ணிக்கை பத்து ஆண்டுகளில் ஒரு சிறிது அளவுதான், அதாவது 2001ல் 2,19,00,000லிருந்து 2,68,00,000ஆக உயர்ந்துள்ளது. சதவிகிதக் கணக்கில் அது 2.13லிருந்து 2.21ஆக உயர்ந் துள்ளதை மக்கள் தொகை கணக்கெடுப்பு ரெஜிஸ்ட்ரார் ஜெனரலின் 2011க்கான மக்கள் கணக்கெடுப்பு தகவல்கள் கூறுகின்றன.

நாட்டில் உடல் ஊனமுற்றவர்களின் தொகையில் ஆண்கள் 1,49,00,000ஆகவும் பெண்கள் 1,18,00,000ஆகவும் உள்ளனர். இதில் கிராமப்பகுதிகளில் 1,18,00,000 மக்களும், நகர்ப் புறங்களில் 81 லட்சம் மக்கள் மட்டுமே உள் ளனர். சதவிகிதக் கணக்கில் குறைபாடுகள் உள்ள ஆண்களின் எண்ணிக்கை 2.41, பெண் கள் 2.01.

மாற்றுத் திறனாளிகளுக்கான வேலை வாய்ப்பு, கிராமப்புற அல்லது நகர்ப்புற அமைப்புகளுக்கு ஏற்பவும் ஆண்கள், பெண் கள் எனவும் அவர்களின் கல்வி மற்றும் அவர்களின் குறிப்பிட்ட உடல் ஊனத்திற்கு ஏற்ற வகையிலும் மாறுபடும். 2011 இந்திய மக்கட்தொகை கணக்கெடுப்பின்படி நாட்டில் 68 சதவிகிதத்தினர் கிராமப்புறங்களில் வாழ் கின்றனர். ஆகவே, மொத்த மக்கட் தொகையில் கிராமப் புறங்களில் மாற்றுத்திறனாளிகளின் எண்ணிக்கை அதிகமாகக் காணப்பட்டு அவர்களுடைய குறைகள் ஏழ்மை காரண மாகவும் போதிய மருத்துவ வசதிகள் இல்லாத தினாலும் மிகையாகக் காணப்படுகின்றன. கிராமப்புறத்திலுள்ள மாற்றுத்திறனாளிகளுக்கு போதிய திறன்களும் சந்தை வாய்ப்புக்களும் குறைவே. மாற்றுத் திறனாளிகளின் கல்வி அறிவும் குறைவே. மக்கட்தொகை கணக் கெடுப்பின்படி மாற்றுத் திறனாளிகளில் 51 சதவிகிதத்தினர் எழுத்தறிவில்லாதவர்கள்; 26 சதவிகிதத்தினர் ஆரம்பக் கல்வி மட்டும் பெறுகிறார்கள்; 6 சதவிகிதத்தினர் நடுநிலைப் பள்ளியாகவும் 13 சதவிகிதத்தினர், மேல்நிலை பள்ளி மற்றும் அதற்கு அதிகமாக கல்வி பெற்றுள்ளனர். (ஆசியா பசிபிக் பகுதிக்கான உலகத் தொழிலாளர் அமைப்பு ஆய்வு பாங்காக்: ILO 2011.

மாற்றுத் திறனாளிகள் பற்றிய தற்போதைய தகவல்கள் அதிக தெளிவு இல்லாமல் மறைக் கப்பட்டிருக்கிறது. மிகப்பெரிய அளவில் மேற்கொள்ளப்படும் மக்கட்தொகை கணக் கெடுப்பில் ஒவ்வொருவரின் உடல் ஊனம் பற்றிய விவரங்களும் அந்த குறிப்பிட்ட ஊனங் களுக்கு வேண்டிய சிறப்புத் தேவைகளும், உதாரணமாக மன வளர்ச்சி, புலன்சார் ஊனங்கள் போன்றவைகள் சிறிய அளவிலோ, பெரிய அளவிலோ இருப்பதை முறையாக பயிற்சி பெற்றவர் கணக்கீடு செய்தால் மட் டுமே அறிந்து கொள்ள முடியுமான தகவல்கள் ஆகும்.

இந்தியாவில் மாற்றுத் திறனாளிகள் அனைவரையும் உள்ளடக்கிய சேவைகள் வழங்க திட்டமிடுவதற்கு ஊனங்கள் பற்றிய பரவலான தகவல்கள் தேவைப்படுகின்றன. தற்போதுள்ள கணக்கெடுப்பு முறைகள் முழுமையாக இல்லாத காரணத்தால் புதிய

உத்திகளை கையாள வேண்டியுள்ளது. நமக்கு தற்போது தேவைப்படும் தகவல்கள் பல தரப்பட்ட ஊனங்கள், சமூக, பொருளாதார, கல்வி மற்றும் பணி செய்யும் தகவல்கள், ஒவ்வொருவரின் பலதரப்பட்ட தேவைகள், அதாவது மறு சீரமைப்பிற்கான தேவைகள், வேலை வாய்ப்பிற்கான தேவைகள், திறன் மேம்பாட்டுத் தேவைகள், கல்வித் தேவைகள் ஆகியன. அப்படிச் செய்தால்தான் மாற்றுத் திறனாளிகளுக்கு சிறந்த திட்டங்களை வடி வமைத்து சமுதாய அளவில் எல்லோரையும் உள்ளடக்கி இப்படிப்பட்ட குழந்தைகள் தங்களுடைய குடும்பத்தில் இருந்து சிதறி, சீரழியாமல் இருக்க முடியும்.

இந்தியாவில் மாற்றுத் திறனாளிகளை சமுதாய அளவிலும், பள்ளி அளவிலும் ஒருங்கிணைந்த குழந்தைகள் மேம்பாட்டு திட்ட அளவிலும் கட்டாயமாக பதிவு செய்யப்பட வேண்டும். கிராம அளவிலான உடல் ஊன பதிவேடு, பள்ளி அளவிலான சிறப்பு தேவைகள் பதிவேடு, வார்டு அளவிலான உடல் ஊன பதிவேடு மற்றும் ஆதார் / குடும்ப அட்டை ஆகியவைகளில் தனிப்பதிவு செய்வதன் மூலம் இதை நாம் செயல்படுத்த முடியும். இப்படி கணிணிமயமாக்கப்பட்ட தகவல்களைக் கொண்டு மக்களுக்கு சிறப்பு அடையாள அட்டைகளை வழங்கி தற்போதுள்ள காகித அடையாள அட்டைகளைத் தடுக்கலாம். சமுதாயம் சார்ந்த மறுவாழ்வு திட்டத்தின் கீழ் கிராமப்புற உடல் ஊன பதிவேடுகள் ஏற்கனவே செயல்முறைப்படுத்தப்பட்டு சமூக நல சேவைகள் வழங்கப்படுகின்றன.

எல்லோரையும் உள்ளடக்கிய சேவைகள் வழங்குவதற்கு உள்ள தடைகளாக பின் வருவனவற்றைக் காணலாம்:

1. மாற்றுத்திறனாளி குழந்தைகள் கல்வித் துறை கண்ணுக்குத் தெரிவதில்லை.
2. இதுபோன்ற குழந்தைகளுக்கு ஆதரவு இல்லை.
3. இந்தக் குழந்தைகளுக்கு ஏற்ற கல்வி அளிப்பதில் ஆசிரியர்களுக்கு பயிற்சியும், அறிவும், தலைமைப் பண்புகளும் இல்லை.
4. மோசமான கல்வி சூழ்நிலை.
5. மாற்றுத் திறனாளி குழந்தைகளின் பெற்றோர்கள், ஆசிரியர்கள், நிர்வாகிகள், திட்டமிடுபவர்கள் ஆகியவர்களுக்கு போதிய அறிவாற்றல் இல்லாமை.
6. கல்வி கட்டமைப்பில் அனைவரையும் இணைப்பதற்கு போதிய ஆளுமை, கொள்கை, திட்டமிடுதல், முதலீடு, செயல்பாடு மற்றும் கண்காணிப்பு இன்மை.
7. எல்லோரையும் உள்ளடக்கிய சேவைகள் வழங்குவதற்கு போதிய பொது மக்கள் ஆதரவு இல்லாமை.
8. போதிய பொறுப்புணர்வும், கண்காணிப்பு முறைகளும் இல்லாமை.

சிறப்பு தேவைகள் கொண்டவர்களுக்கான கல்வி உரிமையில் உள்ள அகன்ற இடைவெளியை போக்குவதற்கு போதிய அரசியல் தலைமை இல்லை.

## 2015 தேசியக் கல்விக் கொள்கை சமூக இடைவெளிகளை குறைக்கும் முயற்சி

2015 தேசியக் கல்விக் கொள்கையில் கீழிருந்து மேல் எழும் வகையாக கருத்து பரிமாற்றங்களும், சமுதாயத்தினர் கொள்கை வடிவமைப்பில் பங்கு கொள்ளும் வகையிலும் நிலைமை உள்ளது. இதுதான் 2015 தேசியக் கல்விக் கொள்கையின் சிறப்பு அம்சமாகும். கொள்கை வடிவமைப்பாளர்கள் சமுதாயத்தின் அடித்தள மக்களின் உண்மை நிலைகளை கண்டறிந்து அதற்கு தகுந்தவாறு கொள்கைகளை வடிவமைக்க இந்த முயற்சிகளில் மக்கள் நேரடியாக பங்கு பெறுவது அவசியமாகும், இதில் 2015 தேசியக் கல்விக் கொள்கை வெற்றி பெற்று எல்லோருக்குமான கல்வியை வழங்க முற்பட்டிருக்கிறது. கல்வி கொள்கை வடிவமைப்பில் எல்லோரையும் உள்ளடக்கும் கொள்கையின் தெளிவை நாம்

காண முடியும். சிறப்புத் தேவைகளுக்கான குழந்தைகளை கல்வியில் ஈடுபடுத்துவது ஒரு தனி முயற்சியாக இதுவரை இருந்தது. 2015 தேசியக் கல்விக் கொள்கையில் கல்வித் துறையின் ஒரு ஒருங்கிணைந்த முறையாக அமைக்கப்பட்டுள்ளது. அதன்படி பலதரப் பட்ட குறைபாடுகள் கொண்ட குழந்தை களும், இளைஞர்களுக்குமான ஆரம்ப கல்வி யிலிருந்து உயர் நிலை கல்வி வரை அவர்களின் தேவைகள் அறிந்து கொள்ளப்பட்டுள்ளன. 2015ல் தேசியக் கல்விக் கொள்கையின்படி ஒவ்வொரு மாணவரின் தனித் தேவையையும் நிறைவு செய்யும் வண்ணம் ஆசிரியருக்கு தகுதிகள் இருக்க வேண்டும். எல்லா மட்டங் களிலும் சிறப்புத் தேவைகள் கொண்ட வர்களை கல்வியில் ஈடுபடுத்த முற்போக்கான அணுகுமுறையைக் கொண்ட கல்வி நிர்வாகி களுக்கு பயிற்சி அளிக்க வேண்டும் என்பதை 2015 தேசியக் கல்விக் கொள்கை புரிந்து கொண்டுள்ளது.

2015 தேசியக் கல்விக் கொள்கை பற்றி வலைதளங்கள் மூலம் நடந்த கருத்துப் பரிமாற் றங்களில் பள்ளிகளில் கணிணி மற்றும் தகவல் தொழில்நுட்பத்தின் மூலம் சிறப்புக் கல்வி அளிக்க வசதிகள் செய்யப்பட வேண்டும் என்பது தெரிவிக்கப்பட்டது. மாற்றுத் திறனாளிகள், அவர்கள் குடும்பத்தினர், இந்தத் துறையில் பணியாற்றும் தன்னார்வ தொண்டு நிறுவனங்கள் ஆகியவை இம்மக்களின் தனித் தேவைகளுக்கு ஏற்ப ஆசிரியர்களுக்கு பயிற்சி அளிக்க வேண்டும் என்று கூறினர்.

குறைபாடுகள் உள்ள குழந்தைகள் மற்றும் இளைஞர்களின் நிலைமையில் நகர்ப்புறங் களுக்கும், கிராமப்புறங்களுக்கும் இடையே உள்ள இடைவெளியை நிறைவு செய்வது ஒரு மிகப்பெரிய சவால் என்று இந்தக் கருத்து பரிமாற்றங்களில் தெரிவிக்கப்பட்டது.

2015 தேசியக் கல்விக் கொள்கையில் மாற்றுத் திறனாளிகளின் எல்லா கவலைகளும் கல்வித் துறையின் எல்லா அம்சங்களுமான பள்ளி சேர்க்கை, அது சார்ந்த கொள்கைகள், ஆசிரியர் பயிற்சி, பாடதிட்ட முன்னேற்றங்கள், கல்வி கற்பிக்கும் முறையில் சீர்திருத்தங்கள், கற்பதற்கு ஏற்ற பொருள்கள், மாணவர் திறன் களை மதிப்பிடுதல், கணிணி மூலம் தொலை தூரக் கல்வி ஆகியவற்றிற்கு முக்கியத்துவம் அளிக்கப்பட்டுள்ளது.

2015 தேசியக் கல்விக் கொள்கையில், முன்பிருந்த மாற்றுத் திறனாளிகள் அணுகு முறை என்பதற்கு பதிலாக எல்லோரையும் உள்ளடக்கிய கல்வி என்ற மாற்றம் கொண்டு வரப்பட்டுள்ளது. இந்தக் கொள்கையில் மாணவர்கள் உடல் ஊனம் வாரியாக பிரிக்கப் பட்டு அதற்கேற்ற அணுகுமுறையிலிருந்து விலகி புதிய சூழ்நிலை உருவாகியுள்ளது. ஒரு குழந்தைக்கு உடல் ஊனம் காரணமாகவும் பாலினம் காரணமாகவும் எந்தவொரு வேறுபாடும் இல்லாமல் அவர்களை ஊக்குவிக்கும் வண்ணமும் ஆதரவோடும் ஒவ்வொரு குழந்தையும் கல்வி பெற வேண்டும் என்ற உரிமை அளிக்கப்பட்டு தெளிவான குறிப்பிட்ட இலக்குகளோடும் கண்காணிக்கப்படக்கூடிய, அளவிடப் படக்கூடிய மற்றும் அடையக்கூடிய நட வடிக்கைகளை வகுத்து, எல்லோரையும் உள்ள டக்கும் அணுகுமுறை உருவாக்கப்பட்டுள்ளது. அடிமட்ட நிலைகளில் 2015 தேசியக் கல்விக் கொள்கை செயல்படுத்தப்படும் போது, ஒரு பெரிய அளவிலான மாற்றம் ஏற்பட வாய்ப் புள்ளது.

ஒரு நல்ல சுமுகமான சூழ்நிலையில் சிறப்புத் தேவைகள் கொண்ட அனைத்து குழந்தைகளும் கல்வி பெறும் வாய்ப்பை ஏற்படுத்தும் வண்ணம், எல்லோரையும் உள்ளடக்கிய கல்வி அளிப்பதற்கு கதவுகளை நாம் திறந்தே வைத்திருக்க உழைப்போம். நிலைமைக்கு ஏற்ற மாறும் கல்வி முறை, கணிணி மூலம் கற்கும் வசதிகள், வலைதளம் சுயமாக கற்கும் முறை, எல்லோருக்கும் கல்வி அளிக்கும் வண்ணம் ஆசிரியர் பயிற்சி திட்டம், தேசிய திறன் மேம்பாட்டுத் திட்டம், தற்போதுள்ள ஆசிரியர்களுக்கு திறன்களை வழங்கும் திட்டம் போன்றவைகளால் இந்தியாவில் எல்லோருக்கும் கல்வி என்பது சாத்தியமாகும். •

# இந்தியாவில் மாற்றுத் திறனாளிகளின் சுகாதாரம் மற்றும் பாதுகாப்பு: இனி பயணிக்க வேண்டிய பாதை

– சஷி ராணி

**உ**லக சுகாதார அமைப்பின் கணிப்பின்படி உலகில் சுமார் 100 கோடி மக்களுக்கும் மேல் ஏதாவது ஒரு உடல் ஊனத்தோடு வாழ்ந்து வருகிறார்கள். அதில் சுமார் 20 கோடிக்கும் மேல் மிகுந்த சிரமத்துடன் வாழ்கிறார்கள். உலகெங்கும் உடல் ஊனத்துடன் வாழும் மக்களின் வாழ்க்கையில் பல இடர்பாடுகள் உள்ளன. நேரடியாகவும், மறைமுகமாகவும் உள்ள தாக்கங்களினால் அவர்கள் சமூக அளவிலும், பொருளாதார நிலையிலும் பல காரணங்களுக்காக பின் தங்கியே உள்ளனர்.

2011ல் உலக சுகாதார அமைப்பு, உடல் ஊனம் சார்ந்த அறிக்கை ஒன்றை வெளியிட்டது. பல முனை அம்சங்கள் கொண்ட அணுகுமுறையில் உடல் ஊனங்களைப் பற்றி அறிந்து கொள்ள இது ஒரு முதல் முயற்சியாக இருந்தது. உடல் ஊனத்தைப் பற்றி விளக்கும் போது மருத்துவ ரிதியில் அறியப்படும் உடல் ஊனத்தைத் தாண்டி இந்த உடல் ஊனம் சார்ந்த உலக அறிக்கை, உடல் ஊனம் பற்றி நாம் விவாதிக்கும் போது மருத்துவ முறையும் சமூக முறையும், வெவ்வேறு பட்டதாகவும், ஒன்றை ஒன்று விலக்கியதாகவும் கருதமுடியாது என்று தெளிவாக கூறியுள்ளது. அந்த கூற்றின்படி உடல் ஊனம் என்பது மிகவும் சிக்கலான பலமுனை அம்சங்கள் கொண்ட ஒரு நிலைமையாகும். அது மிகவும் தீவிரமான ஒன்றாகும். அதனுள் அடிப்படையான உடற்கூறு அம்சங்கள் மட்டுமல்லாமல் அது செயல்படும் விதம் மற்றும் மனிதர்களால் உருவாக்கப்பட்ட சமூக மற்றும் அணுகுமுறை சூழ்நிலைகளை உள்ளடக்கியதாகும். உலக உடல் ஊனம் சார்ந்த அறிக்கையில் ஒருங்கிணைந்த செயல்பாட்டு அணுகுமுறை மேற்கொள்ளப்பட்டு, அது உடல் ஊனம், சுகாதாரம் மற்றும் செயல்பாடு சார்ந்த பன்னாட்டு வழிமுறைகளை பிரதிபலிக்கிறது.

1995ல் இந்தியாவில் மாற்றுத் திறனாளிகள் (சம வாய்ப்புக்கள், உரிமைகள் பாதுகாப்பு மற்றும் முழு பங்காற்றல்) சட்டம் இயற்றப் பட்டு ஆசிய பசிபிக் பகுதிகளில் மாற்றுத் திறனாளிகளுக்கு சமத்துவமும் முழு பங்கேற்பும் அளிக்கும் பிரகடனம் உறுதி செய்யப்பட்டது. அது கண் பார்வை இல்லாமை, குறைந்த பார்வை நிலைமை, தொழுநோய் சிகிச்சை பெற்று குணமடைந்தவர்கள், காது கேட்பதில் குறை உள்ளவர்கள், உடல் அசைவு பாதிக்கப் பட்டவர்கள், மூளை வளர்ச்சிக் குன்றியவர்கள், மூளை பாதிப்பு ஏற்பட்டவர்கள் என்று தெரிவிக்கப்பட்டிருக்கிறது. இது சார்ந்த சான்றிதழ் பெறுபவர்களுக்கு உடல் ஊனமுள்ளவர் என்று தெரிவிக்கப்பட்டு அப்படிப்பட்டவர் மேற்கூறப்பட்ட ஏதாவது ஒரு குறையினால் குறைந்தது 40 சதவிகிதம் பாதிக்கப்பட்டிருக்க வேண்டும் என்று அங்கீகரிக்கப்பட்ட மருத்துவரிடம் சான்றிதழ் பெற்றிருக்க வேண்டும்.

நாட்டில் ஊனமுற்றவர்களின் மொத்த அளவையும், தீவிரத்தையும் கணிப்பதற்கும், தகவல்களை சேகரிப்பதற்கும் எல்லா நிறுவனங்களும் ஒரே சீராக பின்பற்றும் வண்ணம் உடல் ஊனங்களை விளக்க வேண்டியது அவசியமாகும். தற்போது இந்தியாவில் உடல் ஊனம் பற்றிய விளக்கங்களும், சேகரிக்கப்படும் தகவல்களும் அதன் முடிவுகளும் மிகவும் மாறுபட்டவைகளாக உள்ளன. தேவையான சேவைகளை வழங்குவதற்கு உடல் ஊனம் சார்ந்த ஒருமித்த புரிந்தரிதல் வேண்டும். இது இல்லாத நிலையில் உடல் ஊனம் உள்ள பலர் அரசு தகவல் பட்டியலில் சேர்க்கப் படாமல் அவர்களுக்கு உரிய சேவைகள் கிடைப்பதில்லை. உலக நாடுகளில் உடல் ஊனம்சார் மாநாட்டில் தெரிவித்தபடியும் ஒரு குறிப்பிட்ட மருத்துவ நிலைமைப்படியும், அறிகுறியின்படியும் உடல் ஊனத்தை விளக்கக்

**சஷி ராணி,** உதவிப் பேராசிரியர், பல்கலைக்கழகத்தின் சமூகப்பணித் துறை, தில்லி.

கூடாது. ஏனென்றால், உடல் ஊனம் என்பது வலுப்பெற்று வரும் நிலைமையாகும். இந்த அடிப்படையில் 2011 உடல் ஊனம் சார்ந்த உலக அறிக்கை ஒரு பெரிய மாற்றத்தை ஏற் படுத்தி உடல் ஊனம் என்பதை ஒரு குறிப்பிட்ட மருத்துவ நிலைமையாக மட்டும் எடுத்துக் கொள்ளாமல் அந்த உடல் ஊனம் செயல் படுவதையும், அதனால் ஏற்படும் சமுதாய சூழ்நிலைகளையும், மற்ற பாதிப்புகளையும் கணக்கில் கொண்டு விவரிக்கிறது.

## சுகாதாரம் மற்றும் பாதுகாப்பு நிலைமைகளும் பிற பிரச்சினைகளும்

2011 மக்கள் கணக்கெடுப்பின்படி இந்தியா வில் 2 கோடியே 60 லட்சம் மக்களுக்கு மேல் ஏதாவது ஒரு உடல் ஊனக்குறைவால் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள் என்று அறியப் பட்டுள்ளது. இது மொத்த மக்கட் தொகை யில் 2.21 சதவிகிதமாகும். உடல் ஊன முற்றவர்களின் மொத்தத் தொகையில் 1,49,80,000 பேர் ஆண்களாகவும், 1,18,20,000 பேர் பெண்களாகவும் உள்ளனர். நாட்டின் ஒட்டு மொத்தத்திற்கு உடல் ஊனக்குறைவு சதவிகிதம் ஒரு லட்சம் மக்களுக்கு 2,215 ஆக கணக்கிடப்பட்டுள்ளது. இது 2013ல் ஆண்களில் 2,405ஆகவும் பெண்களில் 2013 ஆகவும் உள்ளது.

2001 மக்கள் கணக்கெடுப்பில் விவரித்துள்ள ஐந்து வகையான உடல் ஊனங்களின் அடிப் படையில் எட்டு பிரிவுகளின் கீழ் தகவல்கள் சேர்க்கப்பட்டுள்ளன. இதில் அதிகபட்சமாக உடல் அசைவு குறைபாடுகளில் 20.28 சதவிகிதத்தினர் இருந்தனர். மற்றவர்கள் முறையே: காதுகேட்பதில் குறை, (18.92%), காண்பதில் குறை (18.77%), மற்ற பிற (குறை குறிப்பிடப்படவில்லை) (18.38%), மனநிலை சார்ந்த (8.31%) மற்றும் ஒன்றுக்கும் மேற் பட்ட குறைபாடுகள் உள்ளவர்கள் (7.89%). 2001 மற்றும் 2011 மக்கள் கணக்கெடுப்பு தகவல்கள் அடிப்படையில் பார்க்கும்போது மொத்த மக்கள் தொகையில் பேச்சு மற்றும் காது கேட்பு உடல் ஊனம் அதிகரித்து வருகிறது. அது, 2001ல் 0.16 சதவிகிதமாகவும் 0.12 சதவிகிதமாகவும் இருந்தன. 2011ல் 0.17 சதவிகிதமாகவும் அது 2011ல் பேச்சு குறைபாட்டில் 0.17 சதவிகிதமாகவும் கேட்கும் திறனில் 0.42 சதவிகிதமாகவும் உயர்;ந்தது. 2011 மக்கள் தொகை கணக்கெடுப்பில் அறியப் பட்ட உடல் ஊனமுற்றவர்களின் மொத்த எண்ணிக்கையில் பார்வை சார்ந்த குறைபாடு 48.55லிருந்து 18.77 சதவிகிதமாகவும் உடல் அசைவுசார் குறைபாடு 27.87 சதவிகிதத் திலிருந்து 20.77 சதவிகிதமாகவும் 2001நிலைமை யிலிருந்து பெருமளவு குறைந்துள்ளதை காண் கிறோம். ஆனால், கேட்கும் திறன், பிற திறமைகள் மற்றம் ஒன்றுக்கும் மேற்பட்ட திறன் குறைபாடுகள் அதிகரித்துள்ளன.

2011ல் ஆண்களுக்கும் பெண்களுக்குமான உடல் ஊனங்களை ஒப்பிட்டு பார்க்கும்போது ஆண்களில் பேச்சு மற்றும் மனநலம் சார்ந்த குறைபாடுகள் அதிகரித்திருப்பதையும், காண் பது கேட்பது பிற மற்றும் ஒன்றுக்கும் மேற் பட்ட குறைபாடுகளில் ஆண்களைவிட பெண்கள் அதிகமாக இருப்பது ஒரு பெரிய சுகாதார மற்றும் பாதுகாப்பு சவாலாகவும், கவலையாகவும் உள்ளது. இதை நாம் எல்லா மட்டங்களிலும் சந்திக்க வேண்டும். 2001 மக்கட்தொகை கணக்கெடுப்பின்படி கிராமப்புற, நகர்ப்புற பகுதிகளை ஒப்பிட்டுப் பார்க்கும்போது சுகாதாரம் மற்றும் பாதுகாப்பு வசதிகள் பெருமளவு உள்ள நகர்ப்புற பகுதி களில் காணப்படும் குறைபாடுகள் கிராமப் புறங்களைவிட அதிகமாக இருப்பது கவலை யளிக்கிறது. நகர்ப்புறங்களில் உடல் அசைவுசார் ஊனம் தவிர மற்ற குறைபாடுகள் மிகுந்து காணப்படுவது ஒரு பெரிய சுகாதார மற்றும் பாதுகாப்பு கவலையாக உள்ளது. இதன் தகவல்கள் அட்டவணையில் கொடுக்கப்பட் டுள்ளது.

உடல் ஊனக்குறைபாடு என்பது மிகவும் மாறுபட்டதாகும். ஆகவே, சுகாதார பாது காப்பு பிரச்சினைகளை பட்டியலிடுவது கடின மாகும். மக்கள் கூறும் பிரச்சினைகளை நாம் கூர்ந்து கவனிக்கும் போது அவர்களுடைய சுகாதார நிலைமைகள் சில அவர்களுடைய உடல் ஊனத்தை நேரடியாகக் கொண்ட வையாகவும், பிற பிரச்சினைகள் சமுதாய சூழ்நிலை சார்ந்தவைகளாகவும் காணப்படு

கின்றன. உடல் ஊனமுற்றவர்களுக்கு குறிப்பிட்ட சுகாதார தேவைகள் உள்ளன என்பதை எல்லோரும் ஒப்புக்கொள்வர். ஆனாலும், அவர்களின் ஒட்டுமொத்த சுகாதார மற்றும் பாதுகாப்பு நிலைமைகளை நாம் தொடர்ந்து ஆய்வு செய்ய வேண்டும். உடல் ஊன முற்றவர்களுக்கு தேசிய மற்றும் பன்னாட்டு அமைப்புகளில் அடிப்படை சுகாதார வசதி மற்றும் பாதுகாப்பு வழங்குவதில்; தீவிர நாட்டம் இருந்தாலும் அவர்களின் உண்மையான பூர்த்தி பெறாத சுகாதார மற்றும் பாதுகாப்பு தேவைகளை நாம் சரியாக புரிந்து கொள்ள வேண்டும்.

சுகாதார பிரச்சினைகளை பொறுத்த மட்டில் பொதுவாக மக்கள் தனியார் துறையில் மருத்துவ சேவைகளின் விலை உயர்வினாலும் போதிய அளவு பொது சுகாதார சேவைகள் இல்லாததினாலும் மருத்துவ சேவை பெறுவதில் தடைகளை காண்கிறார்கள். மக்கட்தொகையில் பெரும் பான்மையானவர்கள் தங்கள் சொந்த நிதியிலிருந்துதான் அடிப்படை சுகாதார வசதிகளை பெற வேண்டியுள்ளது. இதுவே, உடல் ஊனமுற்றவர்களின் நிலையில் விலை உயர்ந்த மருத்தவ சேவைகளை பெறுவதில் ஒரு பெரிய பாரமாக மட்டுமல்லாமல் தொடர்ந்து சிகிச்சை பெற வேண்டிய நிலையும் உள்ளது. மற்ற பிற தடைகள் என்ன என்று பார்த்தால் மிகப்பெரிய சவால்களாக உடல் ஊனமுற்றவர்கள் கருதுவது போக்குவரத்து, மருத்துவ சாதனங்கள் இல்லாமை, போதுமான அளவு தண்ணீர் மற்றும் மருத்துவ சேவை துப்புரவு வசதிகள் இல்லாமை, உடல் ஊனமுற்றவர்களுக்கு மருத்துவ சேவை பெறவும், மருந்துகளை பெறவும் தனிப்பகுதி இல்லாமை போன்ற உள் கட்டமைப்பு வசதி குறைவுகளாலும் 1995ல் பொதுப்பணித்துறை சட்டம் இயற்றிய பின்னும் 2004ல் உச்ச நீதிமன்ற தீர்ப்புக்குப்பிறகும் அரசு மற்றும் உள்ளாட்சி அமைப்புகள் பொது கட்டிடங்களில் மாற்றுத் திறனாளிகளுக்கேற்ற சரிவுப் பாதைகள் அமைக்கவழிவகைசெய்யப்பட்டன. ஆனாலும், இவைகளை மாநிலங்களும், உள்ளாட்சி அமைப்புகளும் செயல்படுத்துவதை மாநில அரசுகளும், மத்திய அரசும் கண்காணிக்க வேண்டும். மேலும், மாற்றுத் திறனாளிகள் மருத்துவ சிகிச்சை பெற மருத்துவ பணியாளர்களை அணுகும் போது பலவகையான பழகும் முறைத் தடைகளை எதிர் கொள்கிறார்கள். அவர்களை புறக் கணிப்பதாகவும், அக்கறை இல்லாமல் இருப் பதாகவும் மருத்துவ பணியாளர்கள் மீது குறை கூறுகிறார்கள். இவைகளில் மாற்றுத் திறனாளிகள் உடல் நல சிகிச்சைகள் பெறுவதில் பின்னடைவு ஏற்பட்டு மன உளைச்சலால் மருத்துவத் துறை மீதே நம்பிக்கையின்மை ஏற்படுகிறது. இதனால், பல நிகழ்வுகளில் மாற்றுத் திறனாளிகள் சிகிச்சை பெற முன் வருவதில்லை. இந்த நிகழ்வுகளும் பதிவு செய்யப்படுவதில்லை. இதனால் தனிநபர் ஒருவர் பாதிக்கப்படுவதில்லாமல் அவர்களின் குடும்பமே பாதிக்கப்படுகிறது. இது போலவே, சமூக மற்றும் சூழ்நிலை தடைகள் தொடர்பு உள்ள மன நல பிரச்சினைகளையும் நாம் கவனிக்க வேண்டும்.

இந்தியாவில் பெண்கள் ஏற்கனவே பல நிலைகளில் மறுக்கப்படுகிறார்கள். மருத்துவ சேவைகள் துறையில் இது மிகவும் மோசமாக உள்ளது. எல்லா வயது மாற்றுத் திறனாளி பெண்களும் தந்தையர்களின் மன ஓட்டம் காரணமாக ஒதுக்கப்படுவதும், பாலியல் பாகுபாடுகளையும் எதிர் கொள்கிறார்கள். உடல் ஊனமுற்ற பல பெண்கள் பாலியல் கொடுமைக்கும் மற்ற கொடுமைகளுக்கும் ஆளாகின்றனர். அது மட்டுமில்லாமல் பல கட்டங்களில் அவர்கள் ஒதுக்கப்படுகிறார்கள். மாற்றுத் திறனாளி பெண்களின் பாலியல் மற்றும் மகப்பேறு பிரச்சினைகள் மிக முக்கிய மானது. ஆனால், போதிய அணுகுமுறை இல்லாத காரணத்தினால் அவர்களுக்கு இது சார்ந்த மருத்துவ சேவைகள் கிடைப்பதில்லை. சமூக அளவில் ஒதுக்கப்பட்டுள்ள நிலை யிலும், தங்களுடைய குடும்பங்களின் அணுகு முறைகளாலும் இந்த பிரச்சினைகளை எழுப்பி மருத்துவ சேவைகளை பெற அவர்களால் முடிவதில்லை. திட்டக்கமிஷன் (இப்போது நீதி ஆயோக்) தனது பன்னிரண்டாவது ஐந்தாண்டு திட்டத்தில் மாற்றுத் திறனாளி பெண்களின்

உடல் நலப் பிரச்சினைகளை ஆராய்ந்து அவர்கள் பல வகையில் ஒதுக்கப்படுவதால் அவர்கள் மருத்துவ சிகிச்சை பெறுவதில் உள்ள தடங்கல்கள் அறியப்பட்டுள்ளன. மாற்றுத் திறனாளிகளின் உரிமைகளுக்கான ஐக்கிய நாடுகள் மாநாட்டின் 25வது ஷரத்து உடல் ஊனமுற்றவர்கள் எந்தவொரு பாகுபாடும் இல்லாமல் மிக உயர்ந்த அளவு மருத்துவ வசதிகளை பெற வேண்டும் என்பதை உறுதி செய்துள்ளது. ஆகவே, எந்தவொரு தடங் கலும் இல்லாமல் இவர்களுக்கு மருத்துவ சேவை அளிப்பது ஒவ்வொரு நாட்டின் கடமையாகும். 2011 உடல் ஊனமுற்றவர்களின் உரிமைகளுக்கான உலக அறிக்கையில் உலகள வில் மாற்றுத் திறனாளிகளுக்கு உடல் நல நலிவும், குறைந்த கல்வியும், பொருளாதார நடவடிக்கைகளில் குறைந்த ஈடுபாடும், குறை பாடுகள் இல்லாதவர்களைவிட மிக அதிக மான ஏழ்மையும் இருப்பது சுட்டிக்காட்டப் பட்டுள்ளது. இதற்கு ஒரு காரணம் மாற்றுத் திறனாளிகளுக்கு சுகாதாரம், கல்வி, வேலை வாய்ப்பு, போக்குவரத்து மற்றும் தகவல்கள் பெறுவதில் உள்ள பல தடைகளாகும். இந்த அடிப்படையில் மாற்றுத் திறனாளிகளை பாது காக்க மத்திய அரசு ஒரு தேசிய கொள்கை யையும், திட்டத்தையும் வகுத்தது.

## தேசிய கொள்கையும், திட்டங்களும்

மத்திய அரசின் மாற்றுத் திறனாளிகளுக் கான துறை நாட்டின் ஒவ்வொரு பகுதியிலும் அரசியலமைப்பு சட்டத்தின் ஏழாவது ஷெட்யூலில் காணப்படும் மாநிலங்களுக்கான இரண்டாவது பட்டியல் மற்றும் மத்திய அரசின் மாநிலங்களுக்கான கூட்டு படிவத்தின் மூன்றாவது பட்டியலில் உள்ள தேசிய கொள்கையையும், திட்டங்களையும் கவனிக்கிறது. மற்றத் துறைகளுக்கு ஒதுக்கப் பட்டவைகள் போக மீதமுள்ள, மாற்றுத் திறனாளிகள் மற்றும் வேலையில் ஈடுபடுத்த முடியாதவர்களுக்கான சேவைகள், சமூக பாதுகாப்பு மற்றும் சமூக காப்பீடு திட்டங்களை இந்தத் துறை செயல்படுத்துகிறது. மாற்றுத் திறனாளிகளுக்கான எல்லா வகையான கொள்கைகளையும், திட்டமிடுதல்களையும், அவைகளை ஒருங்கிணைத்து நிர்வகிப்பதிலும் முக்கிய பொறுப்பை மாற்றுத் திறனாளி களுக்கான துறைக்கு இந்திய அரசு ஒப்படைத் துள்ளது. ஆனால், இந்த திட்டங்களின் ஒட்டு மொத்த மேலாண்மை கண்காணிப்பும் அந்தந்த அமைச்சகங்களுக்கும், மாநில அரசுகளுக்கும், யூனியன் பிரதேச நிர்வாகிகளுக்கும் அளிக்கப் பட்டுள்ளது. மாற்றுத் திறனாளிகளின் மறு சீரமைப்பு, அவர்களுக்கு சமூக, கல்வி மற்றும் பொருளாதார அதிகாரமளித்தல் ஆகிய சிறப்பு திட்டங்களில், அதாவது, உபகரணங்கள், உதவித் தொகைகள், தங்கியிருந்து படிக்கும் பள்ளிகள், திறன்சார் பயிற்சிகள், சலுகைக் கடன்கள், சுய வேலைப்பாட்டிற்கு மானியம், மறு சீரமைப்பு அமைக்கும் அலுவல்களுக்கு கல்வியும், பயிற்சியும் அளித்தல் ஆகிய பொறுப்புக்கள் இந்த துறைக்கு அளிக்கப்பட்டுள்ளது.

மாற்றுத் திறனாளிகளுக்கான சேவைகள் வழங்குவதற்கு பல துறைகள் செயல்பட்டு வருகின்றன. அவைகளாவன, தேசிய மாற்றுத் திறனாளிகள் நிதி மற்றும் வளர்ச்சி வாரியம், கான்பூரிலுள்ள செயற்கை உடல்பாகங்கள் தயாரிப்பு வாரியம், புது டெல்லியில் உள்ள தீன்தயாள் உபாத்யாயா உடல் ஊனமுற்றவர் களுக்கான நிறுவனம், கொல்கத்தாவில் உள்ள முடநீக்கியல் குறைகள் உள்ளவர்களுக்கான தேசிய நிறுவனம், டெஹ்ரடூனில் உள்ள கண் பார்வை குறைபாடுகள் உள்ளவர்களுக்கான தேசிய நிறுவனம், செகந்திராபாத்திலுள்ள மனநலக் குறைபாடுகள் உள்ளவர்களுக்கான தேசிய நிறுவனம், மும்பையிலுள்ள காது கேட்கும் குறைபாடுகள் உள்ளவர்களுக்கான அலிஆவார்ஜங் தேசிய நிறுவனம், கட்டக்கில் உள்ள மறு சீரமைப்பு பயிற்சி தேசிய நிறுவனம், சென்னையிலுள்ள பலதரப்பட்ட உடல் ஊன முள்ளவர்களுக்கு அதிகாரமளிக்கும் தேசிய நிறுவனம் மற்றும் புது டெல்லியிலுள்ள இந்திய சைகை மொழி ஆய்வு மற்றும் பயிற்சி மையம் ஆகியவைகளாகும்.

மாற்றுத் திறனாளிகள் சட்டம் 1995ன் கீழ் வரும் முக்கிய செயல்பாடுகள் ஒட்டு மொத்த பாதுகாப்பு மற்றும் சுகாதாரம் மற்றும் பாது காப்பு அம்சங்களாவன:

1. குறைபாடுகளை குறைக்கும் ஆய்வுகளை

மேற்கொள்ளுதல். குறைபாடுகளை குறைக்கும் பல்வேறு முயற்சிகளை மேற்கொள்ளுதல்; ஆண்டுக்கு ஒரு முறையாவது எல்லாக் குழந்தைகளையும் பரிசோதித்து யாருக்காவது ஏதாவது குறைபாடு ஏற்படுவதற்கான சாத்தியக் கூறுகள் இருக்கின்றனவா என்பதை கண்டுபிடித்தல்; ஆரம்ப சுகாதார நிலையங்களில் உள்ள பணியாளர்களுக்கு தக்க பயிற்சிகளை அளித்தல்; மகப் பேறு காலத்திற்கு முந்தைய, மகப்பேறு கால மற்றும் குழந்தை பிறப்பிற்கு பின்பான தாய் சேய் நல வசதிகளை வழங்குதல்.

2. எந்தெந்த பதவிக்கு மாற்றுத் திறனாளி களை பணியமர்த்த முடியும் என்பதை அடையாளம் காணுதல்; இதை அவ்வப்போது ஆய்வு செய்து புதுப் பித்தல்; மாற்றுத் திறனாளிகளுக்கு வேலை வாய்ப்பு உத்திரவாதம் செய் தல்; மாற்றுத் திறனாளிகளுக்கு பயிற்சி மற்றும் நல்வாழ்வு வழங்கும் திட்டங்களை உருவாக்குவதல்; உச்ச வரம்பு வயதை தளர்த்துதல்; வேலை வாய்ப்பை ஒழுங்குபடுத்துதல்; மாற்றுத் திறனாளிகள் வேலை செய்யும் இடத் தில் அவர்களுக்கு சுகாதார மற்றும் பாதுகாப்பு சூழ்நிலையை ஏற்படுத்துதல். மாற்றுத் திறனாளிகளுக்கு 5 சதவிகித வேலைவாய்ப்பை உறுதி செய்தல்.

3. மாற்றுத் திறனாளிகளுக்கு உதவி பொருட்களையும், உபகரணங்களையும் வழங்குதல்; சலுகை விலையில் வீடுகளை வழங்குதல்; தொழில் துவங்க உதவி; மாற்றுத் திறனாளிகளுக்கு மனமகிழ் மன்றங்களை அமைத்தல்; சிறப்புப் பள்ளிகளை அமைத்தல்; ஆய்வு மையங் களை அமைத்தல்; மாற்றுத் திறனாளிகள் தொழில் துவங்கவும், தொழில் கூடங் களை அமைக்கவும் உதவி செய்தல்.

4. சாலை, ரயில் மற்றும் விமானப் போக்குவரத்து வசதிகளை மாற்றுத் திறனாளிகள் பயன்படுத்தும் வகையில் அமைத்தல். சாலைப்பாதுகாப்பு வழி காட்டிகள். பொதுக்கட்டிடங்களில் சரிவு பாதைகள் அமைத்தல். கண் பார்வை யற்றவர்களுக்கு பிரெய்ல் வசதிகள், காது கேட்காதவர்களுக்கு மின் தூக்கி போன்றவற்றில் அறிவிப்பு கள். மருத்துவமனைகள், ஆரம்ப சுகாதார நிலையங்கள், இதர மருத்துவ நிலையங்கள், மறுவாழ்வு மையங்கள் ஆகியவற்றில் சரிவு பாதை அமைத்தல்.

5. உடல் ஊனங்கள் ஏற்படாமல் தடுக்க ஆய்வுகளை மேற்கொள்ள வைத்தல் மற்றும் அவற்றிற்கு நிதி வசதி செய்தல்; மறு வாழ்வு அமைத்தல் மற்றும் சமூகம் சார்ந்த மறு வாழ்வு ஏற்படுத்துதல்; மாற்றுத் திறனாளிகளுக்கு துணை புரியும் கருவிகளை உருவாக்குதல் மற்றும் அதை பயன்படுத்தும் மன நிலையை ஏற்படுத்துதல்; மாற்றுத் திறனாளிகள் பணி செய்யக்கூடிய வேலைவாய்ப்புகளை அடையாளம் கண்டறிதல்; அலுவலகங்கள் மற்றும் தொழில் கூடங்களில் உள்ள உள் கட்ட மைப்பில் மாறுதல்களைச் செய்தல்; மாற்றுத் திறனாளிகளின் சிறப்புக் கல்வி, மறுவாழ்வு அளித்தல் மற்றும் மனித வள மேம்பாட்டிற்கான ஆய்வுகளை மேற்கொள்ள பல்கலைக்கழகங்கள், மற்ற உயர் கல்வி நிலையங்கள், தொழில்முறை அமைப்புகள், அரசு அல்லாத ஆய்வுக் கூடங்கள் ஆகியவற்றிற்கு நிதி உதவி அளித்தல்.

6. அனைத்து மாற்றுத் திறனாளிகளுக்கும் சமூக பாதுகாப்பு மறுவாழ்வு அளித்தல், அரசு அல்லாத அமைப்புகளுக்கு நிதி உதவி அளித்தல், மாற்றுத் திறனாளி பணியாளர்களுக்கு காப்பீட்டு திட்டங் கள் வழங்குதல், மாற்றுத் திறனாளி களுக்கான சிறப்பு வேலை வாய்ப்பு நிலையங்களில் பதிவு செய்தவர்கள் 2 ஆண்டு கடந்தும் பணி கிடைக்கவில்லை என்றால் அவர்களுக்கு வேலையில்லா மானியம் அளித்தல்.

மாற்றுத் திறனாளிகளின் சேவைக்காக சமூக நீதி மற்றும் அதிகாரமளித்தல் மற்றும் சுகாதாரம் மற்றும் குடும்ப நல அமைச்சகங்கள், பல திட்டங்களை துவக்கியுள்ளன. அதில், 1985ல் துவங்கப்பட்ட மாவட்ட மறுவாழ்வு மைய திட்டத்தின் கீழ் நான்கு வட்டார வட்டார பயிற்சி மையங்கள், மும்பை, சென்னை, கட்டாக் மற்றும் லக்னௌ இதில் செயல்பட்டு வருகின்றன. அங்கு, கிராம நிலை அலுவலர்கள், மாவட்ட மறுவாழ்வு மைய அலுவலர்கள், மாநில அரசு ஊழியர்களுக்கு அணுகுமுறைக் கல்வி மற்றும் பயிற்சி, சேவைகள் சம்மந்தமான ஆய்வுகள் மற்றும் மலிவான உபகரணங்களை வழங்குதல் ஆகியவைகள் மேற்கொள்ளப்படும். இந்தத் திட்டங்களுக்கு பயன்படுவதற்கான பயிற்சி பொருட்கள் மற்றும் ஆவணங்கள் ஆகியவைகளை தயாரிப்பதோடு வட்டார மறுவாழ்வு பயிற்சி மையங்கள் மக்களிடையே விழிப்புணர்வு ஏற்படுத்த தேவையான விளம்பர புத்தகங்கள், சுவரொட்டிகள், ஒலி ஒளி பொருட்கள், திரைப்படங்கள் மற்றும் பாரம்பரிய தகவல் பரிமாற்றப் பொருட்கள், ஆகியவைகளை மாற்றுத் திறன் மற்றும் மறுவாழ்வு தேசிய தகவல் மையம், உடல் ஊனமுற்றவர்களுக்கான தேசிய நலக் கவுன்சில் மற்றும் இவைகளைப் போன்ற தேசிய அளவிலான நிறுவனங்களுக்கு தயாரிக்கப்படுகின்றன. 2000மாவது ஆண்டில் மாற்றுத் திறனாளிகளுக்காக மாவட்ட மாற்றுத் திறனாளிகள் மறுவாழ்வு மையம் துவக்கப்பட்டது. மாற்றுத் திறனாளிகள் சட்டத்தை (1995) செயல்படுத்தவும் அவர்களுக்கு மறுவாழ்வு சேவைகள் வழங்கவும் இந்த முயற்சி எடுக்கப்பட்டது. அடித்தளத்தில் மாற்றுத் திறனாளிகளுக்கு முழுமையான சேவைகளை வழங்க மாவட்ட மாற்றுத் திறனாளிகள் மறுவாழ்வு மையத்தை அமைக்க அரசு முடிவு செய்தது. விழிப்புணர்வு ஏற்படுத்துதல், ஆய்வுகளை மேற்கொள்ளுதல், உடல் ஊனங்களை அடையாளம் கண்டு ஆரம்பத்திலேயே நிவாரணங்களை மேற்கொள்ளுதல், தகவல்களை பரிந்துரைத்தல் அவர்களுக்கு வேண்டிய உபகரணங்களுக்கான கணிப்பை மேற்கொள்ளுதல், இந்த உபகரணங்களை அளித்து பொறுத்துதல், அதை அவர்கள் உபயோகப்படுத்துவதை கண்காணித்தல், அந்த உபகரணங்களை பழுது பார்த்தல், இயன்முறை பயிற்சி, தொழிற்சார் இயன்முறைப் பயிற்சி, பேச்சுப் பயிற்சி, அரசு மற்ற நிறுவனங்களுக்கு பரிந்துரைத்து அறுவை சிகிச்சை மூலம் மறு சீரமைப்பு முயற்சிகள், உடல் ஊனம் சார்ந்த சான்றிதழ்களை வழங்குதல், பேருந்து அட்டைகளை வழங்குதல், வங்கிக் கடன் வழங்குதல் மற்றும் தடங்கல் இல்லா சூழ்நிலை உருவாக்குதல் ஆகியவைகள் இந்த சேவைகளில் அடங்கும்.

2006 மாற்றுத் திறனாளிகளின் தேசிய கொள்கை என்பது இந்திய அரசின் மிக முக்கியமான வரவேற்கத்தக்க ஒரு நிகழ்வாகும். அதன் முக்கிய அம்சங்கள் பின்வருவன:

### 1. மாற்றுத் திறனாளி மகளிர்

- மாற்றுத் திறனாளி மகளிர்க்கு குறுகிய கால தங்குமிடம் அளித்தல், வேலை செய்யும் மாற்றுத் திறனாளி மகளிர்க்கு தங்கும் விடுதிகளும், வயதான மாற்றுத் திறனாளி பெண்களுக்கு தங்கும் விடுதிகள் அளித்தல்.

- மாற்றுத் திறனாளி மகளிர் தங்களுடைய குழந்தைகளை வளர்ப்பதில் பல சிரமங்கள் மேற்கொள்கின்றனர். அது போன்றவர்களுக்கு அரசு நிதி உதவி அளித்து குழந்தைகளைப் பார்த்துக் கொள்ள உதவி செய்யும். இது இரண்டு குழந்தைகளுக்கு மட்டும் இரண்டு ஆண்டுகளுக்கு வழங்கப்படும்.

### 2. மாற்றுத் திறனாளி குழந்தைகள்

மாற்றுத் திறனாளி குழந்தைகள் மிகவும் நலிந்தவர்கள் ஆவர். அவர்களுக்கு சிறப்பு கவனம் தேவை. அவர்களுக்கு அரசு;

- மாற்றுத் திறனாளி குழந்தைகளின் பராமரிப்பு உரிமைகள், பாதுகாப்பு ஆகியவற்றை அளித்தல்.

- மாற்றுத் திறனாளி குழந்தைகள் கண்ணி யத்துடனும் சமத்துவத்துடனும்

வளர்ச்சி பெற உரிமைகளுக்கான சுமுக மான சூழ்நிலையை நிர்ணயித்து பல சட்டங்களில் வழங்கப்பட்டுள்ள உரிமைகளும் மற்றவர்களுக்கு இணை யான வாய்ப்புகளையும் முழு பங்கேற் பையும் அளித்தல்.

- மாற்றுத் திறனாளி குழந்தைகளுக்கு வேண்டிய தனிச்சிறப்பு மறுவாழ்வு சேவைகளை உள்ளடக்கிய கல்வி, சுகா தாரம் மற்றும் தொழிற்முறை பயிற்சி களும், வாய்ப்புகளையும் உறுதி செய்வது.
- மாற்றுத் திறனாளி குழந்தைகளின் வளர்ச்சிக்கான உரிமைகள் மற்றும் அவர்களின் சிறப்புத் தேவைகள், பரா மரிப்பு மற்றும் பாதுகாப்பு ஆகியவற்றை உறுதி செய்தல்.

### 3. உடல் ஊனங்கள் வராமல் தடுத்தல், ஆரம்பத்திலேயே கண்டுபிடித்தல் மற்றும் சீர்செய்யும் சிகிச்சைகள்

- கருவுற்ற தாய்மார்களுக்கும், சிறு குழந்தைகளுக்கும் தேசிய வட்டார மற்றும் உள்ளூர் அளவில் தடுப்பூசி திட்டங்கள்.
- உடல் ஊனங்கள் வராமல் தடுக்க பயிற்சி வழிமுறைகள் மற்றும் வசதிகள், மருத்துவ, துறை மருத்துவ பணி யாளர்களுக்கும் அங்கன்வாடி பணி யாளர்களுக்கும் உடல் ஊனங்களை ஆரம்பத்திலேயே கண்டறிந்து சிகிச்சை அளிக்கும் முறைகளில் பயிற்சி அளித்தல்.
- உடல் ஊனங்கள் மேலும் தீவிரமாகா மலும் ஒன்றிலிருந்து மற்றொரு உடல் ஊனம் ஏற்படாமலும் தடுக்கும் தகுந்த நடவடிக்கைகளை தற்போது உள்ள மருத்துவ சேவை வழங்கு முறையிலேயே உருவாக்குவது.
- குழந்தை பிறப்பு வாய்ப்புள்ள வயதுள்ள இளம் பெண்களுக்கும் தாய் மார்களுக்கும், மகப்பேறு அடைந்த மகளிருக்கும் சத்துணவு மருத்துவ கண்காணிப்பு துப்புரவு சார்ந்த விழிப் புணர்வுகளை ஏற்படுத்துதல் ஆகிய வற்றிற்கு கவனம் செலுத்தப்படும். இந்த விழிப்புணர்வு நடவடிக்கைகள் பள்ளியிலேயே அளிக்கப்படும் வண் ணம் ஆசிரியர்களுக்கு பயிற்சி அளிக்கப்படும்.

### 4. மறுவாழ்வுக்கான திட்டங்கள்

- உண்மையான மறுவாழ்வு சேவைகளை வழங்க மாநில அளவிலான மையங் கள் அமைக்கப்படும். அதில் மனிதவள மேம்பாடு, ஆய்வுகள் மற்றும் நீண்ட கால சிறப்பு மறுவாழ்வு திட்டங்கள் செயல்படுத்தப்படும்.
- தன்னார்வ தொண்டு நிறுவனங்களின் ஈடுபாடோடு மாவட்ட அளவிலான பஞ்சாயத்து ராஜ் நிறுவனங்களின் கீழ் தீவிரமாக மன நோய் பாதித்தவர்களுக்கு மன நோய் சிகிச்சை சேவை மையங்கள் அமைக்கப்படும். சமூக மற்றும் குடும்ப ஆதரவு அற்ற மனநலம் பாதித் தவர்களுக்கு மற்ற குடும்பங்கள் பொறுப் பெடுத்து நலனளிக்கும் அமைப்புகள் ஊக்குவிக்கப்படும்.

இந்திய அரசு 12வது ஐந்தாண்டு திட்டத்தில் மாற்றுத் திறனாளிகளுக்கு பயனளிக்க தகவல் தொழில்நுட்பம், சிவில் விமான போக்குவரத்து, சுகாதாரம் மற்றும் குடும்ப நலம், மனித வள மேம்பாடு, தொழிலாளர் நலம் மற்றும் மேம்பாடு, ரயில்வே, ஊரக வளர்ச்சி மகளிர் மற்றும் குழந்தைகள் மேம்பாடு அமைச் சகங்கள் மேற்கொள்ளக்கூடிய திட்டங் களை வகுத்துள்ளது. இதைப்போல், மாநில அரசுகளும் மேற்கொள்ள பரிந்துரை செய்யப் பட்டுள்ளது.

மாற்றுத் திறனாளிகளின் உரிமைகளை பாது காக்கும பல்வேறு சட்ட வடிவங்களைப் பற்றிய தகவல்களும் இதில் தெரிவிக்கப்பட்டுள்ளது. மாற்றுத் திறனாளிகள் சார்ந்த தற்போதைய

# உடல் ஊனம்சார் அட்டவணை : 2001 மற்றும் 2011 மக்கட்தொகை கணக்கெடுப்பு

| உடல் ஊனம் உள்ளவர்களின் மக்கட்தொகை | | | | | | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| வ. எண். | | 2001 | | | | | | | 2011 | | | | | | |
| | | மக்கட் தொகை | மொத்த மக்கட் தொகை % | உடல் ஊனம் உள்ளவர்களின் % | ஆண்கள் | பெண்கள் | கிராமப்புற | நகர்ப்புற | % மக்கட் தொகை | மொத்த மக்கட் தொகையில் % | உடல் ஊனமுள்ளவர்களின் % | ஆண்கள் | பெண்கள் | கிராமப்புற | நகர்ப்புற |
| 1 | மொத்த மக்கட் தொகை | 1,028,610,328 | | | 532,156,772 | 496,453,556 | 742,490,639 | 286,119,689 | 1,210,864,977 | | | 623270258 | 587584719 | 833748852 | 377106125 |
| 2 | உடல் ஊனமுற்றவர்களின் மொத்த எண்ணிக்கை | 21906769 | 2.13 | | 12,605,635 | 9,301,134 | 16,388,382 | 5518387 | 26,814,994 | 2.21 | | 14,988,593 | 11,826,401 | 18,636,358 | 8,178,636 |
| 3 | உடல் ஊன சதவிகிதம் (ஒரு லட்சம் மக்கட்தொகைக்கு) | 2130 | | | 2,369 | 1,874 | 2,207 | 1,929 | 2,215 | | | 2404.83046 | 2012.71419 | 2235.24842 | 2168.78896 |
| 4 | என்ன வகையான உடல் ஊனம் | | | | | | | | | | | | | | |
| i | பார்வை குறைபாடு | 10634881 | 1.03 | 48.55 | 5,732,338.00 | 4,902,543.00 | 7873383 | 2,761,498.00 | 5,033,431 | 0.42 | 18.77 | 2,639,028 | 2,394,403 | 3,503,558 | 1,529,873 |
| ii | பேச்சு குறைபாடு | 1640868 | 0.16 | 7.49 | 942,095.00 | 698,773.00 | 1243854 | 397,014.00 | 1,998,692 | 0.17 | 7.45 | 1,122,987 | 875,705 | 1,303,940 | 694,752 |
| iii | காது கேளாமை குறைபாடு | 1261722 | 0.12 | 5.76 | 673,797.00 | 587,925.00 | 1022816 | 238906 | 5,072,914 | 0.42 | 18.92 | 2,678,584 | 2,394,330 | 3,393,728 | 1,679,186 |
| iv | உடல் அசைவுசார் குறைபாடு | 6105477 | 0.59 | 27.87 | 3,902,752.00 | 2,202,725.00 | 4654552 | 1,450,925.00 | 5,436,826 | 0.45 | 20.28 | 3,370,501 | 2,066,325 | 4,035,741 | 1,401,085 |
| v | மனநலம்சார் குறைபாடு | 2263821 | 0.22 | 10.33 | 1354653 | 909,168.00 | 1593777 | 670044 | 2,228,844 | 0.18 | 8.31 | 1286656 | 942188 | 1521780 | 707064 |
| a | மனநலம் சிதைவு | N.A. | N.A. | N.A. | N.A. | N.A. | N.A. | N.A. | 1,505,964 | 0.12 | 5.62 | 870,898 | 635,066 | 1,025,900 | 480,064 |
| b | மனநல நோய்சார் | N.A. | N.A. | N.A. | N.A. | N.A. | N.A. | N.A. | 722,880 | 0.06 | 2.70 | 415,758 | 307,122 | 495,880 | 227,000 |
| vi | மற்ற பிற | N.A. | N.A. | N.A. | N.A. | N.A. | N.A. | N.A. | 4,927,589 | 0.41 | 18.38 | 2,728,125 | 2,199,464 | 3,293,107 | 1,634,482 |
| vii | ஒன்றுக்கும் மேற்பட்ட குறைபாடுகள் கொண்ட | N.A. | N.A. | N.A. | N.A. | N.A. | N.A. | N.A. | 2,116,698 | 0.17 | 7.89 | 1,162,712 | 953,986 | 1,584,504 | 532,194 |

சட்டங்களான: மாற்றுத் திறனாளிகள் (சம வாய்ப்புகள் உரிமைகள் பாதுகாப்பு மற்றும் முழு பங்கேற்பு) சட்டம் 1995, ஆட்டிசம், மூளை நரம்பு தளர்ச்சி, மூளை நரம்பு வளர்ச்சிக்குறைவு மற்றும் ஒன்றுக்கும் மேற்பட்ட குறைபாடுகள் உள்ளவர்களுக்கான தேசிய அறக்கட்டளை சட்டம் 1999, இந்திய மறுவாழ்வு கவுன்சில் 1992, மனநல சட்டம் 1987, கல்விக்கான உரிமை சட்டம் 2009, குழந்தைகள் சார் உரிமைகள் பாதுகாப்பு சட்டம் 2005, மகளிர்க்கான தேசிய கமி'ன் சட்டம், 1990, தொழிற்கூடங்களில் பயிற்சி சட்டம் 2005, குற்றவியல் முறை நீதிமன்றம் 1973 ஆகியன.

மேற்கூறப்பட்ட அனைத்து முயற்சிகளுக்குப் பின்னும் ஒரு முற்போக்கான சிறப்பான அமைப்பை ஏற்படுத்துவதில் நாம் இன்னும் வெகுதூரம் பயணிக்க வேண்டியுள்ளது. மாற்றுத் திறனாளிகள் பற்றிய ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டு பங்குபெற்ற 42 சதவிகித நாடுகளில் மறுவாழ்வு கொள்கைகள் இன்னமும் ஏற்றுக்கொள்ளப்படவில்லை. 50 சதவிகித நாடுகளில் மாற்றுத் திறனாளிகளின் மறுவாழ்வு சார்ந்த சட்டங்கள் இயற்றப்படவில்லை மற்றும் 40 சதவிகித நாடுகளில் மறுவாழ்வு திட்டங்கள் அமைக்கப்படவில்லை. நல்ல சட்டங்களையும், கொள்கைகளையும் இயற்றிய நாடுகளில் மறுவாழ்வு செயல்திட்டங்கள் பின் தங்கியே உள்ளன. இதற்கான அமைப்புசார்ந்த கண்டறிப்பட்ட தடைகள்: முனைப்பான திட்டமிடுதல் இல்லாமை, போதிய வளங்களும் சுகாதார உள் கட்டமைப்பு வசதிகளும் இல்லாமை, இவைகளை செயல்படுத்தும் ஒருங்கிணைக்கும் மற்றும் கண்காணிக்கும் அமைப்புகள் இல்லாமை,போதுமான சுகாதார தகவல் மற்றும் தொடர்பு அணுகுமுறைகள்சார் அமைப்புகள் இல்லாமை.

மிகவும் சிக்கலான பரிந்துரை முறைகள் மற்றும் மாற்றுத் திறனாளிகளோடு நெருங்கி பழகும் அமைப்பு இல்லாமையுமாகும். ஆகவே, இதற்கு தேசிய மறுவாழ்வு திட்டங்களும் ஒரு அமைப்போடு மற்ற அமைப்புகள் இணைந்து செயல்படும் நிலைமையும் உருவாக்கப்பட வேண்டும்.

## இனி பயணிக்க வேண்டிய பாதை

வளரும் நாடுகளில் மாற்றுத் திறனாளிகள் அனைவருக்கும் உள்ளடக்கிய கொள்கைகளையும், திட்டங்களையும் வடிவமைக்க இந்தியா முனைந்துள்ளது. இதனை வளரும் நாடுகளில் மாற்றுத் திறனாளிகளுக்கான உரிமைகளை நிலைநாட்டும் உரிமைகளை பரிந்துரை செய்வதில் ஆதரவு பெற்றுள்ளது. இந்திய பிரதமரும், தன்னுடைய வெகுஜன "மனதின் குரல்" என்ற ஒலிபரப்பு மூலம் இந்த பிரச்சினைகளைப் பற்றி பேசியிருக்கிறார். ஆனாலும், மாற்றுத் திறனாளிகளுக்கு நல்ல செயல் திட்டங்களை செயல்படுத்தி அவர்களுக்கு நியாயம் வழங்கும் வண்ணமும் அனைவரையும் உள்ளடக்கிய சமுதாயத்தை உருவாக்கவும் நாம் பல பிரச்சினைகளை சந்திக்க வேண்டியுள்ளது. இந்தியாவில் மாற்றுத் திறனாளிகளின் மொத்த அளவையும், தீவிரத்தையும் நாம் தெள்ளத் தெளிவாக புரிந்து கொள்ள வேண்டும். இது அல்லாத பட்சத்தில் சரியான தகவல்களை சேகரிப்பதும் நல்ல அணுகுமுறையை ஏற்படுத்துவதும் பெரிய சவாலாகும். இந்த பிரச்சினையை அணுக இந்தியா ஒருங்கிணைந்த மற்றும் பலமுனை அணுகுமுறையை மேற்கொள்ள வேண்டும். இந்த பிரச்சினைக்காக செயல்படும் அனைத்து துறைகளின் அமைப்புகளையும் சிறப்பாக ஒருங்கிணைக்க வேண்டும். சமூக பாகுபாட்டையும் சேவைகளை பெறுவதில் உள்ள தடைகளையும் நீக்கவும் உள்ளூர் அரசு துறைகளும், சமூக அமைப்புகளும் இணைந்து செயலாற்ற வேண்டும். மாற்றுத் திறனாளிகளுக்குள்ள உடல் ஊனத்தை வராமல் தடுக்கவும், அவர்களுக்கு உரிய குறிப்பிட்ட சேவைகளை வழங்கவும் எல்லா சேவை வழங்கு நிலையங்களிலும் பயிற்சி பெற்றவர்களை நியமிக்க வேண்டும். தேவையான அனைவருக்கும், சமூக பாதுகாப்பு திட்டங்கள் மூலம் சுகாதார வசதிகளும், பாதுகாப்பும் அளிக்க வேண்டும். •

# மாற்றுத்திறனாளிகளுக்கு திறன் அளித்தல்

– சாந்தி ராகவன்

மஞ்சுநாத் ஒரு சிறிய நிறுவனத்தின் மேற்பார்வையாளர். இங்கு நெசவு எந்திரங்களில் பணிபுரியும் 15 பேர் கொண்ட குழு இருக்கிறது. வாடிக்கையாளரின் நிராகரிப்பு தொழிலில் இழப்பை ஏற்படுத்திவிடும் என்பதால் தரம் என்பது இங்கே தாரக மந்திரம். **இந்தியாவில் உற்பத்தி** எனும் பிரதமரின் முழக்கம் மஞ்சுநாத் போன்ற மனிதர்களை அடிப்படையாகக் கொண்டிருக்கிறது. மஞ்சுநாத்திற்கு பார்வைக் குறைபாடு உள்ளது. பலவிதமான உடல்குறைபாடுகள் உடைய மாற்றுத்திறனாளிகள் இவரது குழுவில் இருக்கின்றனர்.

ஸ்டான்லி என்பவர் பினைல் வியாபாரத்தை நடத்திவரும் சுய தொழில் முனைவர். இவர் மூளை அழற்சி நோய்கண்டவர். ஆதரவு மையம் ஒன்றில் வேலைபார்க்கும் தபாசம் என்பவர் கடல்கடந்த பிரதேசமான இங்கிலாந்தில் தனது பொருள்களை வாங்கும் வாடிக்கையாளர்களை திரையில் கவனமாகப் பார்த்துக்கொண்டிருக்கிறார். இவருக்கும் உடல் குறைபாடு இருக்கிறது. பிரதீப் அனைத்துவிதமான பொருட்களையும் விற்பனை செய்யக் கூடிய அசத்தல் அங்காடி *(Mall)* ஒன்றில் வேலை பார்க்கிறார். இவருக்குப் பார்வைக் குறைபாடு, செவித்திறன் குறைபாடு ஆகியவற்றுடன் அறிவாற்றல் குறைபாடும் உண்டு. ராஜீவ் என்பவர் ஒரு பன்னாட்டு வங்கியில் பகுப்பாய்வாளராகப் பணிபுரிகிறார். இவருக்கு செவித்திறன் குறைவு. பிரசாந்த் ஊரக வளர்ச்சி அதிகாரியாக இருந்து வருகிறார். இவருக்கு பார்வை இல்லை. ஆரம்பத்தில் இவருக்கு இந்த வேலையைக் கொடுக்க மறுத்தனர். பிறகு கன்னடத்தில் தட்டச்சு செய்யவும், பிறரது உரையாடல்களைப் புரிந்து கொள்வதற்கான மென்பொருளை உருவாக்கி தனிப்பட்ட பயிற்சிகளைக் கொடுத்தும் இவரை வேலைக்கு அமர்த்தியுள்ளனர். இவர் இப்போது, இவருடன் பணிபுரிபவர்கள், பொதுமக்கள் ஆகியோரின் நன்மதிப்பைப் பெற்று வருகிறார்.

கௌசியாவை அவரது தாயார்தான் குளிப்பாட்டுகிறார். உணவு ஊட்டுகிறார். அந்த அளவுக்கு இவருக்கு திறன் பாதிப்பு உள்ளது. இருப்பினும் பன்னாட்டு நிறுவனம் ஒன்றில் திட்ட ஒருங்கிணைப்பாளராக வேலை பார்த்து அதில் கிடைக்கும் ஊதியத்தைக் கொண்டு தனது தாயாரை இவர் கவனித்துக் கொள்கிறார். இவர் வாங்கித்தந்துள்ள துணி துவைக்கும் எந்திரம் தாயாருக்கு மிகப்பெரிய உதவியாக இருக்கிறது. பேசுவதைப் புரிந்து கொண்டு உதவி செய்யும் மென்பொருளின் துணைகொண்டு எண்களை அழுத்தி இணையத்தை இயக்கி கௌசியா வேலை பார்க்கிறார்.

மஞ்சுநாத், ஸ்டான்லி, தபாசம், பிரதீப், கௌசியா, ராஜிவ், பிரசாந்த் ஆகியோர் **இந்தியாவை மாற்றி** வருபவர்களில் ஒரு சிலர். திறன்களை வளர்த்துக்கொண்டு வேலை வாய்ப்புக்கு ஏற்றவர்களாக மாறி, மற்ற எவரையும் போலவே வேலை பார்த்து, வரிகட்டி, குடும்பத்தைக் கவனித்துக் கொண்டு சமூகத்தின் அங்கமாகவும் இத்தகையோர் திகழ்கின்றனர். திறன் குறைவு, வறுமை, பாகுபாடு போன்ற சவால்களை எதிர்கொண்டு மீண்டுவரும் மக்களின் திறமைதான் இந்தியாவை பெருமைமிக்கதாக ஆக்குகிறது என்பதை இவர்கள் நமக்கு நினைவூட்டுகின்றனர்.

---

**சாந்தி ராகவன்,** Enable India என்ற அமைப்பின் நிர்வாக அறங்காவலர்.

## வேலைக்கேற்ற திறன் வளர்ப்பதில் தற்போதைய நிலை

மாற்றுத்திறனாளிகளுக்கு தனியார் துறையில் கடந்த 10 ஆண்டுகளில் மிகப் பெருமளவுக்கு வேலை வாய்ப்பு அதிகரித்துள்ளது. பெரிய நகரங்களில் உள்ள நிறுவனங்கள் இத்தகையவர்களை வேலைகளில் அமர்த்துகின்றன. உற்பத்தி, தரம் ஆகியவை பற்றிய நிறுவனக் கவலைகள் பணியாளர்களின் திறன்களை மேம்படுத்தி அவர்களைப் பணிக்கு உகந்தவர்களாக மாற்றுவதன் மூலம் களையப்பட்டு வருகின்றன. 2008, 2014 ஆகிய ஆண்டுகளில் பின்னடைவு உச்சத்தில் இருந்தபோது சிறந்த ஒன்றை நீங்கள் உருவாக்கினால் அதற்கு சந்தை மதிப்பு எப்போதும் உண்டு என்பதை வலியுறுத்தும் விதத்தில் மாற்றுத் திறனாளிகளையும் வேலைக்கு எடுத்து அமர்த்தி நிறுவனங்கள் கடந்த 5 ஆண்டுகளில் வேகமாக முன்னேறி வருகின்றன. ஆள் பற்றாக்குறை நிலவுவதால் சில நிறுவனங்கள் மாற்றுத்திறனாளிகளை தொடர்ந்து வேலைக்கு அமர்த்த முயற்சித்து வருகின்றன. மாற்றுத் திறனாளிகளுக்க்காகத் தொண்டாற்றும் அரசு சாராத அமைப்புகள், பயிற்சி நிறுவனங்கள், சமுதாயத் துணிவாண்மை அமைப்புகள் போன்றவை ஏராளமான மாற்றுத் திறனாளிகளின் திறன்களை மேம்படுத்தி பணியமர்த்துவதில் நகரங்களிலும், மாவட்டங்களிலும் முனைப்பு காட்டி வருகின்றன. குழுத்தலைவர்கள், மேற்பார்வையாளர்கள் ஆகியோருக்கும் திறன் மேம்பாடு பற்றிய பயிற்சியை அளித்து மாற்றுத் திறனாளி பணியாளர்களுடன் இவர்களையும் வெற்றிகரமாக இணைந்து வேலை வாய்ப்பில் புதிய சாத்தியங்கள் உருவாக்கப்படுகின்றன. குறிப்பிட்ட ஒரு பணிக்குத் தேவைப்படும் பயிற்சியை நிறுவனங்களின் ஒத்துழைப்புடன் அளிப்பதன் மூலம் தரமான பணியாளர்கள் உருவாவதும், நல்ல வேலைகள் கிடைப்பதும் சாத்தியப்படுகிறது. நிறுவனங்கள் தங்களின் தேவைகளை முன்கூட்டியே அறிந்து அதற்கேற்ப பயிற்சிகளைத் தந்து பொருத்தமானவர்களை நியமிப்பதால் இது ஒரு வெற்றிக் கூட்டணியாக அமைகிறது.

திறன் மேம்பாட்டை அடைவதில் பெரும் பங்கு வகிப்பது அனுபவப் பயிற்சியேயாகும். திறன் பயிற்சியுடன் வாழ்க்கைத்திறன் பயிற்சிகளும், மனப்பான்மை தொடர்பான பயிற்சிகளும் சேர்க்கப்படும் போது பணியாளர்கள் ஒரே நிறுவனத்தில் நீண்ட காலத்திற்கு தொடர்ந்து பணியாற்றுவது சாத்தியப்படுகிறது. தங்கள் குழந்தைகள் வாழ்க்கையிலும், வேலையிலும் கடுமையான யதார்த்தங்களை சந்திக்க வேண்டியிருக்கும் என்று பெற்றோர் நினைப்பதில்லை. எனவே என்னதான் பொருளாதாரத் தேவைகள் உள்ள போதிலும் வெகுதூரம் பயணிப்பது, 24 மணி நேரமும் செயல்படும் நிறுவனங்களில் பணிமுறை மாற்றத்தின்படி வேலை பார்ப்பது, இலக்குகளை அடைவதற்காக விரைந்து பணியாற்றுவது போன்ற நெருக்கடிகளிலிருந்து தங்களின் மாற்றுத் திறனாளி குழந்தைகளை பாதுகாக்கவே பெற்றோர் முனைகின்றனர்.

தகுதி முதலியவற்றில் ஒப்பான நிலையில் இருப்பவர்கள் ஒருவருக்கொருவர் பயிற்றுவிப்பது என்பது மாற்றுத்திறனாளிகளுக்கு பயிற்சி அளிப்பதில் வெற்றிகரமான முறையாகத் திகழ்கிறது. பழைய முறைகளை கைவிட்டு இத்தகைய புதிய முயற்சிகளை சிறந்த மாற்றாக மேற்கொள்ள வேண்டும். உளவியல் குறைபாடு உடையவர்களுக்குத் தரப்படவேண்டிய திறன் வளர்ச்சி, வேலைவாய்ப்புப் பயிற்சிகள் உளவியல் ஆலோசகர், மனநல மருத்துவர் ஆகியோரைக் கொண்ட உதவி அமைப்புகளையும் துணையாகக் கொண்டு வழங்கப்படவேண்டும்.

சிறு வணிகம், விருந்தோம்பல், தகவல் தொழில்நுட்பம், தகவல் தொழில்நுட்பம் சார்ந்த சேவைகள், ஆயத்த ஆடை, ஜவுளித் தொழில், வங்கித் தொழில் ஆகிய வளரும் துறைகளில் திறன் மேம்பாடு அதிகரித்துள்ளது. சுய தொழிலில் திறன் மேம்பாட்டுப் பயிற்சிகள், ஒப்பனை, கைபேசி பழுதுபார்ப்பு போன்ற அவ்வப் பகுதிகளைச் சார்ந்த தொழில்களில் வெற்றிகரமாக செயல்பட்டு வருகிறது.

### எதிர்கால நிலைமை

தேசிய திறன்மேம்பாட்டுக் கொள்கையை பிரதமர் செயல்பாட்டிற்கு கொண்டு வந்திருக்கிறார். அடுத்த 7 ஆண்டுகளில் 38 லட்சம் மாற்றுத்திறனாளிகளுக்கு திறன்களை மேம்படுத்த இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது. மாற்றுத்திறனாளிகளுக்கான திறன் மேம் பாட்டுத்துறை (DePWD) சமூக நீதி, அதிகார மளித்தல் அமைச்சகத்தின் ஒரு அங்கமாக உருவாக்கப்பட்டுள்ளது. மாற்றுத்திறனாளி களுக்கான தேசிய செயல்திட்டமும், எங்கும் எளிதில் சென்றடைதல் (Accessible India) என்ற திட்டமும் மாற்றுத்திறனாளிகளைச் சுற்றி சிலவும் சூழலின் மீது கவனத்தை ஏற்படுத்தியுள்ளன. திறன் மேம்பாட்டுக் கொள்கையை முன்னெடுத்துச் செல்வதற்கான மாற்றுத்திறனாளிகளுக்கான திறன் குழுமம் அமைக்கப்பட்டுள்ளது. இந்தியாவின் உழைக்கும் மக்களின் ஒரு பகுதியாக மாற்றுத்திறனாளிகளும் வருவதற்கான சூழல் கனிந்திருக்கிறது. பற்பலவிதமான திறன் குறைவுடைய மாற்றுத்திறனாளிகளுக்கும், மிகக்கடுமையான உடல், அறிவாற்றல் குறை பாடுகள் உடையவர்களுக்கும் எல்லா இடங் களிலும் எல்லா வகையான வேலைகளிலும் சமமான முக்கியத்துவத்தை அளித்து சிறந்த பயிற்சி மாதிரிகளின் படி பயிற்சிகளைத்தர வேண்டும்.

தற்போது நம்மிடம் இருக்கும் 600க்கும் மேற்பட்ட தரமான ஊரக வேலைவாய்ப்பு நிறுவனங்களின் கட்டமைப்பை (RSETIs) நன்றாகப் பயன்படுத்திக் கொண்டு சுயவேலை வாய்ப்புப் பயிற்சிகளைத் தரவேண்டும். வெவ்வேறான சுயதொழில் வாய்ப்புகளுக்கு பொருத்தமான சிறப்புப் பயிற்சிகள் தேவை. தரமான மாற்றுத்திறனாளி பயிற்றுநர்கள் உடனடியாக தேவைப்படுகின்றனர். இவர் கள் ஒரு முன்மாதிரியாக அமைந்து மற்றவர் களுக்கும் ஊக்கமளிப்பார்கள்.

கடந்த 10 ஆண்டுகளில் 273க்கும் அதிக மான 26 துறைகள் மாற்றுத் திறனாளிகளுக்கு வாய்ப்புகளைத் தந்துள்ளன. மிகக் கடுமை யான பாதிப்பு உடையவர்களை பணிய மர்த்துவதற்கு ஏற்ற தீர்வுகளையும், பயிற்சி களையும் கண்டறிந்து இன்னும் அதிக வேலைகளை உருவாக்குவதற்கு முனைந்திட வேண்டும். மாற்றுத் திறனாளிகளை பணிக்கு அமர்த்திக்கொள்ளும் முயற்சிகள் தொடர்ந்து மேற்கொள்ளப்பட வேண்டும்.

பணி பகுப்பாய்வு சேவைகள், பணியிடத் தீர்வுகள், உள்ளடக்கிய சேவைகள், விழிப் புணர்வு, கூர்ந்தறியும் திறனை உருவாக்குதல், தலைமைப் பண்பு வளர்ச்சி போன்றவற்றில் சேவை வழங்க முழுமையான ஆதரவு அமைப்புகள் பெருக வேண்டும். திறன் மேம்பாட்டு முன்முயற்சிகள் வெற்றிபெற இவை மிகவும் முக்கியம். இந்த ஆண்டில் கொண்டு வரப்பட்டுள்ள Enable Academy அமைப்பு மாற்றுத்திறனாளி சமூகங்கள் இணைந்து செயலாற்றுவதற்கு ஒரு தளமாக அமைந்து அவர்களின் வாழ்வாதாரம் உயர்வதற்குப் பாடுபட வேண்டும். தொடர்புடைய அனை வரின் வளப்பகிர்விற்கும், பரப்புரைகள் செய்வதற்கும் முழுமையான ஆதரவை வழங்கவும் இது ஒரு தளமாக அமைந்திட வேண்டும். கர்நாடக மாநிலத்தின் கிராமப் பகுதிகளில் மாற்றுத் திறனாளிகளை ஒருங்கிணைப்பதற்கு **நம்மவாணி** என்ற புதிய முறை செயல்பாட்டில் இருந்து வருகிறது. தங்களது அனுபவங்கள், பிரச்னைகள் ஆகிய வற்றைப் பகிர்ந்து கொள்வதற்கும் விழிப்புணர் வையும், நம்பிக்கையையும் பெற்று அன்றாட சவால்களை சந்திக்கவும், பொருளாதார ரீதியில் சுதந்திரமாக செயல்படவும் **நம்ம வாணி** உதவுகிறது. தொழில்நுட்பம் சார்ந்த இதுபோன்ற தளங்கள் பெருத்த மாற்றத்தை உருவாக்கி மாற்றுத்திறனாளிகள் திறன் மேம் பாட்டை அடைவதில் ஒளிமிகுந்த எதிர் காலத்தை உருவாக்கித்தரும்.

*இந்தியாவில் மாற்றம் (Change in India) நிகழும் போதுதான் இந்தியாவில் உற்பத்தி (Make in India) என்பது வெற்றிபெறும். வெற்றிகரமாகப் பணிபுரிந்து வரும் மாற்றுத் திறனாளிகள் மாற்றத்தின் முன்னோடிகளாவர்.*

# கல்விக்கான சூழலிட வடிவமைப்பின் மூலமாக சமூக நடுநிலைமையும் அனைவரையும் உள்ளடக்குதலும்

– ரச்னா காரெ

*2007* ஆம் ஆண்டு மாற்றுத்திறனாளிகளுக்கான உரிமைகள் குறித்த ஐக்கிய நாடுகள் சபையின் பிரகடனத்தில் (யு.என்.சி.ஆர்.பி.டி) இந்தியா கையெழுத்திட்டுள்ளது. இந்த உடன்படிக்கையின் 24ஆவது ஷரத்து அனைவரையும் உள்ளடக்கிய கல்விக்கான உரிமை குறித்து பேசுகின்றது. அனைவருக்கும் தரப்படும் கல்வி அதன் அனைத்து வகைகளிலும் தேவைப்படுகின்ற உதவிகளோடு கற்க முயலும் மாற்றுத்திறனாளிகளுக்கும் தரப்பட வேண்டும் என்பதை இந்த ஷரத்து உறுதிப்படுத்துகிறது. அனைவரையும் உள்ளடக்கும் சமுதாயச் சூழலில் சிறப்பு உதவிகளுடன் கல்வி கற்க விரும்பும் குழந்தைகளுக்கு கல்வி அளிப்பது குறித்த ஒரு விரிவான செயல் உத்திக்கான தேவை இன்று எழுந்துள்ளது. சிறப்பு உதவி தேவைப்படும் குழந்தைகளுக்கான சிறப்பு பள்ளிகள் அவர்களுக்கு முட்டுச் சுவர்களாகத்தான் இருக்கின்றன. இத்தகைய பள்ளிகள் மாற்றுத்திறனாளிக் குழந்தைகளின் தனிமையை அதிகப்படுத்துகின்றன; அவர்களை அந்நியப்படுத்துகின்றன; சமூக விலக்கம் செய்கின்றன. எனவே இத்தகைய பள்ளிகள் இவ்வாறு இல்லாமல் நடுநிலைமையும் கருணையும் கொண்ட சமுதாயங்களைக் கட்டமைக்கும் இடங்களாக மாற்றப்பட வேண்டும். “கல்வி அளிப்பதில் அனைவரையும் உள்ளடக்குதல்” என்பது நடைமுறை மாற்றங்கள் மூலமாக மட்டுமே சாத்தியமாகும். அனைவரையும் உள்ளடக்குதல் என்பது பல்வேறு வகைப்பட்ட பின்னணி; பலதரப்பட்ட திறமைகள் கொண்ட குழந்தைகள் அனைவரும் ஒன்றாக ஒரே வகுப்பறையில் ஒரே பள்ளிகளில் படித்து வெற்றி பெறுவது என்பதே ஆகும். இத்தகைய மாற்றங்கள் சிறப்பு உதவிகள் தேவைப்படும் குழந்தைகளுக்கு மட்டும் பலன் அளிப்பதாக



இருந்துவிடக் கூடாது. மாறாக அனைத்து மாணவர்கள், அவர்களது பெற்றோர்கள், நிர்வாகிகள் மற்றும் சமுதாயத்தில் உள்ள ஒவ்வொருவருக்கும் பலன் அளிப்பதாக இந்த மாற்றங்கள் இருக்க வேண்டும்.

அனைத்து குழந்தைகளுக்கும் போதிக்கும் வகையிலான ஆதரவான, எளிதில் கிடைக்கக் கூடிய ஒருங்கிணைந்த உலகளாவிய சூழ்நிலையைத் தரக்கூடிய வகையில் கல்விக்கான சூழலிடத்தை வடிவமைப்பதில் ஒரு புதிய அணுகுமுறை தேவைப்படுவதை இந்த ஆய்வுக் கட்டுரை அழுத்தமாக எடுத்துச் சொல்கிறது. குழந்தைகள் நமது சமுதாயத்தின் மதிப்புமிக்க உறுப்பினர்கள்; அவர்களின் பங்களிப்பு முக்கியமானது என்ற கண்ணோட்டமும் முக்கியமானதாகும். எனவே சிறந்த நடைமுறைகளுக்கான பரிந்துரைகளை இந்த ஆய்வுக் கட்டுரை முன்வைக்கிறது. அனைவரையும் உள்ளடக்கிய கல்விக்கான சூழலிடங்களை வடிவமைப்பதற்கான பரிந்துரைகளுக்கு அடிப்படையான தர்க்க நியாயங்களையும் இக்கட்டுரை கூறுகிறது.

**ரச்னா காரெ**, தலைவர் மற்றும் பேராசிரியர், திட்டமிடல் மற்றும் கட்டிடக்கலை கல்வி நிறுவனத்தின் கட்டிடக் கலைத்துறை, போபால்.

### பின்னணி

இவ்வாறு அனைவரையும் உள்ளடக்கிய கண்ணோட்டத்துடன் செயல்படும் வழக்க மான பள்ளிகள் மிகச் சிறப்பான பள்ளிகள் ஆகும். மாணவர்களிடையே பாரபட்ச மான மனோபாவத்தை எதிர்த்தல், சமுதாயத்தினரை வரவேற்கும் தன்மையை உருவாக்குதல், அனைவரையும் உள்ளடக்கிய சமூகத்தைக் கட்டமைத்தல், அனைவருக்கும் கல்வி என்ற இலக்கை நிறைவு செய்தல் போன்ற செயல்பாடுகளுக்கு இத்தகைய பள்ளிகள் திறன்மிக்க கருவிகளாக இருக்கும். இவ்வாறு செயல்படும் பள்ளிக்கூடங்கள் பெரும்பான்மை குழந்தைகளுக்கு சிறப்பான கல்வியை அளிப்பதோடு அவர்களின் திறனையும் மேம்படுத்துகின்றன. இதன்மூலம் ஒட்டுமொத்த கல்வி அமைப்பை பயனுள்ள செலவுதிறன் உடையதாக மாற்ற முடியும் (சிறப்பு உதவி தேவைப்படுவோரின் கல்விக் கான சலமான்க்கா அறிக்கை மற்றும் செயல் பாட்டுக்கான சட்டகம் 2011).

1947ல் நம்நாடு சுதந்திரம் பெற்றதில் இருந்து, இந்திய அரசு சிறப்புக் கல்வி குறித்த எண்ணற்ற கொள்கைகளை உருவாக்கி வந்துள்ளது. ஊனமுற்ற குழந்தைகளைச் சேர்த்துக் கொள் வதற்காக இந்திய அரசு கொள்கைகளை உருவாக்க முயற்சித்து வந்தபோதிலும் அவற்றை நடைமுறைபடுத்துவதில் பின்னடைவே ஏற்பட்டுள்ளது. அனைவரையும் உள்ளடக்கிய கல்வி அமைப்பு ஏற்படவில்லை. நாடு முழுவதும் அனைவருக்குமான கல்வி என்ற இலக்கு இன்னமும் எட்டப்படவில்லை. ஊனமுற்றவர்களுக்கான சட்டம் மற்றும் நவம்பர் 28, 2001ல் நாடாளுமன்றத்தால் நிறை வேற்றப்பட்ட இந்திய அரசியல் அமைப்புச் சட்ட திருத்தம் ஆகியன 6 முதல் 14 வயதிற் குட்பட்ட அனைத்துக் குழந்தைகளுக்கும் இலவச மற்றும் கட்டாயக் கல்வியை அரசு அளிக்க வேண்டும் என்பதை கட்டாயமாக்கி உள்ளது. அதன் முடிவரையில் “அனைத்து” என்பது மாற்றுத்திறனாளிக் குழந்தைகளையும் உள்ளடக்கும் என தெளிவாக எடுத்துரைக்கப் பட்டுள்ளது. சம்பந்தப்பட்ட அரசாங்கங்கள் அனைத்திற்கும் இது சட்டபூர்வ பொறுப்பாக மரி உள்ளது. இந்தியாவில் அனைவரையும் உள்ளடக்கிய கல்வியைக் கொண்ட ஒரு வலு வான அமைப்பை கட்டமைக்கும் வகையில் தற்போதுள்ள கல்வி அமைப்பின் இடை வெளியை இட்டு நிரப்ப வேண்டிய தேவை இந்திய அரசுக்கு எழுந்துள்ளது.

தற்போது மேற்கொள்ளப்பட்ட ஒரு கணக்கெடுப்பில் எந்த ஒரு வழக்கமான பள்ளியிலும் பயிலும் மொத்த மாணவர்களில் சுமார் 10% மாணவர்கள் கற்றலில் குறைபாடு உள்ளவர்களாகவும் சிறப்புக் கவனம் தேவைப்படுபவர்களாகவும் இருப்பது தெரிய வந்துள்ளது. சரியான வயதில் மேற்கொள்ளப் படும் இடையீட்டு செயல்கள் அனைத்து குழந்தைகளின் கற்றல் முறைகளிலும் குறிப் பிடத்தக்க மேம்பாட்டைச் செய்யும். மாற்றுத் திறனாளிக் குழந்தைகளுக்கு கல்வி அளிப்பதில் தொடங்கும் செயல் முக்கியத்துவம் பெற்றுள் ளது. உலகம் முழுவதும் பலவகையான கல்விப்புலச் சூழல்கள் பரிசோதிக்கப்பட்டு வருகின்றன. இதில் மிகச் சிறந்த தேர்வாக பரிந்துரைக்கப்படுவது அனைவரையும் உள்ள டக்கிய கல்வியே ஆகும். நாட்டில் உள்ள 4 கோடி மாற்றுத்திறனாளிக் குழந்தைகளுக்கும் கல்வி அளிக்க இதைவிட்டால் வேறு வழியே இல்லை என்பதுதான் உண்மையாகும். நமது நாட்டின் மக்கள் தொகையில் 78 சதவிகிதம் பேர் ஊரகப் பகுதிகளில் வசிக்கின்றனர். அங்கெல்லாம் சிறப்புப் பள்ளிகளை அமைப் பதற்குத் தேவையான நிதி இல்லை. அனை வரையும் உள்ளடக்கிய கல்வி என்பதில் பல சாதகமான அம்சங்கள் உள்ளன. அவை:

- மாற்றுத் திறனாளிக் குழந்தைகளிடம் சமுதாயம் சார்ந்த தகுதிநிலையை வளர்த்தெடுக்கிறது.
- சமுதாயத்தினரோடு ஒருங்கிணைந்து வாழ்வதற்கான சிறப்பு ஒதுக்கீடுகளைக் குறைக்கிறது.
- சிக்கனமானது; பயனுள்ள செலவு. அனைவரையும் சென்றடைகிறது அதி



லும் குறிப்பாக மூன்றாம் உலக நாடு களில் அது அனைவரையும் சென்றடைகிறது.

## பல்வேறு வகைப்பட்ட தேவைகளை அடையாளம் காணுதல்

பள்ளிச் சூழலைப் பயன்படுத்திக் கொண்டிருக்கின்ற பல்வேறு வகைப்பட்ட மக்கள் பிரிவினரின் பன்முகப்பட்ட தேவைகளையும் நடைமுறையில் ஏற்படும் கட்டுப்பாடுகளையும் நாம் அறிந்து அங்கீகரிப்பதுவே எல்லோரையும் உள்ளடக்கும் சூழ்நிலை திறம்பட அமைய தேவைப்படுவதாகும். இந்தக் கட்டுப்பாடுகள் பிறப்பில் வந்ததாக இருக்கலாம். விபத்து அல்லது நோயால் ஏற்பட்டதாக இருக்கலாம். குறிப்பிட்ட காரணங்கள் பலவகையினதாக இருந்தபோதிலும் ஊனங்கள் ஒன்றுக்கு மேற்பட்டதாக இருந்தபோதிலும் அவற்றின் தீவிரத்தன்மை மாறுபட்டு இருந்தபோதிலும் இந்த ஊனங்களின் பாதிப்பை நாம் நான்கு முதன்மைப் பிரிவுகாக பிரித்துப் பார்க்க முடியும். அவை: பார்வைக் குறைபாடுகள், கேட்டல் திறனில் குறைபாடுகள், உடல் ரீதியான குறைபாடுகள் மற்றும் அறிதல் முறையில் குறைபாடுகள் ஆகும்.

குழந்தைகளிடம் காணப்படும் பார்வைக் குறைபாடுகளின் இரண்டு பிரிவு;

குறைந்த பார்வைத்திறன் கொண்ட மாண வர்கள், பார்வை இல்லாதவர்கள்

குறைந்த பார்வைத்திறன் என்ற பிரிவில் பார்வை மங்குதல், தெளிவின்மை, புகை மூட்டமான பார்வை, அதிக அளவு தூரப் பார்வை அல்லது அதிக அளவு கிட்டப் பார்வை, பார்வைத் திருகல், கண்களுக்கு முன் புள்ளிகள் தோன்றுதல், நிறத்தைப் பார்ப்பதில் ஏற்படும் நிறக் குறைபாடு, பார்வைக் களத்தில் குறைபாடுகள், ஒளி அல்லது வெளிச்சத்துக்கு அசாதாரணமான முறையில் கண் கூசுதல், மாலைக்கண் போன்ற குறைபாடுகள் அடங்கும். ஓரளவு பார்வைத்திறன் குன்றிய வர்களுக்கு ஒளி, வடிவம், தோற்றமுரண் ஆகியவற்றை ஓரளவு உணரமுடியும்.

பார்வைக் குறைபாடு உள்ள மாணவர்கள் காட்சிரீதியான விளக்கம், காட்சிரீதியாக வைக்கப்படும் பொருட்கள் மற்றும் இதர காட்சிரீதியான வெளியீடுகளை எதிர்கொள்வதில் சிரமப்படுவார்கள். இதனோடு கண்–கை ஒருங்கிணைப்புக்கு தேவைப்படுகின்ற கட்டுப்பாடுகளை பயன்படுத்துவதிலும் அவர்களுக்கு சிரமம் ஏற்படும். பார்வைக் குறைபாடு உடைய பல குழந்தைகளுக்கு ஓரளவு பார்வைத் திறன் இருக்கும். இவர்கள் உருப்பெருக்கி உதவியுடன் பார்க்கலாம். அல்லது பிரகாசமான ஒளியைக் கொண்டும் கண் உறுத்தலைக் குறைக்கும் உபகரணங்களைப் பயன்படுத்தியும் படிக்கலாம். குறைந்த பார்வைத் திறன் உடைய இத்தகைய சிறுவர்கள் பெரிய எழுத்துக்களைக் கொண்டும் வண்ண முரண் அதிக அளவில் கொண்டும் படிக்கிறார்கள். வண்ணக்குருடு குறை உள்ளவர்கள் நிற சமிக்ஞை மூலமான தகவல்களைப் பயன்படுத்துவதில் சிரமப்படுவார்கள்.

## கேட்டல் திறனில் குறைபாடுகள்

கேட்டலில் குறைபாடு உடைய குழந்தைகள் என்றால் கேட்புத் திறனில் ஏதோ ஒரு வகையான கோளாறு உடையவர்கள் என்றும் இந்தக் கோளாறு எந்த அளவுடையதாகவும் இருக்கலாம் என்பதும் பொருளாகும். செவிடு என்பதற்கு கேட்டல் திறன் அதிகபட்ச அளவு செயல்படவில்லை என்பது அர்த்தமாகும். இத்தகைய குறைபாட்டுக்கு பரம்பரை, நோய்த் தொற்று, கட்டி மற்றும் விபத்துகள் காரணங்

களாக இருக்கலாம். கேட்டல் குறைபாடு உள்ள தனிநபர்களுக்கு ஏற்படும் முதன்மையான கஷ்டம் என்னவென்றால் ஒலி வடிவிலான தகவலைப் பெறுவதே ஆகும். ஒலி வடிவிலான தகவலை காட்சி மற்றும் வடிவ ரீதியிலான தகவலாகத் தருவதன் மூலம் இந்தப் பிரச்சனையைச் சமாளித்து விடலாம். இந்தப் பிரச்சனைக்கு மற்றொரு தீர்வும் உள்ளது. பயனாளர் மாற்று வெளியீட்டு உபகரணங்களை இணைத்துப் பயன்படுத்தும் வகையில் ஒரு இயந்திர செயல்திறமையை நாம் வழங்கலாம். இது ஓரளவே கேட்டல் குறைபாடு உடையவர்களுக்கு பயனுள்ளதாக இருக்கும். பிறப்பில் இருந்தே செவிடாக இருப்பவர்களுக்கும் அல்லது குழந்தைப் பருவத்தில் இருந்தே செவிடாக இருப்பவர்களுக்கும் பேச முடியாமல் இருக்கலாம். அல்லது அவர்களது பேச்சு புரியும்படியாக இல்லாமல் இருக்கலாம். அந்தச் சூழலில், இத்தகைய தனிநபர்களுக்கு உதவ வாய்மொழித் தொடர்பியலுக்கு மாற்றுமுறைகள் தரப்பட வேண்டும்.

## உடல் ரீதியான குறைபாடுகள்

உடல் ரீதியான குறைபாடுகளுக்கு போலியோ, பக்கவாதம், பலஹீனம், தண்டுவடம் மற்றும் மூளை பாதிப்பை ஏற்படுத்தும் விபத்துகள், பெருமூளை முடக்குவாதம், கீல்வாதம், எலும்புகள் உறுதியற்று இருத்தல், தசைநார் தேய்வு முதலானவை காரணங்களாக இருக்கலாம். உடல்ரீதியான குறைபாடுகள் உள்ள குழந்தைகள் எதிர்கொள்கின்ற பிரச்சனைகள் தசை கட்டுப்பாடு மோசமான நிலையில் இருத்தல்; சோர்வு, நடத்தல், பேசுதல், பார்த்தல், உணர்தல், கிரகித்தல் ஆகிய செயல்பாடுகளில் சிரமம்; தேவைப்படும் பொருட்கள் இருக்கும் இடத்திற்கு நகர்ந்து சென்று சேர்வதில் சிரமம்; நகர்ந்து செல்லும் போது திசை திரும்புவதில் தடுமாற்றம்; சிக்கலான செயல்களைச் செய்வதில் சிரமம் போன்றவை ஆகும். இத்தகைய தனிநபர்கள் உதவி உபகரணங்களைச் சார்ந்தே இருக்கிறார்கள். நடப்பதற்கான உதவி உபகரணங்கள் (எ.டு. சக்கர நாற்காலி, ஊன்றுகோல் முதலானவை), கையாள்வதற்கான உபகரணங்கள் (எ.டு. செயற்கை உறுப்பு பொருத்துதல், பல்இறுக்கி மற்றும் எலும்பு முறிவில் வைத்துக் கட்டப் பயன்படும் சிம்பு போன்ற செயற்கை சாதனங்கள்) தொடர்பியல் உபகரணங்கள் (எ.டு. தொடர்பியலுக்கான பலகைகள்) ஆகியவை பொதுவாகப் பயன்படுத்தப்படும் உதவி உபகரணங்கள் ஆகும்.

## அறிதல் முறையில் குறைபாடுகள்

குழந்தைகளிடம் அறிதல் ஊனம் பலவகையில் இருக்கின்றன. அதிதீவிர குறைபாடு முதல் குறிப்பிட்ட அறிதல் செயல்பாட்டில் உள்ள குறைபாடு வரை குறிப்பாக மொழிசார் செயல்பாட்டில் குறைபாடு வரை பலவகை குறைபாடுகள் உள்ளன. இந்த அறிதல் குறைபாடுகளின் வகைகளையும் குறைபாடுகளையும் கீழ்வருமாறு தொகுத்துக் கூறலாம்: குறைவான, மிதமான, தீவிரமான வளர்ச்சிக் குறைபாடுகள், டவுன் சின்ட்ரோம், ஆட்டிசம், பெருமூளை முடக்குவாதம், குறைப்பிரசவம், பிரசவத்தில் ஏற்படும் காயம், பேச்சு மற்றும் கற்றல் திறன் இன்மை, வலிப்பு, மனநோய் போன்றவை ஆகும். செயல்பாட்டு குறைபாடுகளை கீழ்க் கண்டவாறு வகைப்படுத்தலாம்:

ஞாபகத்திறன், புலன் உணர்தல், சிக்கல் தீர்த்தல், கருத்தாக்கத் திறன் குறைபாடுகள், குறுகிய கால நினைவுச் சேமிப்பில் இருந்து தகவலைப் பெறுவதில் சிரமம், நீண்டகால மற்றும் பழைய நினைவுகளை மீண்டும் ஞாபகப் படுத்துவதில் சிரமம் ஆகியன ஞாபகத்திறன் பிரச்சனைகளில் அடங்கும். புலன்வழியாக பெறப்படும் தகவலை எடுத்துக் கொள்வது, கவனத்தில் கொள்வது, பிரித்தறிவது ஆகியவற்றில் ஏற்படும் சிரமங்கள் புலன் உணர்தல் குறைபாட்டில் அடங்கும். சிக்கலை அங்கீகரித்தல், அடையாளம் காணுதல், தேர்ந்தெடுத்தல் போன்றவற்றில் ஏற்படும் சிரமங்கள், தீர்வுகளைச் செயல்படுத்துவதில் ஏற்படும் சிரமங்கள் ஆகியன சிக்கல் தீர்த்தல் குறைபாட்டில் அடங்கும். தொடர்வரிசை, பொதுமைப் படுத்துதல், பொருள்புரிதல், காரணகாரிய உறவைப் புரிந்து கொள்ளுதல், புலனாகாத

கருத்தாக்கங்கள், திறன் மேம்பாடு ஆகியன கருத்தாக்கத் திறன் குறைபாட்டில் அடங்கும். மொழிக் குறைபாடுகள் பேச்சு மொழி அல்லது எழுத்து மொழியில் பொருளைப் புரிந்து கொள்வதிலும் எடுத்துரைப்பதிலும் சிரமத்தை உருவாக்கும்.

## கல்வியில் சமூக நடுநிலைமை மற்றும் அனைவரையும் உள்ளடக்குதலை வடிவமைத்தல்

அனைவரையும் உள்ளடக்கும் கல்விச் சூழலிடம் என்பது விசேஷமானதோ அல்லது வழக்கமாகஇருக்கும்ஒன்றைமாற்றிஅமைத்ததோ இல்லை என்பதை உணர்ந்து கொள்ள வேண்டும். இது வித்தியாசமானது; ஊனமுள்ள குழந்தைகள், ஊனம் இல்லாத குழந்தைகள் என அனைத்துக் குழந்தைகளுக்கும் பலன் அளிக்கக் கூடியது. இது ஒரு சூழலிடத்தில் ஒரு குழந்தையை பெட்டிக்குள் அடைப்பது போல அடைக்கும் முறையல்ல. மாறாக இது ஒவ்வொரு குழந்தையையும் தனிப்பட்ட முறையில் கவனத்தில் எடுத்துக் கொண்டு அக்குழந்தையின் சாதக, பாதக அம்சங்களை அலசி ஆராய்ந்து கவனத்தில் கொள்ளும் தனிநபருக்கேற்ற கல்வி அணுகுமுறையில் அமைந்துள்ளது. ஒவ்வொருவருக்கும் அவர வருக்கேற்ற மாதிரியான இலக்குகளை ஆசிரியர் நிர்ணயிக்கிறார். அவர்கள் அனை வரையும் ஒரு சூழலிடத்தில் இருத்தி ஆசிரியர் கற்பிக்கிறார்.

இந்தியாவில் அனைவரையும் உள்ளடக்கும் கல்விச்சூழலிட கட்டமைப்புக்கான சில வடி வமைப்பு பரிந்துரைகளை இக்கட்டுரை முன் வைக்கிறது. இந்தப் பரிந்துரைகள் எளிமை யானவை; பொருளாதார ரீதியில் ஏற்புடை யவை மற்றும் பல கலாச்சார பரிவர்த்தனை சூழலுக்கு ஏற்றவை. இந்தப் பரிந்துரை களானது இது தொடர்பான கட்டுரைகள், ஆய்வுகளைப் படித்தும் அமெரிக்காவில் நிர்மாணிக்கப்பட்டுள்ள பதினேழு அனை வரையும் உள்ளடக்கும் கல்வி அமைப்பு களைக் கள ஆய்வு மேற்கொண்டும் முன் வைக்கப்படுகின்றன. வடிவமைப்புகளை ஆய்ந்தறிந்து வடிவமைப்பாளர்கள் மாற்றுத் திறன் குழந்தைகளுக்கு உள்ளடக்கிய கல்விச் சூழலிடத்தை உருவாக்கித் தரலாம். அவர் களது படைப்பாற்றலை கண்டிப்பான விதி கள் மூலம் கட்டுப்படுத்தாமல் இவற்றை உரு வாக்கலாம்.

தனிப்பட்ட குழந்தையின் தேவைகளுக்கு ஏற்ப, பொருத்தமான நிலையான ஆதரவு மற்றும் உதவியை அக்குழந்தைக்கு கற்பிக்கும் போது வழங்க வேண்டும். இந்த முறை அந்தக் குழந்தையானது வெற்றி பெற உதவும். அந்தக் குழந்தை கூடுதலான வெற்றியை அடையும்போது கற்றுக் கொள்வதற்கான முனைப்பும் அதற்கு அதிகமாகிறது.

காட்சி, கேட்டல், தொடுதல் மற்றும் அசைவு என மாணவர்களின் அனைத்துப் புலன் உணர்வுகளையும் பயன்படுத்தும் வகை யிலான செறிவான சூழலிடத்தை வடிவமைப் பாளர்களும் ஆசிரியர்களும் உருவாக்க வேண்டும். இத்தகைய சூழலிடங்கள் மாற்றுத் திறன் மாணவர்களுக்கு பலதரப்பட்ட அனுபவங்களைத் தரும். பார்வை, ஒலி, மணம், தொடுதல் உள்ளிட்ட புலன் சார்ந்த அனுபவங்கள் இத்தகைய மாணவர்களுக்கு முக்கியமானவை ஆகும். அனுபவித்தல், தொட்டு உணர்தல், வாசம் நுகர்தல், சுவை அறிதல், உருளுதல், குதித்தல், சுற்றுதல், அதிர்தல், இசை மற்றும் பலவகையான காட்சி அனுபவங்கள் மூலமான பல்புலன் சூழலிடங்கள் மாணவர்களின் புலன் உணர்வு மற்றும் புலன் அறிதல் திறன்களை மேம்படுத்து கின்றன. இத்தகைய புலன் உணர்வுகளை ஒருங்கிணைத்து புரிதலை மேம்படுத்த குழந்தை களுக்கு இந்த முறையானது உதவுகிறது.

பார்வைக் குறைபாடு உள்ள மாணவர் களுக்கு உதவக்கூடிய சூழலிட அம்சங்கள் எவையென்றால் வழிகாட்டும் அடுக்குகள், எச்சரிக்கை அடுக்குகள், பலவகைப்பட்ட மேற்பரப்புகள், பெரிய மற்றும் புடைப்பான எழுத்துக்கள், பிரெய்ல் பயன்பாடு, முரண் பட்ட வண்ணங்கள், புத்தறிவுப் பயிற்சி, அதிகப் படியான வெளிச்சம், தடையில்லாத நடை

பாதை, ஒலிசார்ந்த தகவல் ஆகியன ஆகும். மேலும் தடை ஏற்படுத்தும் பொருட்களை அகற்றும் சூழலாகவும் இது இருக்கும்.

கேட்டல் குறைபாடு உள்ள மாணவர்கள் காது கேட்கும் உபகரணங்களை பயன்படுத்து வதற்கு உதவியாக இருத்தல், சைகை மொழி, உதடு வாசிப்பு, செவி குறைபாடு உள்ள வர்களுக்கு தொலைதொடர்பியல் கருவிகள், ஒளியூட்டப்பட்ட அறிவிப்பு பலகைகள், லே அவுட் சித்திரங்கள், ஒலிசார்ந்த தகவலை காட்சி வடிவத்தில் தருதல் போன்ற சூழலிட அம்சங்களால் அவர்கள் பயன் பெறு வார்கள்.

உடல் குறைபாடு உடைய மாணவர்கள் சக்கர நாற்காலி மற்றும் ஊன்றுகோல்கள் பயன்படுத்த அனுமதி வாங்க வேண்டும். அணுகுவதற்கு எளிமையான இடப்பரப்பு, சக்கர நாற்காலியில் இருந்து மாறுவதற்கான இடம், சரிவுப்பாதை, கைப்பிடிகள், உதவிக் கான இடம், வழுக்காத தரை, எளிதாக பிடிப்பதற்கான பிடிமானம் இவற்றுடன் கருவி களையும், தொடர்பியல் சாதனங்களையும் பயன்படுத்தும் வாய்ப்புகள் இருத்தல்.

எளிமையான காட்சிப் பொருட்கள், மொழியை குறைந்த அளவில் பயன்படுத்துதல், வடிவமைப்புகளைப் பயன்படுத்துதல், எளிமை யான, வெளிப்படையான வரிசைமுறை, மற்றும் வழிகாட்டும் வரிசைமுறை போன்றவை அறிதல் குறைபாடு உடைய மாணவர்களுக்கு உதவியாக இருக்கக்கூடிய சூழலிட அம்சங்கள் ஆகும்.

இணையான கல்வி வகுப்புகள், பலவகைப் பட்ட திறன்களைக் கற்றுத் தருதல், பல்புலன் சார்ந்த தொடர்பியலைப் பயன்படுத்துதல், புதிய கருத்துகளை உள்சேர்த்துக் கொள்ளுதல் போன்றவற்றை வழங்கும் வகையில் வடி வமைப்பில் நெகிழ்வுத்தன்மை இருக்க வேண்டும். மேலும் பேச்சுப் பயிற்சியாளர், தொழில்சார் இடர்களை நீக்கும் பயிற்சியாளர் போன்ற பலவகைப்பட்ட பயிற்சியாளர்கள் ஆசிரியர்களுடன் சேர்ந்து பணியாற்றும் சூழலும் இருக்க வேண்டும்.

கட்டிடங்கள் எளிய மற்றும் தெளிவான முறையில் திட்டமிடப்பட்டு கட்டப்பட்டால், அவற்றைப் புரிந்துகொள்ள, பயன்படுத்த மற்றும் மகிழ்ச்சி அடைய பெரிய முயற்சி ஏதும் மாற்றுத்திறன் குழந்தைகளுக்குத் தேவைப்படாது. தெளிவான லே அவுட், இடங்களின் ஒழுங்கமைவு, சரியான முறையில் பயன்பாட்டு இடங்களை வகைப்பிரித்தல், எளிய வடிவங்கள், காட்சிக் குழப்பம் இன்மை ஆகிய மாற்றுத் திறன் குழந்தைகள் கட்டிடம் கட்டப்பட்டுள்ள சூழலை உள்வாங்கிக் கொள்ள உதவியாக இருக்கும். இயற்கையான ஒளி நன்றாக இருத்தல், பலவகையான அறிவிப்புப் பலகைகள், அடையாளங்கள், இடப்பகுதிகளை அடையாளப்படுத்திக் கொள்ளும் வகையிலான வித்தியாசங்கள், (அதாவது தோற்றம், வண்ணம், அளவு, வாசம் முதலான வித்தியாசங்கள்) ஆகியன ஒரு இடத்தை காட்சிரீதியாகப் புரிந்து கொள்ள உதவும்.

மாற்றுத்திறன் குழந்தைகள் கல்விசார் சூழலிடத்தில் வழக்கமான திறனுடைய சக குழந்தைகளுடன் பழகுவதற்கான வாய்ப்புகள் தரப்பட வேண்டும். பாதுகாப்பான, எளிதில் அணுகக் கூடிய கட்டமைப்புடன் கூடிய விளையாட்டு இடங்களும் கண்காணிப்பின் கீழ் உள்ள பொது இடங்களும் மாற்றுத்திறன் குழந்தைகளுக்கு ஏனைய சக குழந்தைகளுடன் உறவாட உதவியாக இருக்கும். தீவிரமான வளர்ச்சிக் குறைபாடுகள் உள்ள குழந்தை களுக்குக்கூட திறனுடைய சக குழந்தைகளுடன் பழகுவதற்கான வாய்ப்புகள் தரப்பட வேண்டும்.

சுயஉதவித் திறன்கள், வீட்டு வேலைக்கான திறன்கள், தொழில்திறன் பயிற்சி, மாற்றுத் திறன் குழந்தைகள் சுயமாக தனித்து இயங்குவதற்கு உதவி, எதிர்காலத்தில் தன்மானத்துடன் வாழ்வதற்கு உதவுதல் ஆகிய செயல்களுக்கு ஆதரவாக இருக்கும் வகையில் கல்விக்கான சூழலிடம் அமைய வேண்டும். மலம் கழிப்பதற்கான பயிற்சி, சாப்பிடுதல், குடித்தல்,



ஆடை உடுத்துதல், பல் விளக்குதல், குளித்தல், ஷேவ் செய்தல் முதலான செயல்பாடுகள் சுயஉதவித் திறன்களின் கீழ் அடங்கும். பொருட்களை வகை பிரித்தல், பேக் செய்தல், நெசவுத்தொழில், தச்சுத்தொழில், அசெம்ளிங் மற்றும் இதுபோன்ற எதிர்கால வேலைவாய்ப்புக்கான பயிற்சிகள் தொழில் திறன் என்பதில் அடங்கும். தங்களது குடும்பத்தினருக்கு உதவுவதற்காகவும் எதிர் காலத்தில் தங்களுக்குத் தாங்களே உதவிக் கொள்ளும் வகையிலும் சமையல், துணி துவைத்தல், படுக்கையை போடுதல், சுத்தம் செய்தல், ஒட்டடை அடித்தல் என வீட்டு வேலைக்கான பயிற்சிகள் இத்தகைய குழந்தை களுக்குத் தரப்பட வேண்டும்.

மாற்றுத்திறன் குழந்தைகளுக்குக் கற்பிக்கும் செயலில் பெற்றோர்கள் தொடர்ச்சியாகப் பங்கேற்பது நீண்டகால வெற்றிக்கு மிகவும் முக்கியமானதாகும். ஒவ்வொருவருக்கும் தனிப்பட்ட வகையில் தரப்படும் கல்வித் திட்டத்தில் இலக்குகளைத் தேர்ந்தெடுப்பதில் பெற்றோர்களின் பங்கேற்பு மிகவும் அவசியம். அதேபோன்று ஆசிரியர்–பெற்றோர் சந்திப்புக் கூட்டங்களிலும் பெற்றோர் பங்கேற்பது மிகவும் அவசியமாகும். தங்களது குழந்தைகளின் தனிப்பட்ட விசேஷமான பிரச்சனைகளை எதிர்கொள்வதற்கு பெற்றோர்கள் பள்ளிக்கு வந்து ஆசிரியர்களுடன் இணைந்தும் பணி புரியலாம். சமூக இணைப்புக்கான நோக்கங் களுக்கு, சிறிய சந்திப்புக் கூட்டங்களுக்கு, மாணவர்–பெற்றோர்–ஆசிரியர்–சிறப்பு நிபுணர் ஆகியோர் ஒருங்கிணைந்து பணி புரிவதற்கு இடம் தரப்பட வேண்டும். மேலும் இவ்வாறான செயல்கள் ஊக்கப்படுத்தப்பட வேண்டும்.

மாற்றுத்திறன் மாணவர்களுக்கு பாடத்திட் டத்திலேயே அன்றாட வேலைகளும் சேர்க்கப் பட்டுள்ளன. உதாரணமாக கடைக்குச் செல்லுதல், சாலையைக் கடத்தல், பொது வாகனத்தைப் பயன்படுத்துதல் ஆகியன பாடதிட்டமாகவே உள்ளன. சமுதாய நடவடிக்கைகள் நடைபெறும் இடங்களுக்கு அருகிலேயே கல்விக்கூடம் கட்டப்பட வேண்டும். இத்தகைய திறன்களைக் கற்பிப் பதற்கு ஆதரவான சூழலிடங்களை பள்ளிகளும் மேம்படுத்த வேண்டும். சமுதாயத்துடன் தானாகவே மாணவர்கள் ஒருங்கிணைய இது வழிவகுக்கும். மேலும் மாற்றுத்திறன் குழந்தை களுக்கு வேலைவாய்ப்பையும் பயிற்சியையும் இது ஏற்படுத்தித் தரும்.

மாற்றுத்திறன் குழந்தைகள் சூழலிடத்தில் உள்ள அபாயங்களுக்கு எளிதில் ஆட்படு கின்றனர். தொடர்ச்சியான கண்காணிப்பு என்பது கடினமான விஷயம்தான். ஆபத்துக் காரணிகளைக் கண்டறிய சூழலிடமும் கவனமாக ஆராயப்பட்டு பராமரிக்கப்பட வேண்டும். கல்விசார் சூழலிடங்களில் பாது காப்பு அம்சம் சிறப்பாக இருக்க ஆபத்துக் காலங்களில் வெளியேறும் இடங்கள், படிக் கட்டுகள், உச்சிகள், கூர்மையான ஓரங்கள், வழுக்காத மேற்பரப்புகள், மின்சார அவுட் லெட், உடையக்கூடிய பொருட்கள், நச்சில்லாத பொருட்கள் முதலானவற்றின் மீது கூடுதல் கவனம் செலுத்தப்பட வேண்டும்.

கல்விக்கான சிறப்பு தேவைகளோடு மாற்றுத்திறன் குழந்தைகளுக்கு அவர்களின் கற்றலை பாதிக்கக்கூடிய நடத்தைசார் பிரச் சனைகள் பலவும் உள்ளன. பாதுகாப்பான சூழலிடம், அமைதியான அறைகள், கண் காணிப்புக்கான இடங்கள், நீடித்து உழைக்கும் வலுவான ஃபிட்டிங்குகள் ஆகியன மேலே கூறிய நடத்தைசார் பிரச்சனைகளை ஆசிரி யர்கள் எதிர்கொள்ள உதவியாக இருக்கும்.

மாற்றுத்திறன் குழந்தைகள் அவரவர்களின் தனிப்பட்ட கல்வித் திட்டங்களுக்கு ஏற்ப மதிப்பீடு செய்யப்பட வேண்டும். கற்பித்தலின் பலனைத் தெரிந்து கொள்ள மாணவர்களின் எதிர்வினைகளை முறையாக பதிவு செய்து ஆசிரியர்கள் அவற்றை மதிப்பீடு செய்ய வேண்டும். பல்வேறுபட்ட உபகரணங்களையும் கல்விசார் செயல்திறனை ஆவணப்படுத்த தேவையான தகவல் பேப்பர்களையும் ஆசிரியர் பயன்படுத்துவதற்கு ஏற்ற இடங்கள் அளிக்கப்பட வேண்டும்.

## விவாதம்

பரந்துபட்ட நோக்கில் பார்த்தோமானால் கல்வி என்பது மாணவர்கள் அறிவையும் திறன்களையும் வளர்த்துக் கொள்வதற்கான சூழலையும் வாய்ப்புகளையும் தரும் ஒரு அமைப்பே ஆகும். மாணவர்கள் கற்றுக் கொண்ட இத்தகைய திறன்களை சமுதாயத்தில் தங்களின் சொந்தக் காலில் வாழ்க்கையை நடத்துவதற்காகப் பயன்படுத்துவார்கள். இந்த ஒரேவிதமான இலக்குகள் மாற்றுத்திறன் நபர்களுக்கும் இயல்பான நபர்களுக்கும் பொருந்தும். மாற்றுத்திறன் குழந்தைகளைத் தனிமைப்படுத்தும் சூழலிடம் அவர்களுக்கு பிரிவினையைக் கற்றுத் தருகிறது. அதேசமயம் அனைவரையும் உள்ளடக்கும் கல்விச் சூழலிடம் அவர்களுக்கு அனைவரையும் உள்ளடக்கும் அணுகுமுறையைக் கற்றுத்தருகிறது. அனைத்து குழந்தைகளும் முதலில் கற்பவர்கள்தான். பிறகுதான் அவர்களது மாற்றுத்திறனானது வெளிவருகிறது. அனைவரையும் உள்ளடக்கும் சூழலிடத்தில் அவர்களது கல்வியானது அவர்களால் என்ன செய்ய முடியுமோ அவற்றின் அடிப்படையில் அமைய வேண்டும். அவர்களால் முடியாததை அவர்கள் மீது திணிக்கக் கூடாது. அப்போதுதான் அவர்கள் வெற்றிகரமான அனுபவத்தை அடைவார்கள். ஒவ்வொரு குழந்தையின் அனுபவத்தையும் அதிகபட்ச செறிவுள்ளதாக மாற்ற, ஒட்டுமொத்த கட்டிடத்தின் உட்புறமும் வெளிப்புறமும் கவனத்தில் கொள்ளப் பட வேண்டும். இந்த அக,புற கட்டிடமே மாபெரும் கற்றல் உபகரணமாகும். அதற்குள் தான் பிற உபகரணங்களும் ஆசிரியர்களும் கற்பித்தலில் ஈடுபடுகின்றனர். இச்சூழலில் தான் ஆசிரியர்கள் அனுபவங்களை உருவாக்குகின்றனர். இவை குழந்தைகளின் ஆர்வத்தைத் தூண்டி கற்பதற்கு வழிநடத்தி அவர்களை பிறர் உதவியின்றி தனித்து செயல்பட வைக்கிறது. இங்கு தரைகள், சுவர்கள், மேற்கூரைகள், கற்றல் இடங்கள், தாழ்வாரங்கள், கழிவறைகள் என அனைத்தும் முக்கியமானவை. இவை கற்பிக்கும் உபகரணத்தின் பயனுள்ள பாகங்கள் என்றால் மிகையன்று.

அனைவரையும் உள்ளடக்கும் வடிவமைப்பை வளர்த்தெடுக்க கல்விசார் சூழலிடங்களே மிகப் பொருத்தமானவை ஆகும். மாற்றுத்திறன் நபர்களையும் உள்ளடக்கிய அமைப்பை உருவாக்குவதற்கு கல்வியாளர்கள்தான் முன்வர வேண்டும். பௌதீகரீதியிலான இடங்களில் மட்டுமே உள்ளடக்கிய அணுகுமுறையை பயன்படுத்துவதோடு உபகரணங்கள், பாடத்திட்டம் மற்றும் பயிற்றுவித்தலிலும் இந்த அணுகுமுறையைக் கடைபிடிக்க வேண்டும். அனைவரையும் உள்ளடக்கும் வடிவமைப்பு மூலம் வெற்றிகரமான கற்றல் சூழ்நிலையை உருவாக்கி உள்ள பல பள்ளிகள் மற்றும் பல்கலைக்கழகங்களில் கல்வியைத் தாண்டி பன்மைக் கலாச்சாரத்திற்கும் புறம் ஒதுக்கல் இல்லாத தன்மைக்கும்கூட உள்ளடக்கல் முறை உதவி உள்ளது. தங்களது வளரும் பருவங்களில் அனைவரையும் உள்ளடக்கும் கல்வியின் அனுபவத்தின் வாயிலாக உள்ளடக்கும் சூழலிட பலன்களை மாணவர்கள் கற்றறிகின்றனர். இது அனைவரையும் உள்ளடக்கும் சமுதாயத்திற்கு வழிவகுக்கிறது. இந்தியாவில் அனைவரையும் உள்ளடக்கும் கல்வி முறையை முன்னெடுத்துச் செல்லும்போது, தனி நபர்களின் வித்தியாசங்களை மதிக்கின்ற, கொண்டாடுகின்ற ஒரு சமுதாயம் குறித்த பார்வையை கல்விப்புல சூழலிடங்கள் தொடர்ந்து தருவதை நாம் உறுதி செய்தாக வேண்டும். •

# மாற்றுத் திறனாளிகளுக்கான நிதி உள்ளடக்கம்

– பி.சி. தாஸ்

இந்திய அரசியலமைப்பு சட்டத்தின் வழிகாட்டு நெறிகளின் 39வது ஷரத்தின்படி மக்களுடைய பணி மற்றும் வேலை வாய்ப்புக்கு முக்கியத்துவம் அளிக்கப்பட்டுள்ளது. அதன் படி எல்லாக் குடிமக்களும் போதிய வாழ் வாதாரம் பெறுவதற்கு ஆண்களுக்கும், பெண்களுக்கும் சமமான வாய்ப்புகள் வழங்க வேண்டும் என்று அரசுக்கு கட்டளை யிடப்பட்டுள்ளது. 41வது ஷரத்தின்படி அரசு தனக்குட்பட்ட பொருளாதார திறமை மற்றும் வளர்ச்சியின் அடிப்படையில் மக்களுக்கு வேலைக்கான உரிமை வழங்க வேண்டும் என்றும் 42வது ஷரத்தின்படி மக்கள் செய்யும் பணிசார் சூழ்நிலைகள் நியாயமானதாகவும் மனிதாபிமானமுள்ளதாகவும் இருக்கவும் அரசு தகுந்த நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கூறுகிறது. இந்தக் கட்டுரையில் நாம் முக்கியமாக உடல் ஊனமுற்றவர்களைபற்றி விவாதிக்கிறோம்.

உடல் ஊனமுற்றவர் என்பவர் தகுந்த மருத்துவ அமைப்பிலிருந்து ஒரு நபர் ஏதாவது ஒரு உடல் ஊனத்திலாவது 40 சதவிகிதம் வரை பாதிக்கப்பட்டிருக்கிறார் என்று சான்று பெற்றிருக்க வேண்டும். உடல் ஊனம் உள்ள நபருக்கு சமூக பொருளாதார பங்களிப்பு பெறும் வண்ணம் சம வாய்ப்பு அளிப்பதற்காக மத்திய அரசு மூன்று சட்டங்களை இயற்றியுள்ளது. அவையாவன: இந்திய மறுவாழ்வு கவுன்சில் சட்டம் 1992, உடல் ஊனமுற்றவர்கள் சட்டம் 1995 மற்றும் ஆட்டிசம், மனவளர்ச்சிக் குறைபாடு, மனநலம் பாதிப்பு மற்றும் ஒன்றுக்கும் மேற்பட்ட ஊனமுள்ளவர்கள் நலனுக்கான தேசிய அறக்கட்டளை சட்டம் 1995. இது அல்லாமல் இந்தியா, 2008ல் ஏற்றுக்கொண்டுள்ள உடல் ஊனமுற்றவர்களின் உரிமைகளுக்கான, ஐக்கிய நாடுகள் மாநாடு 2006ன் படி உடல் ஊனமுற்றவர்கள் சமுதாயத்தில் மற்றவர் களோடு இணைந்து சம அளவில் முழுமை யாகவும், சிறப்பாகவும் பங்கு கொள்ள வேண்டும் என்று கூறுகிறது. அதுபோலவே, உடல் ஊனமுற்றவர்களுக்கான தேசிய கொள்கை 2006ன்படி உடல் ஊனமுற்றவர் கள் விலைமதிப்பற்ற மனித வளம் என்று அங்கீகரிக்கப்பட்டு சமுதாயத்தில் கண்ணிய மான வாழ்வு பெற அவர்களுக்கு சம வாய்ப்பு அளிக்கப்படும் என்று கூறுகிறது. அதன்படி சமுதாயத்தில் அனைவரும் பங்கேற்கும் வண்ணம் இருக்க வேண்டும் என்று கூறுகிறது.

2011 மக்கட்தொகை கணக்கெடுப்பின் படி இந்தியாவில் 2,68,00,000 மக்கள் உடல் ஊனமுற்றவர்களாக அறியப்பட்டிருக்கிறது. இதில் ஆண்கள் 1,49,90,000 மற்றும் பெண்கள் 1,18,20,000 பேர். இதில் 1,86,30,000 பேர் கிராமப் பகுதிகளிலும் 81,80,000 பேர் நகர்ப்புறங்களிலும் வசிக்கின்றனர். இந்தத் தகவல்களின்படி சுமார் 1,34,00,000 பேர் (கிராமப்புறங்களில் 88,00,000 பேர் மற்றும் நகர்ப்புறங்களில் 46,00,000 பேர்) பணியமர்த்தப் படக்கூடிய வயதில் உள்ளனர். இந்த 1,34,00,000 உடல் ஊனமுற்று பணியில் அமர்த்தப்படக்கூடிய வயதில் இருப்பவர்களில் 78,00,000 பேர் ஆண்கள்; 56,00,000 பேர் பெண்கள். இது அல்லாமல் உடல் ஊனமுற்றவர்களின் மொத்த மக்கள் தொகையில் 1,46,00,000 பேர் கல்வியறிவு இல்லாதவர்கள். இதன்படி உடல் ஊனமுற்றவர்களின் பெருமளவிலான மனித வளம் நமது பொருளாதாரத்திற்கு அளிக்கக்கூடிய பங்கினை நாம் குறைத்து மதிப்பிட முடியாது.

நிதிசார் பங்களிப்பு என்பது சமுதாயத் தில் உள்ள நலிந்த மக்களுக்கு அவர் களுக்கு கட்டுபடியான விலையில் அளிக்கப் படும் பலவிதமான நிதிசார் சேவைகளும்,

---

**பி.சி. தாஸ்**, ICAS, தலைவர் மற்றும் மேலாண்மை இயக்குனர், தேசிய மாற்றுத் திறனாளிசார் நிதி மற்றும் மேம்பாட்டு வாரியம்.

பொருட்களும் ஆகும். இதில் வங்கிப் பொருட்கள் மற்றும் காப்பீடு, ஓய்வூதியம் மற்றும் பலதரப்பட்ட கடன்கள் போன்ற நிதிச்சேவைகள் அடங்கும். சமுதாயத்தின் நலிந்த வர்க்கத்தினருக்கு உறுதிசெய்யப்பட்ட நிதி மற்றம் சமுதாய பாதுகாப்பு அளிப்பதற்கு தேவையான அனைவரையும் உள்ளடக்கிய சமுதாயத்தை உருவாக்குவதற்கான திட்டங்களில் நிதிசார் பங்களிப்பு மிகவும் முக்கியமானதாகும். ஆகவே, இந்திய அரசு, நிதிசார் பங்களிப்பின் அவசியத்தை உணர்ந்து எல்லோருக்கும் நிதிசார் பங்களிப்பு வழங்க வலியுறுத்தி வருகிறது. இதில், தேசிய அளவிலான முதன்மை திட்டங்களாக ஜனதன் திட்டம், ஏழைகளுக்கு மருத்துவ காப்பீடு, முத்ரா கடன்கள் ஆகியவற்றை குறிப்பிடலாம். நிதிசார் பங்களிப்பு அரசின் சமுதாய நல திட்டங்களுக்கும் ஏதுவாக உள்ளது. நிதிசார் பங்களிப்பில் பல்வேறு திட்டங்களின் ஏழைமக்களுக்கு அளிக்கப் படும் ஊதியம், உதவித்தொகை போன் றவைகள், எளிய பயனளிக்கக்கூடிய குறைந்த செலவில் செய்யப்பட்டு வெளிப்படையாகவும் தக்கவர்களுக்கும் பயன்கள் போய் சேரும்.

## உடல் ஊனமுற்றவர்கள் நிதிசார் பங்களிப்பில் விலக்கப்பட்டவர்கள்

உடல் ஊனமுற்றவர்கள், உண்மையிலேயே மிகவும் பாதிப்படைந்தவர்களாகவும், ஏழை களிலும் மிக ஏழ்மையாக நாம் கருதுவது ஏற்புடையதாக இருக்கும். உடல் ஊனத் திற்கும், ஏழ்மைக்கும் நெருங்கிய தொடர்பு உண்டு. பெரும்பான்மையான ஊனமுற்ற வர்கள் ஏழைகளாகவும் இருக்க வாய்ப் புண்டு. அதைப்போலவே ஏழைகளில் பலர் ஊனமுற்றவர்களாக இருக்கக்கூடும். உடல் ஊனமுற்ற பெண்களின் நிலைமை இதைவிட மோசமானதாகும். உடல் ஊன முற்றவர்களுக்குள்ள பல குறைகளான அங்கு மிங்கும் நடமாடும் வசதி, இயற்கையான தடைகள், நிதிசார்ந்த பொருட்கள் பற்றிய மிகக்குறைந்த அறிவு மற்றும் இங்கொன்றும், அங்கொன்றுமாக இருப்பவர்கள் இணைந்து தனக்குத்தானே உதவிக் குழுக்களை அமைக்க முடியாமை ஆகிய காரணங்களால் இவர் களுக்கு நிதிசார் பங்களிப்பை அளிப்பது மற்ற நலிவடைந்த மக்களை விட கடினமான செயலாகும்.

உடல் ஊனமுற்றவர்கள் நிதி உதவி, கல்வி மற்றும் சுய வேலைக்கு கடன்கள் பெறுவது ஆகியவை மிகவும் கடினமாக உள்ளதால் இந்திய அரசு தேசிய உடல் ஊன முற்றோர்க்கான நிதி மற்றும் மேம்பாட்டு வாரியம் ஒன்றை ரூ.400 கோடி அனுமதிக் கப்பட்ட முதலீட்டுடன் ஜனவரி 24, 1997ஆம் ஆண்டில் துவக்கியது. இது, கம்பெனிகள் சட்டம் 1956ன் பிரிவு 25ன் கீழ் (கம்பெனிகள் சட்டம் 2013ன் 8ஆம் பிரிவின் அடிப்படையில்) லாபம் ஈட்டு அல்லாத நிறுவனம் என்று பதிவு செய்யப்பட்டுள்ளது. இந்த வாரியம் 18 வயதிற்கு மேற்பட்ட, 40 சதவிகிதத்துக்கும் மேற்பட்ட உடல் ஊனமுள்ள இந்திய குடிமக்களின் சலுகை கடன்களை வழங்கு கிறது. இந்த வாரியத்திலிருந்து சகாயக் கடன் பெற உடல் ஊனமுற்றவர்களுக்கு அதிக பட்ச வயது வரம்பு கிடையாது. இந்த வாரியத்தின் முக்கியமான திட்டங்கள் என்பன (i) உடல் ஊனமுற்றவர்களுக்கு தகுதி சார்ந்த செயல்களுக்கு சலுகைக் கடன்கள் (ii) தகுதி சாரா செயல்களுக்கு மானியம் வழங்குதல்.

### *1. தகுதி சார்ந்த*

*(i)* **சுய**தொழில் கடன்கள்: இந்தத்திட்டத்தின் கீழ் உடல் ஊனமுற்றவர்கள் சொந்த தொழில் துவக்குவதற்கு 5–8 சதவிகித வட்டியில் ரூபாய் 25,00,000 வரை கடன் வழங்கப்படும். இந்தக் கடனை அதிகபட்சமாக பத்து வருடத்திற்குள் திருப்பிக் கொடுக்கலாம்.

*(ii)* **கல்விக் கடன்:** உடல் ஊனமுற்றவர்கள் உயர் கல்வி பெறுவதற்கு 4 சதவிகித வட்டி என்ற சலுகை அளவில் கல்விக் கடன் வழங்கப்படுகிறது. இதன் கீழ் உடல் ஊனமுற்றவர்கள் இந்தியாவில் கல்வி பெற ரூ.10,00,000 வரையிலும், வெளிநாடுகளில் கல்வி பெற ரூ.20,00,000 வரையிலும் கடன் பெறலாம். இந்தக் கடனை அதிகபட்சமாக 7 ஆண்டுக்குள் திருப்பிச் செலுத்த வேண்டும். கடனை திருப்பிக் கொடுப்பது, படித்து

முடித்த பின் ஒராண்டிற்குப்பிறகு அல்லது வேலை கிடைத்த 6 மாதத்திற்குப்பின் துவங்க வேண்டும்.

*(iii)* **குறு கடன்கள்:** இந்தக் கடன் வழங்கப்படுவதன் நோக்கம் உடல் ஊன முற்ற மக்கள் தங்களுடைய வருவாயை பெருக்கிக் கொள்வதற்கான செயல் திட்டங் களை துவக்குவதாகும். இந்தத் திட்டம் பெரும்பாலும் தன்னார்வ தொண்டு நிறு வனங்கள் மூலம் செயல்படுத்தப்படுகிறது. உடல் ஊனமுற்றவர்களுக்கு பகிர்ந்தளிக்க ஒரு தனியார் தொண்டு நிறுவனம் ரூ.10 இலட்சம் வரை கடன் பெறலாம். உடல் ஊன முற்றவர் ஒருவர் குறு கடனாக ரூ.50,000 வரை பெறலாம். இதன்படி ஒரு தன்னார்வ தொண்டு நிறுவனம் உடல் ஊனமுற்ற 20 பேருக்கு உதவி செய்யலாம். இதற்குண்டான வட்டி ஐந்து சதவிகிதம் மட்டுமே. இந்தக் கடனை அதிகபட்சமாக மூன்று வருடத்திற்குள் செலுத்த வேண்டும்.

*2. தகுதி சாராத:*

*(i)* **உடல் ஊனமுற்றவர்களுக்கு திறன் வளர்ப்பு பயிற்சி:** இந்த திட்டத்தின்கீழ் உடல் ஊனமுற்றவர்களுக்கான நிதி மற்றும் மேம்பாட்டு வாரியம் உடல் ஊனமுற்றவர் களின் திறன் மேம்பாட்டு பயிற்சிக்காக மானியங்களை வழங்குகிறது. இது அல்லா மல், பயிற்சி காலத்தில், உடல் ஊனமுற்ற பயிற்சியாளர்களுக்கு ரூ.2,000 ஒவ்வொரு மாத மும் உதவித்தொகையாக வழங்கப்படுகிறது.

*(ii)* **கல்விக் கட்டண உதவி:** அமைச்சகம், இந்த வாரியத்தின் மூலம் உடல் ஊனமுற்றவர் களுக்கு கல்வித்தொகை உதவி வழங்கும் திட் டத்தை அளித்துள்ளது. தற்போது, இந்த வாரியம் செயல்படுத்தும் கல்வி, உதவித் தொகை அறக்கட்டளை நிதியம் மூலம் 2500 மாற்றுத் திறனாளிகள் தொழில்நுட்ப மற்றும் தொழில்சார் கல்வித்தொகை பெற உதவி வழங்கி வருகிறது.

இந்த வாரியம் 36 மாநிலங்களில் மாநில அரசின் அமைப்புகள் மூலம் உதவிகளை வழங்குகிறது. உடல் ஊனமுற்றவர்களுக்கு சலுகைக் கடன்களை வழங்க இந்த வாரியம் ஐந்து பொதுத்துறை வங்கிகளுடனும், 18 வட்டார ஊரக வங்கிகளுடனும் வசதிகளை ஏற்படுத்தியுள்ளது. கடந்த நான்கு ஆண்டு களாக இந்த வாரியம், மிகச்சிறப்பாக செயல் படும் அங்கீகாரத்தை பெற்றிருப்பதும் 2015–16ஆம் ஆண்டிற்கும் இதே அங்கீகாரத்தை பெற இருப்பதும், இது செயல்படும் திறமையை விளக்குகிறது.

1. **கடன் வழங்குதல்:** இந்த வாரியம் துவங்கி 1,26,000 உடல் ஊனமுற்றவர்களுக்கு கடன்கள் வழங்கு திட்டத்தின்கீழ் ரூ.694.29 கோடி வழங்கி உள்ளது.

2. **திறன் வளர்ப்பு பயிற்சி:** உடல் ஊன முற்ற 36,616 பேருக்கு திறன் மேம் பாட்டு பயிற்சிக்காக வாரியம் இது வரை ரூ.46.21 கோடி ரூபாய் மானியம் அளித்துள்ளது. 2015–16ஆம் ஆண் டிற்கு, திறன் வளர்ப்பு திட்டத்திற்கு சுமார் 17000–20000 உடல் ஊன முற்றவர்களுக்கு வசதி அளிக்க இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

3. கல்வி உதவித்தொகை: 2011–12 தொடங்கி, இதுவரை இந்த வாரியம், கல்வி உதவித் தொகை, அறக்கட்டளை நிதியின் மூலம் தொழில்நுட்ப மற்றும் தொழில்சார் உயர் கல்விகளை பெற ரூ.47.94 கோடி வழங்கி உள்ளது. இதில், 7,117 பேருக்கு முதல் முறையாகவும், 1,097 பேருக்கு அடுத்த கட்ட உதவித் தொகை அளிக்கப்பட்டுள்ளது.

உடல் ஊனமுற்றவர்களுக்கான நிதி மற்றும் மேம்பாட்டு வாரியம், கல்வி உதவித் தொகையின் கீழ் 2009–10லிருந்து இது நாள் வரை தொழில்நுட்ப மற்றும் தொழில்சார் கல்விக்கு ரூ.3.51 கோடி அளித்துள்ளது. இதில் புதியவர்கள் 2827 பேருக்கும் தொடர்ந்து கல்வி பெறுபவர்களுக்கு 101 பேருக்கும் உதவித்தொகை அளிக்கப்பட்டுள்ளது. இந்த வாரியத்தை விரிவாக்கவும் இன்னும் பல

மாற்றுத்திறனாளிகளுக்கு நிதிசார் பங்களிப்பை வழங்கவும் கீழ்வரும் நடவடிக்கைகள் மேற் கொள்ளப்பட்டுள்ளன:

*(i)* **ஏற்கனவே பெற்ற கடனுக்கு மானிய வசதி:** இந்த வாரியம் மாற்றுத் திறனாளி களுக்கு அதிகாரம் அளிக்கும் துறையுடன் இணைந்து ஏற்கனவே கடன் உதவி பெற்ற மாற்றுத் திறனாளிகளுக்கு கடன் பெற்ற தொகையில் 35 சதவிகிதம் மானியம் வழங்க திட்டமிட்டுள்ளது. மத்திய அரசின் ஒப்புதலு டன் இது செயல்படுத்தப்படும்.

*(ii)* **மற்ற வங்கிகளோடு இணைந்து செயல் பாடு:** உடல் ஊனமுற்றவர்களுக்கான நிதி மற்றும் மேம்பாட்டு வாரியம், தங்களுடைய செயல்பாடுகளை அதிகரிக்க பல வங்கிகளோடு ஒப்பந்தங்கள் மேற்கொண்டு மாற்றுத் திறனாளிகள் அவர்களுடைய கிளைகளின் மூலம் சலுகைக் கடன்களை பெற வழிவகை செய்துள்ளது. பஞ்சாப் நேஷனல் வங்கி, ஆந்திரா வங்கி, ஐடிபிஐ வங்கி, பரோடா வங்கி, ஐதரபாத் ஸ்டேட் வங்கி ஆகிய ஐந்து பொதுத்துறை வங்கிகளோடு இந்த வாரியம் ஒப்பந்தம் செய்துள்ளது. இந்த பொதுத் துறை வங்கிகள் மட்டுமல்லாமல் 18 வட்டார கிராமப்புற வங்கிகளோடும் ஒப்பந்தம் செய்யப்பட்டுள்ளது. அவை, உத்தரபிரதேசம், மத்திய பிரதேசம், உத்தராகண்ட், குஜராத், ஹரியானா, மஹாராஷ்டிரம் மற்றும் அஸ்ஸாம் மாநிலங்களில் உள்ளன.

*(iii)* **வங்கிகள் அல்லாத நிதி நிறுவனங்கள் மற்றும் குறுகடன் வழங்கு நிறுவனங்கள்:** தொலைதூர கிராமப்பகுதிகள் அனைத்திலும் உள்ள மாற்றுத் திறனாளிகளுக்கு பயனளிக்க அந்த பகுதிகளில் செயல்படும் வங்கிகள் அல்லாத நிதி நிறுவனங்கள் மற்றும் குறுகடன் வழங்கு நிறுவனங்கள் மிகவும் பயனுள்ளவை களாக அமையும். இந்த அமைப்புகளோடு ஒப்பந்தங்கள் செய்துகொள்ள விதிகளை தளர்த்துமாறு மத்திய ரிசர்வ் வங்கியிடம் கோரப்பட்டுள்ளது. இந்த அமைப்புகள் மூலம் மாற்றுத் திறனாளிகளுக்கு சலுகைக் கடன் வழங்கப்பட உள்ளன.

*(iv)* **மாற்றுத் திறனாளிகளுக்கான வேலை வாய்ப்பு வலைதளம்:** மத்திய அரசின், மாற்றுத் திறனாளிகளுக்கு அதிகாரமளித்தல் துறையுடன் இணைந்து உடல் ஊனமுற்றவர்களுக்கான நிதி மற்றும் மேம்பாட்டு வாரியம், ஒரு நவீன வேலைவாய்ப்பு வலைதளத்தை உருவாக்கி யுள்ளது. இதில் வேலை வாய்ப்புகள், சுய வேலை வாய்ப்புக்கான கடன் வசதிகள், இலவச திறன் மேம்பாட்டு பயிற்சிகள் ஆகியவை களை ஒரே இடத்தில் பார்க்கலாம். இந்த வலைதளம், 27.1.2016 அன்று மத்திய சமூக நீதி மற்றும் அதிகாரமளித்தல் அமைச்சரால் துவக்கப்பட்டது. மாற்றுத் திறனாளிகளுக்கு கிடைக்கக்கூடிய பலதரப்பட்ட நிதிசார் பொருட்களை அளிப்பதன் மூலம் அவர் களுக்கு நிதிசார் தேவைகளை வேகமாக அளிக்க இது ஒரு பெரிய முயற்சியாகும்.

மத்திய அரசு மாற்றுத் திறனாளிகளுக்கு அதிகாரமளித்தல் துறையின் மூலம் அவர் களுக்கு நிதிசார்ந்த பங்களிப்பை வழங்கவும், ஒட்டுமொத்த நலனுக்காகவும், பல முக்கிய முடிவுகளை எடுத்துள்ளது.

– பத்து சதவிகித நலிந்த வர்க்கத்தினருக் கான குறிக்கோளின்படி வங்கிகள் வழங் கக்கூடிய முதன்மைத் துறை கடன்களில் மாற்றுத் திறனாளிகளை இணைப்பது.

– ஆண்டிற்கு ரூ.350ல் கிடைக்கும் ஸ்வாலம்பன் சுகாதார திட்டத்தில் மாற்றுத் திறனாளிகளை இணைப்பது.

– மாற்றுத் திறனாளிகளுக்கு மெட்ரிக் படிப்பிற்கு முன்பும் அதற்கு பிறகுமான கல்விக்கு உதவித்தொகை வழங்குதல்.

– உடல் ஊனமுற்றவர்கள் உயர் கல்வி பெற கல்வி உதவித்தொகை.

– மாற்றுத் திறனாளிகளுக்கான அணுகக் கூடிய இந்திய திட்டம் துவக்கம்.

– மாற்றுத் திறனாளிகளுக்கு திறன்சார் பயிற்சி வழங்கும் தேசிய செயல்திட்டம் துவக்கம். •

# மாற்றுத்திறனாளிகளுக்கான சமூக உள்ளடக்கம்: பிரச்சனைகளும் தீர்வுகளும்

– டாக்டர் சந்தியா லிமாயெ

**ச**மூக உள்ளடக்கம் என்பது சமூக விலக்கம் என்பதற்கு நேர் எதிரான கருத்தாகும். சமூக விலக்கத்திற்கு அதாவது சமூகத்தில் இருந்து விலக்கி வைப்பதற்கு சாதகமாக உள்ள சூழ்நிலைகளையும் பழக்க வழக்கங்களையும் மாற்றுகின்ற நேர்மறையான செயல்பாடாக சமூக உள்ளடக்கம் இருக்கின்றது. உலக வங்கி சமூக உள்ளடக்கம் என்பதை "தங்களது அடையாளத்தின் அடிப்படையில் பாதக மான விளைவுகளை எதிர்கொள்ளும் மக்கள், சமுதாயத்தில் மற்றவர்களைப் போன்று பங்கேற்பதற்காக தங்கள் திறமை, வாய்ப்பு மற்றும் சுயமரியாதை ஆகியவற்றை மேம் படுத்திக் கொள்ளும் செயல்வழிமுறை" என வரையறுக்கிறது.

சர்வதேச ரீதியில் மாற்றுத்திறனாளிகள் அதிக எண்ணிக்கையிலான சிறுபான்மை குழுவினராக அங்கீகரிக்கப்பட்டு வருகின் றார்கள். புறக்கணிப்பு, இழப்பு, பிரிவினை மற்றும் விலக்கப்படுதல் ஆகியவற்றுக்கு எளிதில் உள்ளாகக்கூடியவர்களாக இவர்கள் இருக்கின்றார்கள். 20ஆம் நூற்றாண்டின் பிற்கால ஐம்பதாண்டு காலகட்டத்தில் பெரும்பான்மையான நாடுகள் மாற்றுத்திறன் நபர்களுக்கு (PWD) ஏதோ ஒருவிதமான உதவியை அளித்து வந்தன. அரசு மற்றும் அரசு சாராத நிறுவனங்களின் முயற்சியால் மனித உரிமைகளின் கண்ணோட்டத்தில் சிகிச்சை மற்றும் மறுவாழ்வுக்கு அறநிலையம் மற்றும் நிறுவன பராமரிப்பு அளிக்கப்பட்டது. இந்தியா சுதந்திரம் அடைந்த பிறகு இந்திய அரசாங்கம் இத்தகைய குறிப்பிட்ட எண்ணிக்கையிலான விளம்புநிலை குழுவினருக்கான பொறுப்பு தனக்குத்தான் உள்ளது என அங்கீகரித்தது. மாற்றுத்திறன் நபர்களின் நல்வாழ்வுக்கும் மறுவாழ்வுக்கும் அரசாங்கம் பலவிதமான திட்டங்களை வகுத்தது.

மாற்றுத்திறன் நபர்கள் பலதரப்பட்ட தடைகளைச் சந்தித்து வருகிறார்கள். சமூக உள்ளடக்கலை தடுக்கக்கூடிய மனப்பாங்கு, உடலியங்கல், சமூகவியல் சார்ந்த தடைகளாக இவை உள்ளன. ஊனம் ஒரு சமூகக் கறை என்பது போன்ற பார்வையில் சமுதாயம் மாற்றுத்திறன் நபர்களை எதிர்மறையாக பார்க்கின்றது. இந்த மனப்பாங்கு அவர்களின் முன்னேற்றத்திற்குத் தடையாக உள்ளது. ஊனம் உள்ள நபருக்கு அந்த ஊனமானது அவர் கடந்த காலத்தில் செய்த பாவம் அல்லது விதியால் ஏற்பட்டது என சமுதாயம் நம்புகிறது. இந்த ஊனம் கடவுள் அவருக்கு அளித்த தண்டனை என்பதால் இந்த நிலை மையை யாராலும் மாற்ற முடியாது என்றும் சமுதாயம் நம்புகிறது. இத்தகைய தடைகள் அனைத்தும் ஒன்று சேர்ந்து ஏற்படுத்தும் தாக்கமானது மாற்றுத் திறன் நபர்களை பெரும்போக்கு சமுதாயத்தில் இருந்தும் பொருளாதார நடவடிக்கையில் இருந்தும் விலக்கி வைப்பதாக முடிகின்றது. இயல்பான நபர்களோடு ஒப்பிடும்போது மாற்றுத்திறன் நபர்கள் அன்றாட வாழ்வில் பல அம்சங்களில் பாதகமான விளைவுகளை அனுபவிக்கின்றனர். மாற்றுத்திறன் நபர்கள் அனுபவிக்கும் இந்தப் பாதகமான விளைவுகள் அவர் களது வாழ்க்கைத் தரத்தையும் அவர்களது குடும்பத்தினரின் வாழ்க்கைத் தரத்தையும் குறைக்கின்றன. பலர் தாங்கள் தனிமைப் படுத்தப்பட்டுள்ளதாக, சமுதாயத்திற்கு வேண்டாதவர்களாகவும் நினைக்கின்றார்கள். சமுதாயமும் இவர்களை பாரம் என்றே கருது கின்றது. இவர்களது குடும்பத்தினர்களும் பெற்றோர், குழந்தைகள், உடன்பிறந்தோரும் எதிர்மறையான மனப்பாங்கு, வறுமை மற்றும்

**டாக்டர் சந்தியா லிமாயெ,** உதவிப் பேராசிரியர், மாற்றுத்திறன் ஆய்வு மற்றும் நடவடிக்கை மையம், டாடா சமூக அறிவியல் நிறுவனம், மும்பை.

சமூக விலக்கம் ஆகியவற்றையே எதிர்கொண்டு அனுபவிக்கின்றனர். தங்களுக்குத் தாங்களே உதவி செய்து கொள்ளக்கூடிய ஆதரவைப் பெற வேண்டிய சமயத்தில் சமுதாயத்தினருடன் போராடவே இவர்களுக்கு நிறைய நேரம் செலவாகிவிடுகின்றது என இவர்கள் எண்ணு கின்றனர்.

தனிநபர் உறவு, நபர்களுக்கு இடையில் உறவு, சமுதாய உறவு என அனைத்து நிலை களிலும் முழுமையான சமுதாயவாழ்வை வாழ்வதில் இருந்து விலக்கி வைப்பதன் மையச் செயல்பாடு விளிம்புநிலையாக்குதல் ஆகும். விளிம்பு நிலையாக்குதலுக்கு சமு தாய கட்டமைப்பில் பல அடிப்படைகள் உள்ளன. ஊனத்தால் பலவித பாதகமான விளைவுகளை எதிர்கொள்ளும் குழுவினரின் பிரச்சனைகளை பல பரிமாணங்களில் புரிந்து கொள்ள வேண்டும். சாதி, இனம், மதம், இருப்பிடம், பிராந்தியம் முதலான சமுதாயக் கூறுகளை பாலினப் பரிமாணத்தில் இணைத்துப் பார்த்துதான் புரிந்து கொள்ள முடியும். ஊனம் மற்றும் பாலினம் இரண்டும் உடல்ரீதியான கட்டுமானங்கள். இவையே ஒரு நபரை மறுதலிக்கின்றன. ஊனமுற்ற ஆணாக இருப்பது என்பது வலிமை, உடல்திறன் மற்றும் தனித்தியங்குதல் ஆகியவற்றின் சாராம்சமாகப் பார்க்கப்படும் பொதுக் கலாச்சார வரையறையான ஆண்மையை நிறைவு செய்ய இயலாமல் தோற்றுப் போகும் நிலையாக கருதப்படுகின்றது. அதே போன்றுதான் ஊனமுற்ற பெண்ணாக இருப்பதும் ஆகும். இல்லத்தரசி, மனைவி, தாய் போன்ற பாத்திரங்களை நிறைவு செய்ய முடியாத நிலையாகவும் உடல்தோற்ற அடிப்படையில் அழகு, பெண்மை போன்ற வகைமாதிரிகளுக்கு ஒத்து போகமுடியாத நிலையாகவும் பார்க்கப்படுகின்றது. இவர்கள் தான் பெருமளவில் விளிம்பு நிலைக்குத் தள்ளப்படுபவர்கள். அதேபோன்று இவர் களே உடல்ரீதியான, மனரீதியான சமூகரீதி யான தவறான பயன்பாட்டுக்கு உள்ளாகிறார் கள். பல நூற்றாண்டுகளாக, இவர்கள் திட்டமிடப்பட்ட புறக்கணிப்பு, நிந்தனை, உடல்ரீதியான துன்பம், பாலியல் துன்புறுத்தல் ஆகியவற்றுக்கும் ஆளாகி வருகின்றனர்.

தொடக்கக் கல்விக்கான பள்ளிக்கூடச் சூழலில் பொதுவான ஆர்வங்களின் அடிப் படையிலும் பள்ளி நடவடிக்கைகள், விளை யாட்டுக்கள் ஆகியவற்றின் மூலமும் நட்பு உருவாகின்றது. பொதுவாக ஊனம் உள்ள பெரும்பான்மையான குழந்தைகள் சகவயது குழந்தைகளுடன் நட்புறவு வைத்துக் கொள் வதற்குத் தேவையான சமுதாயவயமாதல் திறன்கள் இல்லாதவர்களாக உள்ளனர். இத்தகைய நட்புறவுகள் ஏற்பட அடிப் படைத் தேவையாக இருப்பது தொடர் பியலே ஆகும். தொடர்பியலைக் கற்றல், உறவு ஏற்படுத்தும் திறன்களைக் கற்றல் ஆகிய வற்றின் அடிப்படையில் இது அமைகின்றது. ஒரு குழந்தை தனது முதன்மை சமுதாய வட்டத்தினருடன் (அதாவது குடும்பத்தார்) கொள்ளும் உறவாடல்கள் மூலம் தொடர்பியல் திறனைக் கற்கின்றது. உறவினர்கள் மற்றும் சமவயது குழுவினர் போன்ற புறவயமான சமுதாய வட்டத்திற்கு சென்று உறவாடுவதன் மூலம் இத்திறன் மேம்படுகின்றது. ஆரம்ப கால சமுதாய அனுபவங்களே ஒரு குழந்தை பிற்காலத்தில் வளர்ந்த நபராக உருவா வதில் அதிக அளவு தாக்கத்தை ஏற்படுத்து கின்றன. காது கேட்பதில் குறைபாடு உள்ள குழந்தைகளும் அறிவுத் திறனில் குறைபாடு உடைய குழந்தைகளும் தங்களைச் சுற்றியுள்ள நபர்களோடு திறம்பட தொடர்பு கொள்வதற்கான முறைகளை முழுமையாகப் பயன்படுத்த இயலாதவர்களாக உள்ளனர். புதிய நட்புறவுகளை ஏற்படுத்திக் கொள்வதில் உள்ள சிரமம் இவர்களின் சுயநம்பிக்கை குறைவுக்கு வழிவகுக்கிறது. இதுவே இவர்களை சமூகத்துக்குள் ஒருங்கிணைப்பதிலும் சிரமங் களை ஏற்படுத்துகிறது. தனிமைப்படுத்துதல் மற்றும் பதட்டம் ஆகியவற்றுக்கான அடிப் படை காரணமாகவும் பெரிய பிரச்சனை யாகவும் இருப்பது எதுவெனில் தொடர்பியல் திறன் சிரமங்கள்தான். மற்றொரு வகையில் பார்வைக் குறைபாடும் உடல் இயங்கியல் குறைபாடும் உள்ளவர்கள் மிக எளிதாக

எல்லை வரையறுக்கப்பட்டவர்கள் என்பதன் அடிப்படையில் சமுதாயத்தால் பார்க்கப் படுகின்றார்கள். இந்த எல்லை வரையறைகளை சமுதாயம் ஏற்றுக் கொள்கின்றது. எனவே பார்வை மற்றும் உடல் இயங்கியல் குறை பாடு உள்ள நபர்கள் எப்படி இருக்க வேண்டும் என்ற தெளிவான அணுகுமுறை சமுதாயத்திற்கு இருக்கின்றது. குடிமைச் சமுதாயம் பலநிலைகளில் ஊனங்கள் உள்ள நபர்களுடன் உறவாட வாய்ப்பு ஏற்படுத்தித் தருவது முக்கியமானதாகும். இதன்மூலம் அத் தகைய மாற்றுத் திறனாளிகளை சமுதாயத்தில் உள்ளடக்கும் வழிமுறையை குடிமைச் சமு தாயம் கண்டறியும்.

மொழியின் அர்த்தப் பயன்பாடு மாற்றுத் திறன் நபர்களை தங்கள் நிலைமைக்கு தாங்களே காரணம் என்று ஏற்றுக் கொள்ள வைக்கின்றது. கல்வி மற்றும் வேலைக்கான வாய்ப்புகள் அவர்களுக்கு மறுக்கப்படுகின்றன. மற்றவர்களுடன் அர்த்தபூர்வமான உறவுகளும் அவர்களுக்கு ஏற்படுவதில்லை. எதற்கும் உப யோகம் இல்லாதவர்கள் என அவர்கள் முத்திரை குத்தப்படுகின்றனர். எனவே அவர் கள் சமூகத்திற்கு சுமையானவர்களாக ஆகின் றார்கள்.

மாற்றுத்திறன் நபர்களில் பலரும் தாங்கள் வசிக்கும் சமூகத்துக்கும் பொருளாதார நட வடிக்கைகளுக்கும் எந்தப் பங்களிப்பும் செய்ய முடியாதவர்களாக உள்ளனர். ஆனால் சரியான உதவி கிடைத்தால் அவர்களால் ஏதாவது தொழில் செய்ய முடியும்; ஊக்கமாக சமூகச் செயல்பாடுகளில் பங்கேற்க முடியும். இவர்களில் பெரும்பான்மையினர் வேலை யில் இல்லை. உள்ளுறை திறன்களும் திறமை களும் கொண்ட மக்கள் திரளினராக இவர்கள் உள்ளனர். இந்த உள்ளுறை திறன் கள் சரியாகப் பயன்படுத்திக் கொள்ளப் பட்டால்தான் எதிர்பார்ப்புகள் அதிகரிக்கும். பணி செய்வதற்கும் பொருள் ஈட்டவும் அவர் களுக்கு அதிகாரம் ஏற்படுத்தித் தருவதற்குப் பதில் மாற்றுத்திறன் நபர்கள் பயனாளி களாக மாற்றப்படுகின்றார்கள். அரசு மற்றும் குடும்பத்தினரின் உதவியுடன் வாழ வைக்கப்படுகின்றார்கள். தாங்கள் வேலை செய்யும் போது கிடைக்கும் சொற்ப சம்பளத் தால் அவர்களது பிற்கால முதுமை வாழ்வுக்கு ஏதும் சேமிக்க முடிவதில்லை. எனவே பணி ஓய்வுக்குப் பிறகும் அவர்கள் பாதகமான விளைவுகளையே சந்திக்க வேண்டி உள்ளது.

உடல் இயங்கியல் தடைகளைப் பொறுத்த அளவில், மாற்றுத்திறன் நபர்களில் பெரும் பான்மையினருக்கு அவர்கள் செயல்படு வதற்கு ஏற்ற சூழ்நிலையைக் கண்டறிவதே சிரமமாக இருக்கின்றது. உதாரணமாக போக்குவரத்து வாகனங்கள், கட்டிடங்கள் முதலானவற்றைக் கூறலாம். இவை மாற்றுத் திறனாளிகள் பயன்படுத்தும் வகையில் இருப் பதில்லை. அதேபோன்று ரெயில்களின் உள்கட்டமைப்பிலும் ரெயில் நிலையங்களின் கட்டிட அமைப்புகளிலும் மாற்றுத்திறன் பயணிகள் பல சிரமங்களை அனுபவிக்கின் றார்கள். அவர்களால் ரெயில் நிலையத்துக்கு வருவதற்கோ ரெயிலில் ஏறுவதற்கோ எளிதில் முடிவதில்லை. இயல்பான மனிதர்கள் போலவே ரெயிலில் பாதுகாப்பாகப் பயணம் செய்வதற்கு மாற்றுத்திறன் நபர்களுக்கும் உரிமை உள்ளது என்பதை அங்கீகரிப்பது மிகவும் முக்கியமாகும். பலவகை ஊனங்களின் தன்மைகளைக் கருத்தில் கொண்டு ரெயில் பயணத்துக்கான வசதிகளை ஏற்படுத்தித் தாருங்கள் என ரெயில்வே வாரியத்தைக் கேட்பதற்கான உரிமை மாற்றுத்திறன் நபர் களுக்கு உள்ளது.

பல்வேறு வகையான ஊனங்கள் கொண்ட நபர்களின் பல்வேறுபட்ட தேவைகளை எதிர்கொள்வதற்கான அரசாங்க கொள்கை எந்த வகையிலும் மாற்றுத்திறனாளிகளைக் கலந்தாலோசித்து உருவாக்கப்படுவதில்லை. அவர்களிடம் ஆலோசனைகளும் பெறப்படு வதில்லை. கொள்கை உருவாக்கத்தில் செயல் பாட்டில் அவர்களும் உறுப்பினர்களாக ஈடு படுத்தப்படுவதில்லை. மாற்றுத்திறன் நபர்கள் பெரும்பாலும் தாங்கள் சிதறுண்ட, சிக்கலான, அதிகாரம் நிறைந்த ஒரு அமைப்பை எதிர்த்துப்

போராடுவதாகவே உணர்கின்றனர். இந்த அமைப்பானது மாற்றுத்திறன் நபர்களின் தேவைகள் முக்கியமானவை என்பதையும் கவனத்தில் எடுத்துக் கொள்வதில்லை. இவர்களின் வாழ்க்கையை உயர்த்துவது, சமூகத்தில் ஒருங்கிணைப்பது ஆகிய நோக்கங்கள் கவனம் பெறுவதில்லை. இத்தகைய அரசியல் மற்றும் சட்டரீதியான செயல்பாடுகள் மாற்றுத் திறனாளிகளைத் தனிமைப்படுத்துகின்றன; அவர்களை விளிம்புநிலைக்குத் தள்ளுகின்றன. இதன் விளைவு சமூக விலக்கம் என்றாகின்றது.

## செயல் உத்திகள்

சமூக உள்ளடக்கலுக்கான கோரிக்கைகள் என்பது சமூகம் செயல்படுத்தி வரும் அடக்குமுறைக்கான ஒரு எதிர்ப்பு என்பதே உண்மையாகும். மாற்றுத் திறனாளிகள் பாதிப்புக்கு உள்ளாவதையும் சுரண்டலுக்கு ஆளாவதையும் தடுத்து நிறுத்த வேண்டும்.

மேலே கூறிய பலவகையான தடைகளை நீக்குவது என்பதே மாற்றுத் திறனாளிகளுக்கு அதிகாரம் அளிக்கும் வழிமுறையாகும். வீட்டில், சமுதாயத்தில், பணியிடத்தில் அவர்கள் பொறுப்பு மிகுந்த குடிமக்களாக செயல்படுவதற்கான வாய்ப்புகளும் வழங்கப்பட வேண்டும். பிறரைச் சார்ந்து வாழும் கலாச்சாரத்துக்கு முடிவுகட்ட வேண்டிய காலம் இதுவே ஆகும். அவர்களிடம் இருந்து நாம் எதையும் இப்போது எதிர்பார்ப்பதில்லை. இதுவும் மாற வேண்டும். மாற்றுத் திறன் நபர்களுக்கு அதிகாரம் அளிக்கும், அவர்களின் பங்கேற்புக்கு வழி செய்யும், அவர்களை உள்ளடக்கும் ஒரு சமுதாயத்தை உருவாக்குவதை நோக்கி நாம் செயல்பட வேண்டும்.

இத்தகைய தடைகளை எதிர்கொண்டு செயல்பட வேண்டியது அரசாங்கத்தின் கடமை மட்டுமன்று. மாற்றுத் திறனாளிகள், வேலை அளிப்போர், சுகாதார அலுவலர்கள், கல்வியாளர்கள், உள்ளூர் சமுதாயத்தினர், பொருட்கள்/சேவைகளை வழங்குபவர்கள் என அனைவருமே மாற்றுத்திறன் நபர்களின் வாழ்வை முன்னேற்றுவதற்கும் அவர்களின் சமூக உள்ளடக்கலை உறுதி செய்வதற்கும் பங்காற்ற முடியும்.

இது மிகக் கவனமாகத் திட்டமிடப்பட வேண்டும்; போதுமான நிதி ஆதாரங்கள் தரப்பட வேண்டும்; தொலைநோக்குப் பார்வையுடன் செயல்படுத்தப்பட வேண்டும்:

1. பலவகையான ஊனங்கள், அத்தகைய ஊனங்களால் பாதிக்கப்பட்டவர்களின் தேவைகள், அவர்களின் திறமைகள் குறித்து அனைத்து தரப்பினருக்கும் விழிப்புணர்வு நிகழ்ச்சிகள் நடத்தப்பட வேண்டும்.

2. மருத்துவப் பணியாளர்கள், ஆசிரியர்கள், அரசு ஊழியர்கள், வழக்கறிஞர்கள், வேலையளிப்போர், வேலைவாய்ப்பு அதிகாரிகள், உள்ளூர் சமுதாய தலைவர்கள் என பல தரப்பினருக்கும் பணியிடைப் பயிற்சி அளிக்க வேண்டும். ஊனம் பற்றிய அறிவை மேம்படுத்திக் கொள்ளுதல், மாற்றுத் திறனாளிகளுடன் இணைந்து பணியாற்றுவதற்கும் அவர்களுக்காக பணியாற்றுவதற்கும் தேவையான திறமைகளை வளர்த்துக் கொள்ளுதல், ஊனம் மற்றும் ஊனத்தால் பாதிக்கப்பட்டவர் குறித்த தங்களது மனப்பான்மையை மாற்றிக்கொள்ளுதல் ஆகியன இந்த பணியிடைப் பயிற்சியின் நோக்கங்கள் ஆகும்.

3. மாற்றுத் திறன் நபர்களின் கருத்து மற்றும் திறன்களுக்கு முக்கியத்துவம் தரப்பட வேண்டும். தங்களுக்குத் தாங்களே அதிகாரம் அளித்துக் கொள்ள அவர்களுக்கு ஊக்கமளிக்க வேண்டும்.

4. மாற்றுத் திறனாளிகள் குறித்த கட்டாய பாடம் பாடத்திட்டத்தில் சேர்க்கப்பட வேண்டும். பி.எட் மற்றும் எம்.எட்

ஆசிரியர் பயிற்சிப் பாடத்திட்டத்தில் பலவகைப்பட்ட ஊனங்கள் கொண்ட குழந்தைகளுக்குக் கற்பிக்கும் முறைமை சேர்க்கப்பட வேண்டும்.

5. மாற்றுத்திறன் நபர்கள் சமுதாயத்திற்குப் பங்களிக்கும் வகையிலான வாய்ப்புகளை அணுகி பயன்படுத்த வேண்டிய உதவி சிறப்பு மற்றும் பெரும்போக்கு கொள்கை மூலம் தரப்பட வேண்டும். சமூகம் இவர்களது திறமைகள் மீது நம்பிக்கை கொள்ளும் வகையில் இவர்களும் சமுதாயத்தின் அங்கத்தினர்களாக மாற இந்தக் கொள்கைகள் உதவும்.

6. மற்ற சாதாரண குடிமக்களுக்கான தேவைகளைக் கருத்தில் கொள்வது போலவே மாற்றுத்திறன் நபர்களின் தேவைகளும் கொள்கை வடிவமைப்பில், செயலாக்கத்தில் ஆரம்பக் கட்டத்திலேயே அக்கறையுடன் சேர்த்துக் கொள்ளப்பட வேண்டும்.

7. அரசாங்க ஆதரவு மற்றும் சேவைகள் குறித்த மாற்றுத் திறனாளிகளின் அனுபவங்கள் மாற்றப்பட வேண்டும். மாற்றுத் திறனாளிகளுக்கும் அரசாங்கத்திற்கும் இடையில் போதுமான கருத்துப் பகிர்வு ஏற்பட வேண்டும்.

8. தடைகள் ஏதும் இல்லாத அனைவரையும் உள்ளடக்கிய சூழ்நிலையை ஏற்படுத்தும் அனைவருக்குமான வடிவமைப்பை செயல்படுத்த வேண்டிய தேவை உள்ளது. •



# பார்வைத் திறன்

– அமித்சிங்


மாற்றுத்திறன் அல்லது ஊனம் என்பதை "ஒரு நபர் தன்னைச் சுற்றியுள்ள உலகில் பழகுவதையும், (பங்கேற்புத் தடைகள்) சில வேலைகளைச் செய்வதையும் (செயல்பாட்டுத் தடைகள்) மிகவும் சிரமமாக்குகின்ற மன நிலை அல்லது உடல்நிலை" என்று நோய்கள் கட்டுப்பாட்டு மையம் வரையறை செய்கிறது.

ஒரு நபரின் பார்வை, இயக்கம், சிந்தனை, நினைவு, கற்றல், தகவல் பரிமாற்றம், கேட்டல், மனநலம், சமூக உறவுகள் போன்றவற்றைப் பாதிக்கக்கூடிய பலவிதமான ஊனங்கள் உள்ளன. ஊனங்கள் ஒவ்வொரு நபரையும் ஒவ்வொரு விதமாகப் பாதிக்கின்றன. எனவே ஊனமுற்றோர் (மாற்றுத்திறனாளர்) என்று பொதுப்படையாக அவர்களை ஒரே பிரிவுக்குள் அடக்குவது சரியன்று. மேலும், ஊனம் என்பது வாழ்க்கையின் எந்தக் கட்டத்திலும், யாருக்கு வேண்டுமானாலும் நேரலாம். பிறவியிலேயே ஏற்படுவது ஒரு வகை என்றால், விபத்துக்களால் ஏற்படுவது இன்னொரு வகை.

உலக சுகாதார அமைப்பு, ஊனம் என்பதற்கு மூன்று பரிமாணங்கள் உள்ளதாகக் கூறுகிறது.

1. ஒரு நபரின் உடல் அமைப்பில் அல்லது செயல்பாட்டில் அல்லது மனநிலையில் ஏற்படும் குறை. எடுத்துக்காட்டுகள், உடல் உறுப்புகளை இழத்தல், பார்வை இழத்தல், நினைவுத்திறனை இழத்தல்.

2. செயல்பாடுகள் வரம்புக்குட்பட்டு விடுவது. (எ.கா.) பார்ப்பது, கேட்பது, நடப்பது போன்றவற்றில் சிரமம்.




3. தினசரி சாதாரண நடவடிக்கைகளில் பங்கேற்க வரம்பு உருவாவது. (எ.கா.) வேலை செய்வது, சமூகச் செயல்பாடுகள், பொழுதுபோக்குச் செயற்பாடுகள், உடல்நலப்பாதுகாப்பு வசதிகளைப் பெறுதல், முன் தடுப்பு சேவைகள் பெறுதல் போன்றவை.

ஊனம் என்பது பிறவியிலேயே ஏற்பட்டிருக்கலாம். அல்லது வாழ்வில் பின்னாளில் ஏற்பட்டிருக்கலாம். தொடர்புபடுத்திப் பார்த்தல் (நினைவுத்திறன், கற்றல், புரிதல்) இயக்கம்(தான்இருக்கும்இடத்தில்நடமாடுதல்) பார்வை, கேட்டல், நடத்தை போன்றவற்றில் இழப்புகள் ஏற்பட்டிருக்கலாம்.

நீரிழிவு, ரத்த அழுத்தம் போன்றவை காரணமாக பார்வை இழப்பு, நரம்புகள் பாதிப்பு, உறுப்புகள் இழப்பு போன்றவை ஏற்படலாம். ஊனம் என்பது படிப்படியாக அதிகரிக்கக் கூடியதாக இருக்கலாம். (எ.கா.) அல்சைமர் நோய். ஒருமுறை ஏற்பட்டது அப்படியே இருக்கலாம். (எ.கா.) கை, கால் இழப்புகள்.

**அமித்சிங்**, ஆய்வறிஞர், தொலைத்தொடர்பு மற்றும் தகவல் தொழில்நுட்பத் துறை, தில்லி பல்கலைக்கழகம்.

அல்லது அவ்வப்போது ஏற்பட்டு மறைய லாம். எ.கா. மல்டிபிள் ஸ்க்லெரோசி என்ற நரம்புகளின் பாதுகாப்பான மேற்பூச்சுகள் பாதிக்கப்படுதல்.

உலக சுகாதார அமைப்பு *2001*ஆம் ஆண்டில், செயல்பாடு, ஊனம், நலவாழ்வு பற்றிய சர்வதேச பகுப்பினை வெளியிட்டது. இந்தப் பகுப்பு, மனித உடலமைப்பின் முக்கிய செயல்பாடுகள், பங்கேற்கும் நிலை கள், சுகாதாரத்தைப் பாதிக்கும் சுற்றியுள்ள நிலைமைகள் ஆகியவற்றுக்கான அளவுகோல் ஆகும். இதில் செயல்பாடு என்பது "ஒரு வேலையை அல்லது செயலை ஒருவர் நிறைவேற்றுவது" எனவும், பங்கேற்பு என் பது, "வாழ்க்கைச் சூழலில் ஒரு நபரின் ஈடு படும் தன்மை" எனவும் வரையறை செய்யப் பட்டுள்ளன.

தொழில்நுட்பம், மற்றவர்களைப்போல ஊனமுற்றவர்களும் செயல்படுவதற்கு சமதள வாய்ப்பை அளிக்கிறது. ஊனமுற்றோரின் ஒவ்வொருவரின் நிலைமைக்கும் ஏற்றவாறு தொழில்நுட்ப சாதனங்களை மாற்றி அமைத்துக் கொள்வதன் மூலம் அனைவருக்கும் உதவியாக முடியும். முன்னர் விவரித்த நிலைமைகளால் ஏற்படும் இடைவெளிகளை நிரப்பவும் தொழில்நுட்பம் உதவுகிறது.

தொழில்நுட்பத்தினைப் பற்றிப் பொது வாகவும், தகவல் மற்றும் தொடர்பு நுட்பத் தினைப் *(ICT)* பற்றிக் குறிப்பாகவும் புரிந்து கொள்வதற்காக, பார்வை ஊனம் எடுத்துக் கொள்ளப்படுகிறது. தகவல் மற்றும் தொடர்பு நுட்பம் என்பது பல தொழில் நுட்பங்களைக் குறிக்கும் விரிவான பொருளுடைய சொல். தொலைத்தொடர்பு மூலம் தகவல் வழங்கும் நுட்பங்களை அது குறிப்பிடுகிறது. இதில் கணினி, இணையம், கம்பியில்லாத் தொடர்புகள், செல்பேசி மற்றும் தகவல் தொடர்புக்கான ஏனைய சாதனங்களும் அடங்கும். தகவல் மற்றும் தொடர்பு நுட்பம் என்பது தொடர்ந்து வந்து கொண்டே இருப்பதாகும்.

*2001*ஆம் ஆண்டு மக்கள் தொகைக் கணக் கெடுப்பு மற்றும் தேசிய மாதிரி ஆய்வு அமைப் பின் புள்ளி விவரங்களின்படி, இந்தியாவில், ஊனமுற்ற மக்களில், முதலிடத்தில் இருப்ப வர்கள் நடமாட முடியாத ஊனமுற்றோர். இரண்டாவது இடத்தில் இருப்பது பார்வை ஊனம். நடமாட முடியாத ஊனம் என்பது போல் அல்லாமல், பார்வை ஊனம் என்பது ஓர் உறுப்பில் ஏற்பட்ட பாதிப்பால் உண்டாவது.

பார்வை ஊனம் என்பது தரமான கண்ணாடிகள் மூலமாகவோ, காண்டாக்ட் லென்சுகள் மூலமாகவோ அல்லது அறுவை சிகிச்சையாலும் கூட சரிப்படுத்த முடியாத சேதாரத்தைக் குறிக்கும். ஒரு நபர் தனது அன்றாடப் பணிகளைச் சுயமாகச் செய்யப் பெருந்தடையாகி விடுகிறது இந்த ஊனம். கண்களோடு சம்பத்தப்பட்டது என்றாலும்

## ஊனமுற்றோர் விவரம் (லட்சம் பேரில்)

| ஊனம் | தேசிய மாதிரி ஆய்வு அமைப்பு NSSO (லட்சம் / சதவிகிதம்) | மக்கள் தொகைக் கணக்கு (லட்சம் / சதவிகிதம்) |
|---|---|---|
| நடமாட்டம் | 106.34 (51.19%) | 61.05 (27.86%) |
| பார்வை | 28.26 (13.60%) | 106.3 (48.54%) |
| கேட்புத்திறன் | 30.62 (14.74%) | 12.62 (5.76%) |
| பேசுதல் | 21.55 (10.37%) | 16.41 (7.49%) |
| மனநலம் | 20.96 (10.09%) | 22.64 (10.33%) |
| மொத்தம் | 207.73 (1.8%) | 219.02 (2.1%) |

இந்தக் குறைபாடு, நரம்பு மண்டலம் மற்றும் மூளையின் பார்வைத் திறன்பகுதியையும் பாதிக்கிறது.

பார்வை ஊனம் என்பது ஓரளவுக்கு மட்டுமோ, முழுமையாகவோ இருக்கக்கூடும். அது பிறவியிலும் இருக்கலாம், பின்னரும் வரலாம். பார்வையிழப்புகளில் பாதியளவு, தடுக்கக் கூடியவையே என்று மதிப்பிட்டுள் ளனர். பொதுவாகவே பார்வையை முற்றாகப் பறிக்கிற பெரிய நோய்கள் ஆரம்பத்தில் எந்த அறிகுறையையும் காட்டுவதில்லை. ஆனால் ஆரம்பத்திலேயே கண்டறிந்துவிட்டால் ஊனத்தைக்கட்டுப்படுத்துவது சாத்தியமானது தான். பார்வை இழப்புக்குக் காரணமான முக்கியமான நோய்களைக் கண்டறிவதும், சிகிச்சை அளிப்பதும் மிகவும் எளிதானது, செலவு குறைவானது. முற்றாகப் பார்வை பறிபோவது தவிர, ஓரளவுக்குப் பார்வைத்திறன் கொண்டிருப்பது, குறைவான பார்வைத்திறன், சட்டப்படியான பார்வையற்றவர் என்று பலவாறாகவும் இந்தக் குறையைப் பிரித்துக் காட்டுகின்றனர்.

ஒரு மாணவரின் பங்களிப்பை மேம் படுத்துகிற அல்லது சாதனைக்கு வழி கோலுகிற, சுதந்திரமான செயல்பாட்டுக்குத் துணைபோகிற சாதனம் அல்லது சேவையை 'உதவு நுட்பம்' (Assistive Technology) என்பர். பார்வைத்திறன் அற்ற மாணவர்களுக்கு (கூடுதலாக ஊனங்கள் இருந்தாலும் இல்லா விட்டாலும்) பொதுவான பாடத்திட்டத்தை அணுகவும், படிப்பினில் மேம்பட்டு விளங்கவும் உதவுநுட்பங்கள் துணையாகின்றன.

பார்வைக்குறைபாடு உள்ள பலரும், பார்வை மறுவாழ்வு, சுற்றுப்புற மாற்றியமைப்பு, உதவு சாதனங்கள் போன்றவற்றினால், சுதந்திர மாகவும், பயனுள்ள வகையிலும் வாழ்க் கையை நடத்த முடியும். தகவல் தொடர்பு நுட்பங்கள் எல்லாவிதமான பாதிப்புகளுக்கும் ஆட்பட்டவர்களுக்கு உறுதுணையாகின்றன.

பார்வையை முற்றாக இழந்தவர்கள் அல்லது பெருமளவுக்குப் பார்வை தெரியாதவர்கள், இயக்கத்தின் போது தடைகளை உணர்ந்து கொள்ள தகவல் தொடர்பு நுட்பம் சேர்ந்த குச்சிகள் / கம்புகள் பயன்படுகின்றன. கேளா ஒலி நுட்பத்தைப் பயன்படுத்தி எக்கோ லொகேஷன் சிக்னல் என்ற எதிரொலியால் இடமறியும் சமிக்ஞைகள் மூலம் உண்டாகும் அதிர்வுகள் அல்லது தொடு உணர்வு அல்லது ஒலி மூலமாக எந்தவிதமான நிலப்பரப்பிலும் தடைகளைப் புரிந்துகொள்ள உதவுகின்றன.

பார்வை இழந்த நபர் நீண்ட பயணம் மேற்கொள்ளும்போது, வழி நடத்தும் சாதனங் கள் உதவுகின்றன. இருப்பிடம் மற்றும் விருப்பத் தேர்வுகளுக்கு கணினியில் நிகழ்ச்சி யாக்கப்பட்ட விவரங்கள் உதவும். உலக இருப் பிட முறை *(GPS)*ம் இதோடு சேரும்போது, வழி நடத்தும் நுட்பம் பெரிய முன்னேற்ற மாகி விடும்.

கம்பியில்லாத் தொடர்புகளான வை–பை, அருகமை களத்தொடர்பு, அகச்சிவப்பு நுட்பம், புளூடூத் போன்றவை, பார்வைத்திறன் அற்றவர்களுக்கு பெரும் துணையாக மாறும். இந்த நுட்பங்களைத் தனி சாதனங்களாகவும் செல்லிடப்பேசிகளில் இணைத்தும் பயன் படுத்த முடியும்.

வாசிப்பது என்பது மிகவும் அத்திவாசிய மான தினசரி வேலையாகும். செய்தித்தாள் அல்லது பாடப்புத்தகம் மட்டுமின்றி, விலைப் பட்டியல், போன்றவற்றைப் படிப்பதும் இதில் அடங்கும். இந்த வேலையைச் செய்ய பார்வை அற்றவர்களுக்குத் துணையாக உதவு நுட்பம் பயன்படுகிறது. ஆப்டிகல் கேரக்டர் ரீடர் என்ற நுட்பம் இதில் முக்கியப் பங்கு வகிக்கிறது. பேசும் மின்னணு புத்தகத்திற்கான சர்வதேசத் தர அளவான டெய்ஸி *(DAISY)* தரமே இதற்கு அளவு கோலாக நிர்ணயிக்கப் பட்டுள்ளது.

அல்பினிஸம் *(Albinism)* குறைபாடு உள்ள நபர்களுக்குப் பள்ளியிலும், வேலைபார்க்கும் இடத்திலும், ஏனைய தனிப்பட்ட வாழ்க்கை யிலும் உதவ வீடியோ மேக்னிபையர் என்ற

காணொளிப் பெருக்கி நுட்பம் உதவுகிறது. காணொளிப்பெருக்கிகளில் உள்ள முரண் தகவுகளை மாற்றியமைத்து, அசௌகரியமோ, கோர்வோ ஏற்படாமல் காட்சிகளை பெருக்கிப் பார்த்துக் கொள்ளமுடியும்.

பெரும்பாலான கண் புரை நோய்கள் அறுவை சிகிச்சை மூலம் சரிசெய்யக் கூடிய வையே. கண் புரை அறுவை செய்யமுடியாத பட்சத்தில், இந்த காணொளிப் பெருக்க நுட்பம் உற்ற துணையாக இருக்கும். டயா படிக் ரெட்டினோபதி என்ற நீரிழிவு நோயி னால் ஏற்படும் பார்வைக் குறைபாடு உடைய வர்களுக்கு, விரல்களில் உணர்தன்மை குறைந்து விடுவதால் அவர்களால் பிரெய்லி முறையைச் சரியாகப் பயன்படுத்தி வாசிக்க இயலாது. எனவே ஆப்டிகல் கேரக்டர் ரீடர் உடன் திரை வாசிப்பு மென்பொருளையும் சேர்த்துப் பயன்படுத்தலாம்.

முதுமை, நோய், சேதம், நிலைமை, குறை பாடுகள் போன்றவற்றால் நலிவுற்ற அல்லது சேதமுற்ற கண்ணின் தசைப்பகுதிகளுக்கு உதவும் விதமாக, பல்வேறு வடிவங்களில், வெவ்வேறு திறன்களுடன் கூடிய உட் பொருத்தி *(Implants)*களை வடிவமைக்கவும் தகவல் தொடர்பு நுட்பம் உதவுகிறது. குறை பாடுடைய பார்வையை இயல்பாகவே சாதாரண நிலைக்குக் கொண்டுவரும்படி அவற்றை வடிவமைக்க முடியும். பார்வை நரம்புகள் பாதிக்கப்பட்டு இருந்தாலும் அல்லது அவை உருக்குலைந்து இருந்தாலும், நரம்புகள் மூலமாகவோ அல்லது மூளைக்கு நேரடியாகவோ சமிக்ஞைகளை அனுப்ப எக்ட்ரோடுகளையும் உட்பொருத்திகளையும் பயன்படுத்தலாம்.

பார்வைக்குறைபாடு உடையவர்கள் பயன் படுத்தும் சாதனங்களான கணினி போன்ற வற்றில் திரை, கிபோர்டு, மௌஸ் போன்றவற்றை அவரவரின் பயன்பாட்டுத் தேவைக்கு ஏற்பத் தகவமைத்துக்கொள்ளும்படியும் கணினியில் நிரல்படுத்தமுடியும்.

தகவல் தொடர்பு நுட்பம் சார்ந்த சாதனங்கள், வேறு சாதனங்களோடு சேர்த்துப் பிணைக்கத்தக்கவை. அதனால் வழக்கத்திற்கு மாறான புதிய வேலையையும் செய்ய முடியும். மேலும் சுயமாகக் கற்றலுக்கும், சுயமாக வேலைகளைச் செய்வதற்கும், செயற்கை நுண்ணறிவைக் *(Artificial Intelligence)* கணினி நிரல் உருவாக்க முடியும். இதற்கு உதாரணம் மைக்ரோசாஃப்ட் நிறுவனம் தயாரித்துள்ள திறக்கப்பட்ட நகரங்கள் *(Cities Unlocked)* என்ற திட்டமாகும். முன்னேறிய உலக நிலையறி குறி முறையைப் *(GPS)* பயன்படுத்தி ஸ்மார்ட் போன்களின் உதவியோடு, பார்வைத் திறன் அற்றவர்கள் எவருடைய உதவியும் இன்றி நகரங்களில் சுதந்திரமாகச் சுற்றிவரமுடியும். இது ஹெட்போன், கண்ணாடி, அக்ஸல ரோமீட்டர், கைரோ மீட்டர், காம்பஸ், பல்வேறு திசைகளில் இருந்துவரும் ஒலிகளை உணர்த்துவதற்காக ஹெட்போனின் பல பகுதிகளிலும் ஸ்பீக்கர்கள் என்று பல அங்கங் களோடு உள்ளது. இதைப் பயன்படுத்துபவர் தன்னுடைய புளூடூத் ரிமோட்டில், 'தொடங்கு' என்ற பொத்தானை அமுக்கியதும், தான் எங்கே இருக்கிறோம் என்ற சரியான விவரத்தோடு தன்னைச் சுற்றிலும் என்னென்ன உள்ளன என்றும் புரிந்து கொள்ளமுடியும். இதில் இருக்கும் கேமரா, சுற்றியுள்ள மக்களையும் பொருள்களையும் படம்பிடித்து, என்ன நடக் கிறது என்றும் அதைப்பயன்படுத்துபவருக்குத் தெரிவித்துவிடும்.

தகவல் தொடர்பு நுட்பம் என்பது வளர்ந்துவரும் நுட்பமாகும். பொதுவாக ஊன முற்றோர் அனைவருக்கும் இத்துறையின் புதிய கண்டுபிடிப்புகள் வாழ்க்கையை எளிதாக மாற்றி வந்தாலும், பார்வைத்திறன் அற்றவர்களின் வாழ்வில் இவை புதிய ஒளியைப் பாய்ச்சுகின்றன. ஒவ்வொரு நபருக்கும் பார்வைக் குறைபாடு என்பது பிரத்யேகமானது என்பதால், சாதனங்களும் தனித்தனியாக, பிரத்யேகமாக உருவாக்கப்படவேண்டும். அனைவருக்கும் ஒரே சாதனம் பயன்படாது என்பதையும் நாம் கவனத்தில் கொள்ள வேண்டும். •

# மாற்றுத் திறனாளிகள் அடையத்தக்க போக்குவரத்து: தற்போதைய நிலவரமும் நம் முன் உள்ள வழியும்

– டாக்டர் தேவர்ஷி சௌராசியா

## உலகளாவிய முயற்சிகள்

போக்குவரத்தைப் பயன்படுத்திக் கொள் வதற்கு அதனை எளிதில் சென்றடையத் தக்க நிலை ஒவ்வொருவருக்கும் சமமான அளவில் இருக்க வேண்டும். இத்தகைய வசதிகள், சேவைகள் போன்றவற்றை மாற்றுத் திறனாளிகளும் அடைய முடிந்தால் தான் அவர்களும் முழுமையான அளவில் உள்ளடக்கிக் கொள்ளப்பட்டிருப்பதாக கூற முடியும் *(UN2007)*. மாற்றுத்திறனாளிகளின் உரிமைகள் பற்றிய ஐக்கிய நாடுகளின் பொது இணக்க ஒப்பந்தத்தில் இந்தியாவும் கையெழுத் திட்டுள்ளது. இதன் துணை வாசகம் 9 தகவல் தொடர்பு, போக்குவரத்து, இருப்பிடச்சூழல், அவசர சேவைகள் உட்பட பிற சேவைகளையும் பெறக்கூடிய வாய்ப்பு ஆகியவற்றை மாற்றுத் திறனாளிகளும் பெறுவதை அரசுகள் உறுதி செய்திட வேண்டும் என்று குறிப்பிடுகிறது.

மாற்றுத்திறனாளிகள் சமமான உரிமை களைப் பெறுவதற்கும், சுயசார்புடன் வாழ் வதற்கும், வாழ்வின் எல்லா அம்சங்களிலும் பங்கேற்று சமூகத்துடன் ஒன்றிணைவதற்கும் அனைத்தையும் எளிதில் அணுகக் கூடிய தன்மை என்பது மிக முக்கியமான தேவை யாகிறது. மாற்றுத்திறனாளிகள் (சம வாய்ப்பு கள், உரிமைப் பாதுகாப்பு, முழுமையான பங்கேற்பு) சட்டம் 1995 பிரிவு 44, 45, 46 ஆகியவை மாற்றுத் திறனாளிகளுக்கு போக்கு வரத்தில் பாரபட்சமின்மை, சாலையில் பாரபட்சமின்மை, சூழலில் பாரபட்சமின்மை ஆகியவற்றை ஐயத்திற்கிடமின்றி வழங்கு கிறது.

## இந்தியச்சூழல்:

இந்திய நகரங்களில் வாழும் மக்களில் பெரும் பகுதியினர் பொதுப் போக்குவரத்தை நம்பியே இருக்கின்றனர். வேலை, படிப்பு, பொழுதுபோக்கு ஆகியவற்றிற்காக தாங்கள் செல்ல வேண்டிய இடங்களுக்கு தினமும் இதில்தான் இவர்கள் பயணிக்கின்றனர். சொந்த வாகனங்கள் இல்லாமல் இருப்ப தாலும், நீண்டதூரப் பயணங்கள், விலை அதிகமாக இருக்கும் எரிபொருள், சாலை களில் நிலவும் பாதுகாப்புமின்மை ஆகிய வற்றினாலும் பேருந்து, தொடர்வண்டி போன் றவை அடங்கிய பொதுப்போக்குவரத்து மிகமுக்கியமான பங்கினை வகித்து வருகிறது. உள்ளூர் பொருளாதாரத்திலும் பொதுப்போக்குவரத்திற்கு முக்கியமான பங்கு இருக்கிறது. பொதுப்போக்குவரத்து கட்டமைப்பிற்காக நாடெங்கும் மிக அதிக மான பணம் செலவிடப்படுகிறது. நகரங்களின் போக்குவரத்துத் தேவைகளுக்கு ஈடு கொடுக்கும் வகையிலும் பணம் செலவிடப் படுகிறது. ஆயினும், இவற்றில் பெரும்பாலான கட்டமைப்புகளும், சேவைகளும் மாற்றுத் திறனாளிகளுக்கு பயன் அளிப்பதில்லை. வயதானோர், குழந்தைகள், கர்ப்பிணிப் பெண் கள், தற்காலிக உடல் குறைபாடு உடையவர்கள் ஆகியோருக்கும் சாதகமில்லாத போக்கு வரத்துச் சூழல் நிலவுகிறது. தெருக்களில் நடப் பதற்கும், நிறுத்தங்களை அடைவதற்கும், படி களில் ஏறுவதற்கும், அறிவிப்புகளைப் படித்து புரிந்துகொள்வதற்கும், போதுமான அளவிற் கான சாதனமின்றி வடிவமைக்கப்பட்டுள்ள வாகன இருக்கைகளில் அமர்ந்து பயணம் செய்வதற்கும் இவர்களால் முடியவில்லை.

இந்திய நகரங்களில் எண்ணற்றவர்கள் தினமும் பயணிக்கின்றனர். ஆனால் பெரும் பாலான உள்கட்டமைப்புகளும், சேவைகளும் சில குறிப்பிட்ட பயனாளிகளுக்கென வடி வமைக்கப்பட்டுள்ளன. சிறு பிரிவினரான

**டாக்டர் தேவர்ஷி சௌராசியா**, உதவிப் பேராசிரியர் கட்டடக் கலைப்பள்ளி, போபால் (ம.பி.).

மாற்றுத்திறனாளிகளுக்கான ஏற்பாடுகள் என்ன? வயதானோர், குழந்தைகள், கர்ப்பிணிப் பெண்கள், தற்காலிகமாக திறன் குறைவு அடைந்திருப்பவர்கள் ஆகியோரையும் கணக்கில் சேர்த்துப் பார்க்கும் போது இந்த சிறு எண்ணிக்கை பல மடங்காக அதிகரித் திருக்கும். விழிப்புணர்வை அதிகரிப்பதன் மூலமும், சமூக உரையாடல்கள் மூலமும் போக்குவரத்து சேவை வடிவமைப்பு ஒவ்வொருவருக்கும் ஏற்ற வகையில் மாற்றிய மைப்பட வேண்டும் என்பதை கருத்தில் இருத்த வேண்டும். தொழில்நுட்ப மேம்பாடு, விழிப்புணர்வு, சமூக சமத்துவ சிந்தனை ஆகியவற்றின் காரணமாக வேகமாக மரிவரும் உலகில் நம்முடைய போக்குவரத்து வசதிகளும் அனைவரும் பயன்படுத்தக்கூடிய வகையில் அமைய வேண்டியது அவசியம்.

### இதிலுள்ள சவால்கள்

இந்திய நகரங்களில் பொதுப்போக்கு வரத்தை அணுகுவது என்பது ஒரு பெரிய சவாலாகத்தான் இருக்கிறது. பொதுவெளி களும், போக்குவரத்து வாகனங்களும், வச திகளும் மாற்றுத் திறனாளிகளுக்கு ஏற்ற வகையில் வடிவமைக்கப்படவில்லை. ஜவகர் லால் நேரு தேசிய நகர்ப்புற புனரமைப்புத் திட்டம் *(Jn NURM)* நகரப் போக்குவரத்திற்கு ஒரு உந்துசக்தியாக இருந்து வருகிறது. பயணிகளை துரிதகதியில் அழைத்துச் செல்லும் பேருந்து போக்குவரத்து திறம்பட செயல்படுவதற்கு இது உதவியிருக்கிறது. பேருந்துப் போக்குவரத்து தொடர்பான கருத்துருக்கள் மாற்றுத் திறனாளிகளுக்குத் தேவையான வசதிகளை செய்து தருவது பற்றிய அக்கறையை வெளிப் படுத்துகின்றன. ஆனால் போதுமான விழிப் புணர்வும், கூர்ந்தறியும் திறனும் இல்லாத காரணத்தினால் மாற்றுத் திறனாளிகளுக்கு வசதிகளை வழங்குவதில் தரத்தை எட்டிப் பிடிக்க முடியவில்லை. தற்போதிருக்கும் கட்டமைப்பை நிர்வகிப்பதிலும் மோசமான நிலையே நீடிக்கிறது.

மாற்றுத் திறனாளிகளுக்கென ஏற்படுத்தப் பட்டுள்ள தற்போதுள்ள சில வசதிகள் பயன்படுத்தப்படாமலோ, சுற்றிலும் ஆக்கிர மிப்பிற்கு உள்ளாகியோ இருப்பதால் அவை எளிதில் சென்றடையக்கூடிய நிலையில் இல்லை. பாதைகள், சாலை ஓர நடை பாதைகள் போன்றவை தெருக்களின் வழி யாகவும் கூட ஒருவர் பயணித்து தனது இருப்பிடத்தை அடையக்கூடிய வகையில் இருக்க வேண்டும். (மல்ஹோத்ரா, 2010). பொதுமக்களுக்கு தகவல் தெரிவிக்கும் பலகை கள் தரம் குன்றி இருப்பது அவைகளின் இருப்பையே கேள்விக்குள்ளாக்கிவிடுகிறது. இந்தியா போன்ற நாடுகளில் சாதகமில்லாத பொதுப்போக்குவரத்துக் கட்டமைப்பு வசதி களில் மக்கள் பெருக்கத்தின் காரணமாக அதிகமான அழுத்தம் நிலவுகிறது. மாற்றுத் திறனாளிகள் முற்றிலுமாகப் புறக்கணிக் கப்பட்ட நிலையில் உள்ளனர். தற்போது சிற்சில வசதிகள் செய்யப்பட்டுள்ள போதிலும் மாற்றுத்திறனாளிகள் அவற்றை நம்பிக்கை யுடன் பயன்படுத்திக்கொள்ள இயலாத அளவிற்கு மோசமான அனுபவங்களைப் பெற்று வருகின்றனர். மாற்றுத்திறனாளிகளின் தேவைகள் தனி வகையானவை. பொது வசதிக ளைப் பெறுவதிலும், பயன்படுத்திக் கொள் வதிலும் மற்றவர்களைக் காட்டிலும் இவர் களுக்கென்று பிரத்யேகமான பிரச்னைகள் உள்ளன.

இந்தியா அரசாங்கம் தேசிய அளவில் ஒரு பெரிய விழிப்புணர்வு பிரசாரத்தை மேற் கொண்டு வருகிறது. 'சுகம்ய பாரத் அபியான்' என்பது அதன் பெயர். மாற்றுத்திறனாளிகள் உட்பட குடிமக்கள் அனைவரும் தடையில்லாத வகையில் எங்கெங்கும் சென்றுவரக் கூடிய சூழல் உருவாகும்படி வசதிகளை ஏற்படுத்த வேண்டும். இந்த நோக்கத்தை அடைவது இத்திட்டத்தின் இலக்காகும்.

### வடிவமைப்பு வழிகாட்டி நெறிகளும் தரமும்

உலகின் பலநாடுகளில் வடிவமைப்பு பற்றிய வழிகாட்டு நெறிமுறைகளும், தர நிர்ணயமும் இருக்கின்றன. நம் நாட்டில் தேசிய அளவில் ஒரு தர நிர்ணயம் இல்லாத நிலையில் வேறு ஒரு நாட்டில் இருக்கும் தர

அளவுகள் இங்கு பரிந்துரைக்கப்படுகின்றன. மத்திய பொதுப்பணித்துறை வகுத்துள்ள மாற்றுத்திறனாளிகள், முதியோருக்கான தடையில்லா சூழல் பற்றிய வழிகாட்டு நெறி முறைகளை மாற்றி அமைக்கவேண்டிய தேவை இருக்கிறது. இதற்கான முயற்சிகள் அனைத்து மட்டங்களிலும் எடுக்கப்பட்டாக வேண்டும். பல நிறுவனங்கள் (அரசு, அரசுக்கட்டுப்பாட்டு, அரசுசாரா நிறுவனங்கள்) இந்த வகையில் பணியாற்றி வருகின்றன. பொது மக்களிடமும், நகர மேம்பாட்டிற்கான பொறுப்பு வகிக்கும் அரசுத்துறை ஊழியர்களிடமும் விழிப் புணர்வை ஏற்படுத்துவதற்காக கருத்தரங்குகள், பயிற்சிப் பட்டறைகள் ஆகியவற்றை இவை நடத்தி வருகின்றன. மாணவர்களிடம் கூர்ந்தறியும் திறனை ஏற்படுத்துவதற்கு கல்வி, ஆராய்ச்சி நிறுவனங்கள் உதவும். தற்போதுள்ள நிலவரம் பற்றிய பதிவுகளை உருவாக்கி தேவைப்படக்கூடிய முக்கியமான தரவுகளைத் திரட்டி ஆராய்ந்து பிரச்னை களுக்கான காரணங்களைக் கண்டறிந்து தேவைப்படக்கூடிய மாற்றங்கள், தீர்வுகள் பற்றி இவை பரிந்துரைக்கும்.


## தற்போதைய தேவைகளும் புதிய வளர்ச்சித் தேவைகளும்

சமூகத்தின் அனைத்து பிரிவினரின் தேவைகளையும் ஈடுகட்டுவதற்கு பலவித மான போக்குவரத்து தொகுப்புகள் தேவைப் படுகின்றன. போக்குவரத்துத் திட்டங்களில் அரசின் முன்முயற்சிகளுக்கு தேவைப்படும் நிதியை JnNURM திட்டத்தின் கீழ் மத்திய அரசு தருகிறது. பேருந்து நிறுத்தங்கள், மெட்ரோ ரயில் நிலையங்கள், BRTS போக்குவரத்து போன்றவை அணுகத்தக்கவையாக, தரமான வடிவமைப்பு கொண்டவையாக இருக்கும் விதத்தில் அமைய முயற்சிகள் மேற்கொள்ளப் படுகின்றன. அனைவருக்கும் ஏற்றதாக போக்கு வரத்துப் பயணங்கள் அமைவதில்தான் உண்மையான வெற்றி இருக்கிறது. உதாரண மாக, பார்வையற்றோரும், சக்கர நாற்காலியைப் பயன்படுத்துவோரும் ஒருங்கிணைக்கப்பட்ட கட்டமைப்பைப்பெற்று சுதந்திரமாக உலவ வேண்டும். இதற்கு ஏற்ற விதத்தில் நடை பாதைகளும், மெட்ரோ ரயில் போக்குவரத்தும் அமைய வேண்டும். போக்குவரத்து வசதிகள் பற்றிய போதுமான தகவல்கள் கிடைக்கப்பெற வேண்டும். பொதுப் போக்குவரத்தைப் பயன் படுத்துபவர்கள் பயணத்தைத் தொடங்கும் முன்பும், பயணத்தின் நிறைவிலும் பாதசாரி களாகவே இருக்கின்றனர். எனவே, பாத சாரிகள் எளிதில் அணுகக்கூடிய கட்ட மைப்பை ஏற்படுத்தித் தரவேண்டியது முக்கியமானது. தெருக்கள், கைப்பிடியுடன் கூடிய சாய்தளங்கள், குழந்தைகளுக்கும் மூத்தோருக்குமென அமைக்கப்பட வேண்டும். தொட்டுணரக்கூடிய தளம் அமைக்கப்பட்ட நடைபாதைகளும் அவசியமானவை. கட்ட மைப்புகளை அணுக இயலாமல் போவது சமூகத்திலுள்ள மாற்றுத்திறனாளிகளின் முழுமையான பங்கேற்பிற்கு ஒரு பெரிய தடை யாக இருக்கின்றன (ஹென்றி 2009). பொதுப் போக்குவரத்துப் பயன்பாட்டை அதிகப் படுத்துவதற்கு பாதசாரிகள் பாதுகாப்பாகவும், வசதியுடனும் பயணிக்கக்கூடிய சூழலை அமைத்துத் தருவது முக்கியமானது (கிரிபின் 2000)

பொதுமக்களுக்கு தகவல் தெரிவிக்கும் கட்டமைப்பு, கழிப்பறை வசதிகள், பாதசாரிகள் சாலையைக் கடக்கும் வசதி, சாய்தள வசதிகள், கைப்பிடிகள், தளமிடப்பட்ட நடைபாதை போன்றவை பராமரிக்கப்படுவது முக்கியம். இதற்கென, பழுதுபார்பு – பராமரிப்புக் கொள்கை ஒன்று உருவாக்கப்படவேண்டும்.

## சுகம்ய பாரத் அபியான் (விழிப்புணர்வும் பயிற்சியும்)

போக்குவரத்து வசதிகளை எளிதில் சென்றடைவதற்கான வசதிகளின் தேவை பற்றிய பரப்புரை மூலம் சமூகத்தின் அனைத்துப் பிரிவினர், பள்ளிகள்; கல்லூரி கள், தொழில்முறை சார்ந்தோர், வளர்ச்சிக் கான அமைப்பினர், நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகள், அரசியல்வாதிகள், அதிகாரிகள் போன்றோருக்கு விழிப்புணர்வை வழங்கவேண் டும். நம்முடைய பொதுவான தேவைகளைப் போலவும், வாழ்க்கை முறையில் பின்னிப்




பிணைந்ததாகவும் எளிதாக போக்குவரத்து வசதிகள் அமைய வேண்டும். விழிப்புணர்வை அதிகரிக்க வேண்டும். எளிதில் சென்றடைய முடியும் என்பதுதான் நீடித்து நிலவக்கூடிய, உயர்தரமான போக்குவரத்து அமைப்பின் முக்கியமான கூறாகும். உண்மையில், பொதுப் போக்குவரத்தான பேருந்துகள், டிராம்கள், ரயில், விமானங்கள், கப்பல்கள் ஆகியவற்றை எளிதில் சென்றடைய முடிந்தால் நாம் அனை வருமே பயன்பெறுகிறோம் (கல்லன் 2006).

பயிற்சிகளின் மூலம் திறன்மிகு ஓட்டுநர்கள், நடத்துநர்கள், ஊழியர்கள், பாதுகாப்புப் பணியாளர்கள், போக்குவரத்து சேவைகளை நடத்துவோர் ஆகியோரை பயனாளிகளுக்கு உதவும்படியும், மாற்றுத் திறனாளிகளிடம் கூடுதல் அக்கறை செலுத்தும்படியும் செய்ய முடியும். பயிற்சிகள் ஏதுமில்லாமல் இத்தகைய வசதிகள், வாகனங்களின் முக்கியத்துவம் பற்றி அவர்களால் உணர முடியாது.

பொது போக்குவரத்துக் கட்டமைப்பை அனைவரும் எளிதாக அணுகுவதற்கும், அனைத்துப் பயணிகள் – குறிப்பாக மாற்றுத் திறனாளிகளின் பாதுகாப்பு இவர்களுக்கு துல்லியமான தகவல்களை அளிப்பது போன்றவற்றிற்கு தகவல் பரிமாற்றத் தொழில் நுட்பமும், வாகன வடிவமைப்பும், பசுமைத் தொழில்நுட்பக் கோட்பாடுகளும் உதவிடும். எலிசபெத் பார்டன், லைனி மிட்செல் ஆகிய இருவரும் 2006இல் வெளியிட்ட ‘அனை வருக்குமான நகர வடிவமைப்பு என்ற தங்களின் நூலில் “மக்கள் அவர்களுக்கு ஏற்படுத்தித் தரப்பட்டிருக்கும் சூழல்களின் காரணத் தாலேயே திறனற்றவர்களாகி விடுகின்றனர்” என்று மிகச்சரியாக குறிப்பிடுகின்றனர்.

நம்முடைய நகரங்கள் சீர்மிகு நகரங்களாக வேண்டும் என்று நாம் உண்மையிலேயே விரும்பினால் நகரங்கள் அணுகத் தக்க வையாக, பாதுகாப்பானதாக, வயது பாலினம் உடலமைப்பு பொருளாதார நிலை போன்ற வற்றைக் கருதாமல் அனைவரையும் உள்ள டக்கியதாக உருவாக்கி அமைக்க வேண்டும். •

# செயல்புரிவதற்கு இடையூறு செய்யும் குறைபாடு

– அருணிமா டே

உடல்நலம்தான் நமது சமுதாய வளர்ச்சியை சுட்டிக்காட்டும் ஒரு முக்கியமான குறியீடு. செயல்புரிவதில் இடையூறு உண்டாக்கக்கூடிய குறைபாடுகள் சமுதாய வளர்ச்சியில் ஒரு முக்கியமான பங்கினை வகிக்கின்றன. உடல் குறைபாடு என்பது ஒரு தனி மனிதனின் வாழ்க்கையைக் கட்டுபடுத்தும் ஒன்றாக இருந்து, விளிம்பு நிலைக்குத் தள்ளப்படும் நிலைமையை அனுபவிப்பவராக அவரை மாற்றி அவரது வாழ்க்கையை வெவ்வேறு வழிகளில் கட்டுப்படுத்தி விடுகிறது என்பதாகப் பார்க்கப்படுகிறது. நோய்கள் பற்றிய சமூகப்புள்ளி விவர ஆய்வுகள் காட்டும் சுகாதாரக் குறைபாடுகளும், பரவக்கூடிய தொற்று நோய்களுமே அதிக கவனத்தையும் உந்து கையையும் பெருகின்றன என்பதும், உடல் நலத்தின் மிக முக்கியமான அங்கமான உடல் குறைபாடு மூடாக்கு அகற்றப்படாமல் கவனமின்றி ஒளிமங்கிக் கிடக்கிறது என்பதும் பெரும்பாலும் வெளிப்படையாகவே தெரிகிறது.

## மாற்றுத்திறன் (Disability) எனும் சொல்லுக்கும் அப்பால்

வலிமை இழப்பு *(Impairment)*, திறன் குறைவு *(Disability)* வாய்ப்பு குறைவான நிலைமை *(Handicap)* ஆகியவை இதனோடு தொடர் புடையவை. இவற்றிற்கு தனி வகையான அர்த்தங்கள் உள்ளன. வலிமை இழப்பு என்பது உடல் அமைப்பு, தோற்றம், உடல் உறுப்புகள், உறுப்பு மண்டலங்களின் செயல் பாடுகள் ஆகியவற்றில் எந்தக் காரணத்திலும் ஏற்படக்கூடிய இயல்பு கடந்த நிலைமை களோடு தொடர்புடையது என்று உலக சுகாதார நிறுவனத்தின் கையேடு கூறுகிறது. வலிமை இழப்பு என்பது உடலுறுப்புகளின் அளவில் ஏற்படக்கூடிய தடைகளைப் பிரதி நிதித்துவப்படுத்துகிறது என்பதே அடிப்படை உண்மை.

திறன்குறைவு *(Disability)* என்பது ஒரு தனி நபரின் அன்றாடச் செயல்களின் நிறை வேற்றத்தில் வலிமை இழப்பினால் ஏற்படக் கூடிய விளைவுகளை குறிக்கிறது. ஆக, திறன் குறைபாடு என்பது ஒரு நபரளவில் ஏற்படக்கூடிய தடைகளையும், இடையூறு களையும் குறிப்பதாக இருக்கிறது. வாய்ப்பு குறைவான நிலை *(Handicap)* என்பது வலிமை இழப்பினாலும், திறன் குறைவாலும் ஒரு தனி நபர் அனுபவிக்கக்கூடிய பாதகங்களோடு தொடர்பு கொண்டதாக இருக்கிறது. ஒரு தனி நபர் தன்னை தகவமைத்துக்கொண்டு, தனது சூழலோடு இடைவினையாற்றுவதை குறிப்பதே வாய்ப்புக்குறைவான நிலை என்ப தாகும்.

## இந்தப் பிரச்னையின் பரவல்


கீழே தரப்பட்டுள்ள அட்டவனை *2001*, *2011*ஆம் ஆண்டுகளில் பெறப்பட்ட மக்கள் தொகைக் கணக்கெடுப்பு தரவுகளில் இருந்து உருவாக்கப்பட்டுள்ளது. இந்தியாவில் உள்ள ஆண், பெண் மாற்றுத்திறனாளிகளின் வசிப் பிடங்கள் பற்றியதாகும் இது. இந்தியாவின் ஊரகப் பகுதிகளிலும், நகர்ப்புறங்களிலும் மாற்றுத் திறனாளிகளின் எண்ணிக்கை அதிகரித்திருப்பதை இது தெளிவாகத் தெரி விக்கிறது. அட்டவணையின் இன்னொரு பகுதி, மாற்றுத்திறனாளிகளின் விகிதம் நகரங்களைக் காட்டிலும் கிராமங்களில் அதிகமாக இருப் பதைக் காட்டுகிறது. இருப்பினும், கடந்த *10* ஆண்டுகளில் நகர்ப்புறங்களில் மாற்றுத் திறனாளிகள் அதிகரிப்பதும் இதன்மூலம் தெரியவருகிறது. ஆண், பெண் இருபாலரிலும் மாற்றுத்திறனாளிகளின் எண்ணிக்கை லேசாக அதிகரிப்பதையும் அட்டவனை வெளிப் படுத்துகிறது. ஆண் மாற்றுத்திறனாளிகள் அதிக மாக இருக்கும் போதிலும், மாற்றுத் திறனாளி கள் பெண்களில் அதிகரித்து வருவதையும் இது விவரிக்கிறது.

## வலிமை இழப்பும் பண்பாடும்

பிரச்னைகளோடு வாழ்ந்துவருபவர்களை

**அருணிமா டே,** உதவி பேராசிரியர், வித்யாசாகர் சமூக பணி பள்ளி, வித்யாசாகர் பல்கலைக்கழகம், கொல்கத்தா.

**இந்தியாவின் ஒட்டுமொத்த மக்கள் தொகையில் மாற்றுத்திறனாளிகளின் எண்ணிக்கை விகிதம் 2001 – 2011.**




| | 2001 மாற்றுத்திறனாளிகள் | 2001 ஆண்கள் | 2001 பெண்கள் | 2011 மாற்றுத்திறனாளிகள் | 2011 ஆண்கள் | 2011 பெண்கள் |
|---|---|---|---|---|---|---|
| மொத்தம் | 2.13 | 2.37 | 1.87 | 2.21 | 2.41 | 2.01 |
| கிராமம் | 2.21 | 2.47 | 1.93 | 2.24 | 2.43 | 2.03 |
| நகரம் | 1.93 | 2.12 | 1.71 | 2.17 | 2.34 | 1.98 |

நாம் எப்படிப் பார்க்கிறோம் என்பதை வைத்து வலிமை இழப்பை *(Disability)* இன்னொரு வகையில் விவரிக்க முடியும். ஒரு மனிதன் எங்கே பிறந்திருந்தாலும் வலிமை இழப்பு என்பது ஒரு சவாலாகத்தான் வெளிப்படுத்தப்படுகிறது. இத்தகைய சவால் இந்தியாவைப் போன்ற வளரும் நாடுகளில் வாழ்பவர்களுக்கு பெரிதாகி விடுகிறது. இத்தகைய மனிதர்களுக்கும் இவர்களுக்கு தொண்டு புரிவோருக்கும் பண்பாட்டுப் பின்புலத்தைப் புரிந்துகொள்வதும், பொருத்த மான ஒரு பண்பாட்டு மாதிரியைப் பின் பற்றுவதும் மிக முக்கியமான அங்கமாக இருக்கிறது. ஒரே மாதிரியான மதிப்பீடு களையும், பார்வைகளையும் கொண்ட வர்களாக இருப்பது இருவரின் செயல் களையும் எளிதாக்கும். நமது கண்டுணர்தல் மீதும் பார்வை மீதும் செல்வாக்கு செலுத்துவது பண்பாடே ஆகும் (ஸ்டோன் 2005). மேலும் மனிதர்கள் சமூகத்தை எப்படிப் பார்க்கின்றனர் என்பதை அவர்களின் மொழி வெளிப்படுத்தும். சமூகத்தின் மனப்பான்மை மீது செல்வாக்கு செலுத்துவதுடன், தனி நபர்களின் வாழ்க்கையின் மீதும் இது தாக்கத்தை உருவாக்கும். ஆகவே வலிமை இழப்பு பற்றிப் பேசும்போது தனி கவனம் தேவை என்பது வலியுறுத்தப்படுகிறது. சில வெளிப்பாடுகள், அவற்றின் தன்மைகளின் அடிப்படையில் வலிமை இழந்த மனிதர்களை தரக்குறைவாகவும், மட்டப்படுத்தியும் காட்டு வதுடன் அவர்களைப் பற்றிய பொருத்தமற்ற, ஒரே மாதிரியான வார்ப்பட சிந்தனைகள் தொடர்ந்து நீடித்து நிலவவும் வழி செய்கிறது. 1995ஆம் ஆண்டின் மாற்றுத் திறனாளிகள் சட்டம் *(PwD Act 1995)* மனிதமாண்பையும், பெருமையையும் பாதுகாப்பதுடன் உடல் குறைபாடு உடையவர்கள், கற்றல் குறைபாடு உடையவர்கள், மன அழுத்தத்துடன் வாழ்பவர்கள் ஆகியோரை கௌரவத்துடன் குறிப்பிடவும் வகை செய்கிறது.

## தலையீட்டின் அவசியம்

பண்பாட்டின் தனித்துவமிக்க, தகுதி வாய்ந்த தன்மையை வெவ்வேறு கோணங் களில் ஆராய்ந்து பார்க்கும்போது வலிமை இழப்பிற்கு அது ஒரு ஆழமான பொருளைத் தருகிறது. வலிமை இழப்பை பொருத்தமாகவும், தகுந்த பொருளுடனும் புரிந்து கொள்வது சேவை அளிப்பவர்களுக்கு பயன்தருவதாக

இருக்கும். வலிமை இழந்திருப்பவர்களை பல் வேறு சூழல்களில் பல்வேறு சொற்களைப் பயன்படுத்தி சமூகம் முத்திரை குத்துகிறது. இதன் விளைவாக வலிமை இழப்போடு தொடர் புடைய களங்கம் ஒரு போதும் துடைத் தெறிய இயலாததாக இருந்து வருகிறது. ஒரு தனி நபரின் ஊனமுடைய தோற்றம் குடும்பத்தின் செயல்பாட்டில் எதிர்மறையான செல்வாக்கை செலுத்துகிறது. குடும்ப உறவுகளை பாதித்து மன சஞ்சலங்களையும், செயல்குலைவையும் உருவாக்கி பெற்றோருக்கும் தனிநபருக்கும் அல்லது மற்ற குடும்ப உறுப்பினர்களுக்குமான உறவு நிலையை பாதித்து விடுகிறது. இவற்றை யெல்லாம் கவனிக்கத் தவறினால் குடும்பம் ஒரு நிலையான சிக்கலில் சிக்கி விடும். இதனால் குடும்ப அமைப்பு சிதையவும், எதிர்மறையான குடும்பச் சூழல் உருவாகவும் நேரிடும். வலிமை குறைவாக இருப்பவரின் குடும்ப உறுப்பினர்களின் எதிர்பார்ப்புக் குறைவினால் குடும்பம் பொருளாதார, சமூக அந்தஸ்தி லிருந்து தாழ்வுறும். பெற்றோரின் கல்வியறிவு, அவர்களின் முன் அனுபவம் போன்றவை இத்தகைய சூழலை நெகிழ்வாக்குவதில் மிக முக்கியமான பங்களிப்பை செய்யும். வீட்டுக்கு வெளியில் உள்ள உறவினர்கள், நண்பர்கள், அண்டை அயலார், பொது வெளியில் உள்ள மனிதர்கள் போன்றோர் மாற்றுத்திறனாளிடம் நடந்துகொள்ளும் முறை இவர்களின் சமூக நடத்தையை ஒழுங்குபடுத்தும். இதில் எழக்கூடிய பலவிதமான சூழ்நிலைகளுக்கேற்ப தொழில்முறையாளர்களின் இடையீடு தேவையாகிறது. இத்தகைய பிரிவினருடன் பணியாற்றிவரும் சமூகப் பணியாளர்களின் பங்களிப்பு இதனால் மேம்படும்.

## வலிமைக்குறைவும் உதவி அளிப்போரும்

உடல் குறைபாடு உடையவர்களை கையாள் வது ஒரு சவாலான காரியம். இவர்களுக்கு துணையாக இருபவர்களை 2 வகையாக பிரிக்கலாம். 1. முதல் நிலை துணையாளர்கள், 2. இரண்டாம் நிலை துணையாளர்கள். முதல் பிரிவில் குடும்ப உறுப்பினர்களும் நண்பர் களும் அடங்குவர். இரண்டாம் பிரிவில் மருத்துவர்கள், செவிலியர், இன்ன பிற நெறி முறையாளர்கள் வருவர். இந்த வகையில் பண்பாட்டு அடிப்படையிலான மாதிரிச் செயல்பாடு ஆர்வம் தருவதாக உள்ளது. ஆராய்ச்சியாளர்கள் இந்த மாதிரி பற்றி கருத் துருவை பயன்படுத்துகின்றனர். நோயாளி யின் சமூகத்தில் உள்ள தொழில்முறை நலம் பேணுநர்கள் நலச்சேவைகள் கிடைக்கும் விதம் பற்றியும், அவற்றைப் பெற்றுக்கொள் ளும் வழிவகைகள் பற்றியும் பாதிக்கப்பட்ட வரிடம் விளக்குவதற்கு இது முக்கியமாக பயன்படுத்தப்படுகிறது. வலிமைக்குறைவு உடையவர்கள் மீது அக்கறை செலுத்தும் அமைப்பில் பணியாற்றும் சேவையாளர்கள் சிறந்த நடைமுறைகளைக் கையாளுவதை ஊக்குவிப்பதுடன், பண்பாட்டு விழுமியங் களை கைக்கொண்டு ஒழுகுவதையும் இந்த மாதிரி உறுதி செய்கிறது. மத இணைவுகள், கல்வி, ஊடகம், தொழில், வருவாய் போன் றவை மாற்றுத் திறனாளிகள் பற்றிய மக்களின் மனப்பான்மை, பார்வை, புரிதல் ஆகிய வற்றைப் பாதிக்கக்கூடிய காரணிகளாகும். உதவி புரிவோரை சமூகத்திற்கும் சேவைக்கும் இடைப்பட்ட ஒரு பாலமாக செயல்பட இது வழிசெய்கிறது. இதனால் அந்தத்த சமூகங்களுக்கு ஏற்ற பொருத்தமான தீர்வு களைத் தரக்கூடியதாக பண்பாட்டு மாதிரி அமைகிறது. பாதிக்கப்பட்டோரை குடும்பம், சமூகம் ஆகியவற்றோடு இணைத்திடவும் செய்கிறது. நம்பிக்கையையும் நல்லுறவையும் ஏற்படுத்தி இடையீட்டை திறம்பட செயல் படுத்தவும், தொடர்புகளை நீடிக்கச் செய்யவும் இது வழி செய்கிறது. சோட்னிக், ஜெஸிவஸ்கி ஆகிய இருவரும் குறிப்பிடுவதைப் போல இந்தப் பண்பாட்டு மாதிரியின் தனிக்கூறுகளாவன; ஆதரித்துப்பேசுவது, மத்தியஸ்தம், கலந்து பேசுவது, புதிதாகத் துவங்குவது, தலையீடு, கூர்உணர்வை உண்டாக்குவது என்பன. இந்த மாதிரியின் படி பணிபுரிபவர் இரு வகைப்பட்ட பங்களிப்புகளைச் செய்யும் பொறுமை உடையவராகவும், இடர்களை எதிர்கொள்ளும் துணிவு கொண்டவராகவும் இருக்க வேண்டும். விளிம்பு நிலையிலும் பணிபுரியக் கூடியவராக இருத்தல் வேண்டும். அனைத்திற்கும் மேலாக சிறப்பான தகவல் தொடர்பு ஆற்றல் உடையவராக இருக்க வேண்டும். வலிவு குறைந்தவர்களுக்கான சேவையில் ஈடுபடும் தொழில்முறையாளர்கள்

இவற்றில் கவனம் செலுத்தக் கூடியவர்களாக இருக்க வேண்டும்.

- மாற்றத்திற்கான ஓர் ஊக்கியாக செயல் படுவது
- மிகப்பரவலான ஆதரவுச் சேவைகளை வழங்குவது
- வலைமைக்குறைவுடையதனிநபர்களுடன் பணியாற்றும்படி குடும்பதினரையும், சமூகத்தையும் உற்சாகப்படுத்துவது
- வேறுபட்ட, விரும்பத்தகாகத சூழலை சந்தித்து மீள்வதற்கு தனிநபருக்கும், குடும்பத்தினருக்கும் உதவுவது
- வெளிப்படைத் தன்மையை ஊக்குவிப்பது
- இரு பக்கத்தினருக்கும் ஆதரவு காட்டுவது
- ஆதரவு தரும் ஆதார அமைப்புகளோடு குடும்பங்களை இணைப்பது
- உளவியல் ஆலோசனை வழங்குவது, மனநலத்தலையீடு, நடத்தைப் பிணி நீக்கல், எடுத்துக்கூறுதல், பயிற்றுவித்தல், பட்டறைகள், கருத்தரங்குகள், பொம்மைகள், புத்தகங்கள், நூலகம், மறுவாழ்வுக் கருவிகள், உதவிக் கருவி களை வழங்குவதன் மூலம் குடும்பத் தினரின் புரிதலையும், திறன்களையும் மேம்படுத்துவது. குறுகியகால, நீண்ட கால இடை ஓய்வு கவனம், சமூக உதவியும் துணையும், தகவல், கலந் தாய்வு, வழிகாட்டுதல், போக்குவரத்து தேவைகளை நிறைவு செய்வது. பாதிக் கப்பட்டிருக்கும் குடும்பங்களுக்கிடையே பரஸ்பர தொடர்பை உருவாக்குவது.
- கலாச்சார போட்டி நிலவும் சூழலை உருவாக்குவது.
- வலிவு குறைவுடைய தனி நபர்கள் ஒவ்வொருவரும் பங்கேற்கக் கூடிய வளர்ச்சியை ஆதரிப்பது.

இவற்றோடு கூட தனிநபர்களின் தேவை களுக்கு ஏற்ப ஆரம்ப நிலையிலேயே தரப் படக்கூடிய தொடர்ச்சியான பல்துறை பிணி நீக்கல் முயற்சிகள், தனி நபரின் வளர்ச்சி, முன்னேற்றம் ஆகியவற்றை ஆராய்ந்து அதற்கேற்றபடி மாற்றங்களை ஏற்படுத்தி வழங்கப்படும் நோய் நீக்கல் பயிற்சிகள், திட்டங்கள். பெற்றோரின் அறிவாற்றலையும், புரிதலையும் மேம்படுத்தக்கூடிய உளவியல் ஆதரவு, பாதிக்கப்பட்ட தனிநபரின் தேவையை உணர்ந்துகொண்டு செய்யப்படும் உதவி போன்றவையும் தொழில்முறை உதவுநர்களின் செயல்களாக அமைய வேண்டும். இந்தியாவில் நிலவக்கூடிய நிலைமைகளை கருத்தில் கொண்டு தங்கள் செயல்பாடுகளையும் பொறுப்புகளையும் மேம்படுத்துவது என்பதை விடவும், தவிர்ப்பது என்ற நிலையைச் சுற்றியே இங்குள்ளவர்கள் மையமிட்டுள்ளனர் (உஸ்கல் 2010). மாற்றுத்திறனாளிகளுக்கு உதவி என்பது குடும்பங்களின் உதவியையும் உள்ளடக்கியது. பாதிப்புக்கு உள்ளாகி இருப் பவர்களுக்கு மருத்துவ உதவி, சமூக ஆதா யங்கள், வீடு போன்றவை கிடைக்கவும் தனிப்பட்ட உதவிகள், மறுவாழ்வு உபக ரணங்கள் கிடைக்கவும், பணிபுரிய இயலாத வர்களுக்கு சமூக மறுவாழ்வு அமை யவும், மறுவாழ்விற்கான தொழில் பயிற்சி, தனிப்பட்ட உதவி, ஆதரவுக்கரம், சட்டப் பாதுகாப்பு, அர்த்தமுள்ள துடிப்புமிக்க ஓய்வு நேரச் செயல்பாடுகள், விளையாட்டு, பொழுதுபோக்கு போன்றவையும் பாதிக்கப் பட்டோருக்கு தேவையாகின்றன.

எனவே, இதில் ஈடுபடும் பணியாளர்கள் பாதிக்கப்பட்டவர்களின் பின்னலமைப்பை உருவாக்கும் திறன் கொண்டவராக, நெகிழ்வும் கற்றுக்கொள்ளும் ஆர்வமும், செயலாற்றும் சிந்தனையும் உடையவராக இருத்தல் அவசியம்.

திறன்குறைவு உடையவர்களை சக்தி உடையவர்களாக மாற்றுவதே முக்கியமான நோக்கமாக இருக்க வேண்டும். இதன் மூலம் சிறப்பான அணுகுமுறைதான் சிறந்தது, உயர்ந்தது என்பது இல்லை. சூழலைப் புரிந்துகொண்டு அவ்வப்போது எழக்கூடிய நிலைமைகளுக்கு ஏற்ப ஒருங்கிணைந்த அணுகு முறையை மேற்கொள்வதே சிறந்தது. இந்தத் தருணத்தில் தேவைப்படுவதும் அதுதான். ●

# மாற்றுத்திறன் மற்றும் நலனுக்கு அப்பால் சலுகைகளைப் பெறுதல்

– ஷிவானி குப்தா

**மா**ற்றுத்திறனாளி நபர்களை எல்லா விஷயங்களிலும் சேர்த்துக்கொள்வதற்கு, அவர்களுக்கு எல்லாவற்றிலும் எளிதாக அணுகும் நிலையை உருவாக்குவது அவசியம். மாற்றுத் திறனாளர்கள் சௌகரியமாகவும், தன்னிச்சையாகவும், பாதுகாப்பாகவும் சமூகத்தில் சேர்ந்து வாழ எளிதாக அணுகும்நிலை அவசியமானது. எளிதாக அணுகும் சூழல் பெருகப் பெருக, மாற்றுத் திறனாளரின் இடர்ப்பாடுகள் குறையும் என்ற எதிர் விகிதத்தில் இரண்டுக்கும் தொடர்பு இருக்கிறது. பொதுவாகவே எளிதாக அணுகும் நிலை என்பது எல்லாருக்குமே வேண்டிய உள்ளார்ந்த உரிமை எனலாம். மாற்றுத் திறனாளர் அல்லது முதியோர் போன்றவர்களுக்கு மட்டுமே தேவையானது அது என்ற சிந்தனைப் போக்கும் மாறவேண்டும்.

எனினும், எளிதாக அணுகும் நிலை என்பது மாற்றுத் திறனாளர் சுயேட்சையாக இயங்குவதில் தான் தோன்றியது. சுதந்திரமாக அவர்கள் இயங்குவதற்குத் தடைகள் இருக்கக் கூடாது என்பதற்காக, அவர்களுக்கும் ஏற்றவாறு எல்லா வடிவமைப்புகளும் மாற வேண்டும் என்ற சிந்தனை தோன்றியது. அனைவருக்குமான வடிவமைப்பு என்பது பாலினம், வயது வித்தியாசம், சமூக, பொருளாதார, பண்பாட்டு மாறுபாடுகளில் உள்ளவர்கள் என மனிதர்களிடையே உள்ள அனைத்து வேறுபாடுகளுக்கும் சமமான வகையில் பயன் தருவதாகவும் அவர்களை உள்ளடக்கிக் கொள்வதாகவும் இருக்க வேண்டும். மாற்றுத்திறனாளர் அல்லது ஒரு விசேஷ பிரிவினருக்கு என்று பிரத்யேகமாக வடிவமைப்பதை உருவாக்குவது என்று அடிப்படையிலேயே மாற்றம் ஏற்படுவதுதான் அனைவருக்குமான வடிவமைப்பு எனலாம். எனவே கட்டிடங்கள் முதற்கொண்டு, தொழில்நுட்ப சாதனங்கள் வரை அனைத்துமே, எவ்விதமான தனியான மாற்றங்களும் இல்லாமல், பாதுகாப்பாகவும் தன்னிச்சையாகவும் பயன்படுத்தத் தக்கதாக இருக்க வேண்டும். இவ்வாறு எல்லாருக்குமானதாக எல்லா வடிவமைப்புகளும் மாறிவிடுவதால், மாற்றுத்திறனாளருக்கு என விசேஷ வடிவமைப்புகளுக்கு ஆகும் அதிகப்படியான செலவுகள் ஏதும் இல்லாமல் போய்விடும்.

உலக அளவில் ஐக்கிய நாடுகள் அமைப்பின், மாற்றுத் திறனாளர்களுக்கான வாய்ப்புகளைச் சமப்படுத்துவதற்கான நிலையான விதிகளின் படி (1983) வழிகாட்டி நெறிகள் உருவாக்கபட்டுள்ளன. அண்மையில் நடைபெற்ற மாற்றுத் திறனாளர் உரிமைகள் குறித்த மாநாட்டில், எளிதாக அணுகும் நிலை ஒரு பொதுக் கோட்பாடாக ஏற்றுக் கொள்ளப் பட்டது. தனி மனிதர்களின் இயக்கம் அல்லது நடமாட்டம் என்பதில் எளிதாக அணுகும் நிலைக்கான தேவைகள் முழுமையாகப் புரிந்து கொள்ளப்பட்டு, ஒவ்வொரு நாடும் தனது குடிமக்களுக்கு எளிதாக அணுகும் வசதிகளை உருவாக்கித் தரவேண்டும் என்று விதிக்கப்பட்டுள்ளது.

மாற்றுத் திறனாளர்களுக்கான ஆசிய–பசிபிக் பத்தாண்டு காலத்தில் (2013–2022), புறச்சூழலில் எளிதாக அணுகும் நிலை, பொதுப் போக்குவரத்தில் எளிதாக அணுகும் நிலை, தகவல் தொடர்பு மற்றும் தகவல் தொழில் நுட்பத் துறையில் எளிதாக அணுகும் நிலை ஆகியவற்றுக்கு முக்கியத்துவம் அளிக்கப் பட்டுள்ளது. ஐ.நாவின் இந்தப் பிரகடனத்தை ஏற்றுக் கொண்டுள்ள இந்தியா, எளிதாக அணுகும் இந்தியா இயக்கத்தைத் *(Accessible India Campaign)* தொடங்கி உள்ளது.

## எளிதாக அணுகும் இந்தியா இயக்கம்

மாற்றுத் திறனாளர்கள் சமமான வாய்ப்புகளை அணுகுவதற்கும், வாழ்வின்

---

**ஷிவானி குப்தா,** நிறுவனர், அக்ஸஸ் அபிலிடி.

அனைத்துத் தளங்களிலும் முழுமையாக பங்கேற்றுச் சுதந்திரமாக வாழவும் வழிசெய்து, அவர்களையும் உள்ளடக்கிய சமூகத்தை உருவாக்குவதற்காக, எளிதாக அணுகும் இந்தியா இயக்கம் தொடங்கப்பட்டுள்ளது. மத்திய அரசின் சமூகநீதி மற்றும் அதிகார மளிக்கும் அமைச்சகத்தின் கீழ் செயல்படும் மாற்றுத் திறனாளர்களுக்கு அதிகாரம் அளிக்கும் துறையின் மூலமாக இந்த இயக்கம் தொடங்கப்பட்டுள்ளது. இந்த இயக்கத்தின்கீழ், இயக்கத்தைப் பற்றி முக்கியப் பிரமுகர்களின் விளம்பர வாசகம், பொதுமக்களிடையே விழிப்புணர்வு, பயிற்சிப் பட்டறைகள் மூலம் திறன்கள் உருவாக்குதல், புதிய தொழில் நுட்பங்கள், நிதி வளங்கள் மூலமாக எளிதாக அணுகும் வசதிகளை மேம்படுத்துதல் போன்றவை மேற்கொள்ளப்படும். மேலும், கார்ப்பரேட் நிறுவனங்களின் உதவியோடு, அரசு–தனியார் துறை பங்களிப்புத் திட்டத்தின் படியும் எளிதாக அணுகும் வசதிகள் ஏற்படுத்தப்படும்.

இந்திய வரலாற்றிலேயே முதன்முறையாக இப்போதுதான் எளிதாக அணுகும் நிலைக்கு இவ்வளவு முக்கியத்துவம் அளிக்கப்படுகிறது. நாடு முழுவதும் இதற்கு முழு மனதான வர வேற்பும் உள்ளது. எதிர்காலத்தில் எளிதாக அணுகும் சூழல் மேலும் பரவலாக இது ஒரு தொடக்கமே. இந்த இயக்கத்தின் உத்தி களில் முக்கியமானது எளிதாக அணுகும் நிலை பற்றி நாட்டு மக்களிடையே பரவ லாக விழிப்புணர்வை ஏற்படுத்துவதே. புறச் சூழல் அணுகுநிலை மட்டுமின்றி, எல்லா விஷயங்களிலும் அணுகுநிலை மேம்படுத்து வதாகவும் செயல்திட்டங்கள் இருப்பதும் குறிப்பிடத்தக்கதாகும்.

### சவால்கள்

- எனினும், எளிதாக அணுகும் வடிவமைப் பிற்கான குறைந்தபட்ச தர நிர்ணயம் பற்றிய தெளிவான வரையறை எதுவும் தற்போது இல்லை. கட்டுமானங்கள், போக்குவரத்து சாதனங்கள், தகவல் தொழில்நுட்ப சாதனங்கள் என எவற்றுக்குமே எவ்வித தரநிர்ணயமும் கிடையாது. இவற்றுக்கான தர அளவை உருவாக்கவும், சைகை மொழி விளம்பரங்களை உருவாக்கவும் இலக்கு நிர்ண யிக்கப்பட்டு இருந்தாலும், போக்குவரத்து சாதனங்களில் இவ்விஷயத்தில் வெற்றிடமே உள்ளது. கட்டுமானங்களுக்கு பல வழிகாட்டி நெறிகள் இருப்பினும், அவற்றில் எதுவுமே கட்டாயமாக்கப்படாததால் குழப்பங்களே மிஞ்சியுள்ளன.

- எளிதாக அணுகும் நிலைகளைத் தணிக்கை செய்ய வேண்டும் என இந்த இயக்கத்தில் வலியுறுத்தப்படுகிறது. ஆனால், அத்தகைய தணிக்கையாளர்கள் எவரும் இல்லாததும், அவர்களுக்குப் பயிற்சி அளிக்கும் வசதிகள் இல்லாததும் பெரும் குறைகளாகும்.

- எளிதாக அணுகும் இயக்கம் முற்றிலும் நகர்ப் பகுதிகளில் மட்டுமே கவனம் செலுத்து கிறது. கிராமப்புறங்களில் எளிதாக அணுகும் வசதிகளை ஏற்படுத்த இலக்குகள் எதுவும் நிர்ணயிக்கப்படவில்லை.

- எளிதாக அணுகும் இந்தியா இயக்கம், கட்டிடங்கள் ஆனாலும், பொதுப்போக்கு வரத்து ஆனாலும், இணைய தளங்கள் ஆனாலும், அரசாங்கத்திற்கு சொந்த மானவற்றில் மட்டுமே கவனம் செலுத்துகிறது. தனியார் துறையினர் இதன் எல்லைக்குள் கொண்டு வரப்படவில்லை. தனியார் அளிக்கும் சேவைகளை மேம்படுத்த அரசின் நிதியைச் செலவிடவேண்டிய நிர்பந்தம் எதுவும் அரசுக்கு இல்லை என்றாலும், தனியார் மூலமாக வழங்கப்படும் பொதுச் சேவைகளில், எளிதாக அணுகும் வசதியை உறுதிப்படுத்த அரசு தன் கண்காணிப்பினை மேற்கொள்ளலாம்.

- நகரத்திற்குள்ளேயும், நகரங்களுக்கு இடையேயும் போக்குவரத்திற்கு மக்கள் அதிக மாக பயன்படுத்துவது பேருந்துகளைத்தான். ஆனால், இந்தப் பேருந்துகளை மாற்றுத் திறனாளர் எளிதாக அணுகிப் பயன்படுத்துகிற நிலைமையை மேம்படுத்துவதற்கு எந்தவித கவனமும் செலுத்தப்படவில்லை.

- அரசுத்துறையின் கீழ்உள்ள கட்டமைப்பு களை ஏற்றவாறு மாற்றி, எளிதாக அணுகக் கூடியவையாக்கும் உத்தியே இப்போது பின்

பற்றப்படுகிறது. புதிதாக உருவாகின்ற கட்டடங்கள், போக்குவரத்து வசதிகள், தகவல் தொழில்நுட்ப சாதனங்கள் போன்றவற்றிலும் எளிதாக அணுகும் வசதிகள் ஏற்படுத்தப்பட வேண்டும்.

### எளிதாக அணுகும் இந்தியா இயக்கத்திற்கு அப்பாலும்

எளிதாக அணுகும் வசதி என்பது தற்போது மத்திய சமூகநீதி மற்றும் அதிகாரமளிக்கும் அமைச்சகத்தின் கீழே இருப்பதால், பொதுவாகவே அது மாற்றுத் திறனாளர்களுக்கான வசதிகள் என்றே பார்க்கப் படுகின்றன. ஆனால், இந்த விஷயத்தின்மூலம் பயன்பெறுபவர்களும் பலராக இருப்பதால் இவ்விஷயத்தில் கவனம் செலுத்தி நடவடிக்கை எடுக்கவேண்டிய துறைகளும் பலவாக உள்ளன. எனவே, எளிதாக அணுகும் வசதிகளை ஏற்படுத்துவது மற்றும் கண்காணிப்பதற்கு கீழ்க்கண்டவை தேவைப்படுகின்றன;

### சட்டத்திருத்தங்கள்

மாற்றுத்திறனாளர் உரிமைச்சட்டத்தைத் தவிர, எளிதாக அணுகும் உரிமையை ஓர் ஒருங்கிணைந்த உரிமையாக ஆக்குவதற்குப் பல சட்டங்களில் திருத்தங்கள் மேற்கொள்ளப் படுவது அவசியம். கட்டுமானச் சட்டங்கள், நகர்புற மற்றும் கிராமப்புற வளர்ச்சி பற்றிய கூட்டங்கள், சாலைப்போக்குவரத்து, ரயில் போக்குவரத்து, விமானப் போக்குவரத்து, கடற்போக்குவரத்து ஆகிய அனைத்தும் தொடர்பான சட்டங்கள், இணைய ஒழுங்கு முறை, ஒலிபரப்பு மற்றும் தொலைத் தொடர்பு நெறிமுறைகள், பேரிடர் மேலாண்மைச் சட்டங்கள், வீட்டுவசதிச் சட்டங்கள், கல்வி, சுகாதாரம், சுற்றுலா, விளையாட்டு, காவல், நீதித்துறை பண்பாடு உள்ளிட்ட பொதுச் சேவைகள் பற்றிய சட்டங்கள் ஆகியவற்றில், எளிதாக அணுகும் வசதி பற்றிய நிபந்தனைகளைச் சேர்க்க உரிய திருத்தங்கள் மேற்கொள்ளப்பட வேண்டும்.

கனடாவிலும் ஐரோப்பிய யூனியனில் சில நாடுகளிலும், எளிதாக அணுகும் வசதிகளுக்கான சட்டங்களினால் ஏற்படும் விளைவுகளை ஒருங்கிணைக்கும் ஏற்பாடுகளும் உள்ளன. பிலிப்பைன்ஸ் நாட்டில் 1983ஆம் ஆண்டு முதற்கொண்டே, மாற்றுத்திறனாளர்களின் சுதந்திரமான இயக்கத்திற்கு உதவும் நோக்கில், சில கட்டடங்கள், நிறுவனங்கள் பொதுச் சேவை மையங்கள் போன்றவற்றில் சில விஷேச வசதிகளை ஏற்படுத்த வகை செய்யும் சட்டம் அமலில் உள்ளது.

### அனுகூலமான சூழலை ஏற்படுத்துவது

- இந்திய சைகைமொழி நிறுவனம், அனைவருக்குமான மற்றும் அனைவரையும் உள்ளடக்கிய வடிவமைப்பிற்கான இந்திய நிறுவனம் ஆகிய இரண்டு பயிற்சி மற்றும் கல்விக்கான நிறுவனங்கள் விரைவிலேயே செயல்பட வேண்டும்.

- கட்டிடங்கள், போக்குவரத்து வாகனங்கள், போக்குவரத்து வாகன நிறுத்துமிடங்கள், மற்ற பொதுச் சேவை வசதிகள் அனைத்திற்கும் எளிதாக அணுகுவதற்கான வசதி பற்றிய குறைந்தபட்ச தேவைகளை வரையறுத்து அறிவிக்க வேண்டும்.

- கட்டிட அலங்காரக் கலை, பெரியியல், வடிவமைப்பு, கொள்முதல் நிர்வாகம் போன்ற படிப்புகளில், எளிதாக அணுகுதல் மற்றும் அனைவருக்குமான வடிவமைப்பு ஆகியவை கட்டாயப் பாடமாக்கப்பட வேண்டும். இதுதவிர, அனைவருக்குமான வடிவமைப்பு பற்றிய பிரத்யேகப்படிப்புகளும் உருவாக்கப்பட வேண்டும்.

- அரசாங்கத்தின் வளர்ச்சித்திட்டங்கள் யாவற்றிலும் மாற்றுத்திறனாளர்களுக்கான எளிதாக அணுகும் நிலை சேர்க்கப் படுவதை உறுதிசெய்ய வேண்டும். இதற்கான வழிகாட்டி நெறிகள் தரப் படுவதோடு தனியான நிதி ஒதுக்கீடு செய்து, எளிதாக அணுகும் நிலையை ஏற்படுத்தியுள்ள விதத்தை மதிப்பிடவும் வேண்டும்.

- புதிய கட்டிடங்களைப் பயன் பாட்டுக்குக் கொண்டு வருவதற்கு முன் தீத்தடுப்புப் பாதுகாப்பு போன்றவை உறுதி செய்யப்பட்டு சான்றிதழ் வழங்குவதுபோல, எளிதாக அணுகும் நிலை உள்ளது என்ற சான்றிதழ் பெறு வதையும் கட்டாயமாக்கலாம்.

## அரசாங்கக் கொள்முதல்:

மாற்றுத் திறனாளர்களுக்குப் பொதுத் தளங்களில் எளிதாக அணுகும் வசதியை, அரசாங்கத்தின் கொள்முதல் திட்டங்கள் மூலமாக அமெரிக்கா, ஐரோப்பிய யூனியன் போன்றவை சிறப்பாக செயல்படுத்தி வரு கின்றன. நம் நாட்டில், மொத்த உள்நாட்டு உற்பத்தியில் சுமார் 20% முதல் 30 சதவீதம் வரை இத்தகைய கொள்முதல்களுக்குச் செல விடப்படுவதாகத் தெரிகிறது.

தற்போது இந்தியாவில் உள்ள அரசுக் கொள்முதல் சட்டங்களும், கொள்முதல் பழக் கங்களும் எளிதாக அணுகும் விஷயத்தைக் கருத்தில் கொள்வதில்லை. பொதுக் கொள் முதல் திட்டங்களின் மூலம் வாங்கப்படும் பொருட்களின் அளவையும், அவற்றுக்காக அரசு செல்விடும் தொகையையும் கணக் கில் கொண்டு பார்த்தால், அவ்வாறு வாங்கப்படுகிற யாவும் எளிதாக அணுகும் தன்மை கொண்டிருப்பதை அரசு உறுதி செய்வது அவசியமாகிறது. கொள்முதல் கொள்கைகளில், எளிதாக அணுகும் கூறு முன் நிபந்தனை ஆக்கப்பட்டுவிட்டால், அனுகூல மான விளைவுகள் ஏற்படும். கொள்முதலில் மட்டுமின்றி, பொருள்களை உற்பத்தி செய் கின்ற நிறுவனங்களிலும் விளைவின் பயனைக் காணலாம்.

## தனியார் துறை சேவைகளில் எளிதாக அணுகும் வசதிகள்

பல்வேறு சேவைகள் வழங்குவதை வேக மாக அரசு தனியார் மயமாக்கி வருகிற சூழ்நிலையில், அவற்றுக்கும் இந்த எளிதாக அணுகும் வசதிகள் பொருந்தும் என அறி விப்பது முக்கியமானது. தற்போது, தனியார் துறையினரை எளிதாக அணுகும் வசதிகளை ஏற்படுத்தக் கட்டாயப்படுத்தும் சட்டங்கள் ஏதும் நம் நாட்டில் இல்லை. எனினும் சேவை வழங்குகின்ற தனியார் இந்தப் பொறுப்பைத் தாமே முன்வந்து ஏற்றுக் கொள்ளலாம். இதனை அரசு எவ்வாறு உறுதி செய்யலாம் என்பதற்கான சில பரிந்துரைகள்:

- எளிதாக அணுகும் முறையை உறுதிப் படுத்துவதாக அரசின் கொள்முதல் அமைப்பு கள் செயல்பட்டாலேயே, தனியாரும் அதைப் பின்பற்ற வழி ஏற்பட்டுவிடும். எவ்வாறு எனில், அரசாங்கத் துறைகளுக்காக வாங்கப்படும் மின்தூக்கிகள் (லிப்ட்) எளிதாக அணுகும் விதி களுக்கு உட்பட்டவையாக இருக்க வேண்டும் என்று தீர்மானித்துவிட்டால், மின் தூக்கி களைத் தயாரிக்கும் தனியார் நிறுவங்கள் எளிதாக அணுகும் வசதி கொண்டவற்றை மட்டுமே தயாரிக்கும். எனவே தனியார் கட்டிடங்களிலும் அத்தகைய மின்தூக்கிகளே செயல்பாட்டுக்கு வரும்.

- தனியார் துறையினர் வழங்கும் பொதுச் சேவைகளுக்கு அரசிடம் இருந்து உரிமம் பெற வேண்டும். உரிமம் வழங்கும்போதே எளிதாக அணுகும் வசதிகளைக் கட்டாயப்படுத்திவிட முடியும். எடுத்துக்காட்டாக ஒரு குறிப்பிட்ட வழித்தடத்தில் பேருந்துகளை இயக்க தனியார் உரிமம் கோரும்போது, அந்தப் பேருந்துகளில் எளிதாக அணுகும் வசதிகள் இருப்பதோடு, பேருந்துப் பணியாளர்களிடம், மாற்றுத் திறனாளர்களின் தேவைகளைப்புரிந்து செயல் படும் பயிற்சிகள் அளிக்க வேண்டியதையும் கட்டாயப்படுத்தலாம்.

- எளிதாக அணுகும் வசதியை உறுதிசெய்ய சான்றிதழ் வழங்கும் முறையைப் பின்பற்றலாம். எடுத்துக்காட்டாக, ஓட்டல்களுக்கு நட்சத்திர சான்றிதழ்களை சுற்றுலா அமைச்சகம் வழங்குகிறது. இதேபோல பொதுச் சேவைகள் அல்லது நிறுவனங்களுக்கு எளிதாக அணுகும் வசதி கொண்டவை என்பதைக் குறிக்கும் சான்றிதழ்களை வழங்கும் திட்டத்தைத் தொடங்கலாம். எளிதாக அணுகும் வசதி கொண்டவற்றுக்கு உயர்தரச்சான்று வழங்கு வதாக அறிவிக்கலாம். ●

# இஞ்சியோன் செயல்திட்டம்

இஞ்சியோன் செயல்திட்டம் என்பது அடுத்த 10 ஆண்டுகளில் மாற்றுத்திறனாளிகளுக்காக தடையற்ற சமுதாயத்தை உருவாக்குதல், அவர்களின் உரிமைகளை உறுதி செய்தல் ஆகியவற்றை ஏற்படுத்துவதற்கான ஆசிய – பசுபிக் பிராந்தியம் மற்றும் அகில உலகத்துக்கான செயல்திட்டமாகும். இந்த செயல்திட்டத்தில் மாற்றுத்திறனை உள்ளடக்கிய சில வளர்ச்சி இலக்குகள் உள்ளன. இந்த இலக்குகள் உலக வரலாற்றில் முதன்முறையாக பிராந்திய அளவில் ஒப்புக்கொள்ளப்பட்டிருக்கின்றன. தென் கொரியாவின் இன்சியோன் நகரில் 2012 ஆம் ஆண்டு அக்டோபர் மாதம் 29 ஆம் தேதி முதல் நவம்பர் 2 ஆம் தேதி வரை நடைபெற்ற ஐக்கிய நாடுகள் அமைப்பின் ஆசிய மற்றும் பசுபிக் பிராந்தியத்திற்கான பொருளாதார, சமூக ஆணையத்தின் உறுப்பு நாடுகளைச் சேர்ந்த அமைச்சர்கள் பங்கேற்ற கூட்டத்தில் இந்த செயல்திட்டம் ஒருமனதாக ஏற்றுக் கொள்ளப்பட்டது.

இஞ்சியோன் செயல்திட்டம் என்று இதற்கு பெயர் வந்ததற்கு காரணம் இந்த செயல்திட்டம் கொரிய நகரமான இன்சியோனில் நடைபெற்ற மாநாட்டில் ஏற்றுக்கொள்ளப்பட்டது தான். ஆசிய பசுபிக் பிராந்தியத்தில் மொத்தம் 65 கோடி பேர் மாற்றுத்திறனாளிகளாக உள்ளனர். இவர்களில் பெரும்பாலானோர் வறுமையில் வாழ்கின்றனர். இவர்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்துதல், உரிமைகளை முழுமையாக கிடைக்கச் செய்தல் ஆகியவற்றில் ஏற்படும் முன்னேற்றத்தை கண்காணிக்க இந்த இலக்குகள் உதவும். இந்த செயல்திட்டம் 2013 முதல் 2022 வரையிலான 10 ஆண்டுகளுக்கு செயல்படுத்தப்படும். இந்த செயல்திட்டத்தில் மொத்தம் 10 லட்சியங்கள் உள்ளன. இந்த 10 இலட்சியங்களில் 27 செயல்திட்ட இலக்குகள், முன்னேற்றத்தை மதிப்பிடுவதற்கான 62 அளவீட்டுக் காரணிகள் ஆகியவை அடங்கியுள்ளன. இன்சியோன் செயல்திட்டத்தின்படி அனைத்து அரசுகளும் அவர்களின் நாட்டில் உள்ள அனைத்து வகையான மாற்றுத்திறனாளிகள் குறித்த தகவல்களையும் திரட்டித்தர வேண்டும். அப்போது தான் அவர்களின் நலனுக்காக என்ன செய்ய வேண்டும் என்பதை திட்டமிட முடியும் என்பதால் இந்த தகவல்கள் கோரப்படுகின்றன.

இன்சியோன் மனித செயல்திட்டத்தின் முக்கிய நோக்கம் என்பது மாற்றுத்திறன் கொண்ட மனிதர்கள் மதிக்கப்பட வேண்டும்; அவர்களின் விருப்பத்தை தேர்ந்தெடுக்க அனுமதிக்கப்பட வேண்டும்; பாகுபாடு காட்டப்படக் கூடாது; மற்றவர்களைப் போலவே சமூகத்தின் அனைத்து செயல்பாடுகளிலும் பங்கேற்க அனுமதிக்கப்பட வேண்டும் ஆகியவை ஆகும்.

**இஞ்சியோன் செயல்திட்டத்தின் 10 லட்சியங்கள் பின்வருமாறு:**

1. வறுமை ஒழிப்பு, பணி மற்றும் வேலைவாய்ப்புகளை அதிகரித்தல், 2. அரசியல் நடைமுறைகள் மற்றும் முடிவெடுக்கும் நடைமுறைகளில் பங்கேற்பதை ஊக்குவித்தல், 3. இயல் சூழல், பொதுப்போக்குவரத்து, அறிவு, தகவல் மற்றும் தொலைத்தொடர்பு வசதிகளை அணுகுவதற்கான சூழலை அதிகரித்தல், 4. சமூகப் பாதுகாப்பை வலுப்படுத்துதல், 5. மாற்றுத்திறன் கொண்ட குழந்தைகளின் கல்வி மற்றும் மருத்துவத்தை முன்கூட்டியே தொடங்குவதற்கான வாய்ப்புகளை விரிவாக்குதல், 6. பாலின சமத்துவம் மற்றும் மகளிருக்கு அதிகாரமளிப்பதை உறுதி செய்தல், 7. மாற்றுத்திறனாளிகள் நலன் சார்ந்த பேரிடர் பாதிப்பு குறைப்பு மற்றும் மேலாண்மையை உறுதி செய்தல், 8. மாற்றுத்திறனாளிகள் தொடர்பான புள்ளி விவரங்களின் நம்பகத்தன்மை மற்றும் ஒப்பீட்டுத் தன்மையை மேம்படுத்துதல், 9. மாற்றுத்திறன் கொண்டவர்களின் உரிமைகள் தொடர்பான ஒப்பந்தத்திற்கு ஒப்புதல் அளித்து செயல்படுத்துவதையும், அதனடிப்படையில் தேசிய அளவில் சட்டங்கள் இயற்றப்படுவதையும் உறுதி செய்தல், 10. மண்டல, உள்மண்டலங்களுக்கு இடையிலான ஒத்துழைப்பை மேம்படுத்துதல் ஆகியவை தான் இஞ்சியோன் செயல்திட்டத்தின் 10 லட்சியங்கள் ஆகும். •